விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி


பக்கங்கள்: இருபது

Valampurii

சங்க 12 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 09 புதன்கிழமை (23.03.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 094

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# லிபியா மீதான தாக்குதலை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்த ஜனாதிபதி பணிப்பு



(கொழும்பு)

**லிபியாவுக்கு எதிரான படை நடவடிக்கையை ஆரம்பித்துள்ள அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா போன்ற மேற்குலக நாடுகளை கண்டித்தும், லிபிய ஜனாதிபதி கேணல் கடாபிக்கு ஆதரவாகவும் போராட்டங்களை நடத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.**

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தொழிற் சங்கத் தலைவரும் மேல்மாகாண ஆளுநரு மான அலவி மௌலான மற்றும் நாடாளு மன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் முத்த ஆலோசகருமான ஏ.எச்.எம்.அஸ்வர் ஆகி யோரை மையப்படுத்தி இப் போராட்டங்களை நடத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத் தரவு பிறப்பித்துள்ளார்.

அத்துடன் தொழிற்சங்கப் போராட்டம் என்ற ரீதியிலேயே இப் போராட்டங்களை நடத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியதாகவும் கூறப்படுகிறது.

லிபிய ஜனாதிபதி கேணல் கடாபி, ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய நண்பர் என்ற ரீதியிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு அரசி யல் வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

இதேவேளை லிபியா மீது மேற்கத்தைய நாடுகள் மேற்கொண்டுவரும் படை நடவடிக் கைகளுக்கு மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா கண்டனம் தெரிவித்துள்ளார். வேறொரு நாட்டின் மக்களின் உரிமைகளில் தலையிட வேறொருவருக்கும் அதிகாரம் கிடையாது என கொழும்பில் செய்தியாளர் ளிடம் குறிப்பிட்ட (20ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கந்தை புனர்வாழ்வு முகாமில் முன்னாள் போராளி மர்ம மரணம்

(கொழும்பு)

பொலநறுவை மாவட்டத்தின் வெலிக்கந் தை புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப் பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளி ஒருவர் மர்மமான முறையில் உயி ரிழந்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை யில் புனர்வாழ்வு பெற்றுவரும் இளைஞர்கள் தங்கியிருந்த அறையில் இருந்து அவர் நித் திரையில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டதாக படைத்தரப்பின் வட்டாரங்கள் தெரிவித்தன.

கிளிநொச்சியைச் சேர்ந்த 26 வயதான கந்தசாமி நடேசலிங்கம் என்ற போராளியே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

வெலிக்கந்தை பிரதேசத்தில் உள்ள திரு கோணமடு பகுதியில் உள்ள புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வு பெற்றுவந்த போரா ளியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரின் சடலம் பொலநறுவை வைத்திய சாலைக்கு (20ஆம் பக்கம் பார்க்க)

புத்தளம் நுரைச்சோலையில் நிர்மாணிக்கப்பட்ட அனல் மின் நிலையம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் ஆரம் பித்து வைக்கப்பட்டபோது...



## லிபிய விவகாரம்; சர்வதேச முரண்பாடுகள்

(நியூயோர்க்)

லிபியாவில் வான்தாக்குதல்கள் சர்வ தேசத்தில் கருத்து முரண்பாடுகளை ஏற் படுத்தி உள்ளது. லிபியாவில் மேற்குலக நாடுகள் முன்னெடுத்துவரும் இராணுவத் தலையீடு குறித்த ரஷ்யாவின் விமர்சனத் துக்கு பதிலளிக்கும் முயற்சியில் அமெரிக்கா இறங்கியிருக்கிறது.

இதற்காக அமெரிக்காவின் பாதுகாப் புச்செயலர் ரொபேர்ட் கேட்ஸ், மாஸ்கோ சென்று ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் அனட் டோலியன் ஸ்யோர்டியூக்கோப்பை சந்தித்து பேசியுள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

## வடக்குக் கிழக்கு மக்களின் பிரதிநிதிகளாக த.தே.கூட்டமைப்பை அரசு ஏற்கவேண்டும்

### அமைச்சர் வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப் பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஜனநாயக இடதுசாரி முன்னணி யின் தலைவரும் தேசிய மொழிகள் மற்றும் இனங்களுக்கிடையேயான நல்லுறவுகள் அமைச்சருமான வாசுதேவ நாயணக்கார கோரியுள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு தமிழ் மக்களின் ஆதரவு கிடைத்துள்ளமை தொடர்பாக கருத் துத் தெரிவித்தபோதே அமைச்சர் வாசுதேவ நாய ணக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ் விடயம் (20ஆம் பக்கம் பார்க்க)



## வல்வெட்டித்துறை மீனவர்கள் மூவர் இந்திய மீனவர்களால் சிறைப்பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி மீனவர்கள் மூவரை இந்திய மீன வர்கள் சிறைப்பிடித்துள்ளதாக வல்வெட்டித் துறை ஆதி கோவிலடி கடல்தொழிலாளர் கூட் டுறவுச் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று அதிகாலை மீன்பிடிப்பதற்காகச் சென்ற வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி கடல்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த நடராஜசுந்தரம் செந்தூரன் (வயது 24) பரமராஜசுந்தரன் கேசவரூபன் (வயது 21), பத்மநாதன் பத்மராஜ் (வயது 22) ஆகியோரே இவ்வாறு இந்திய மீனவர்களால் கைது செய்யப் பட்டுள்ளனர். அதிகாலை 5மணிக்கு மீன் பிடிக்க சென்ற இவர்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

## லண்டனில் இருந்து வந்த இளைஞர் யாழ்.நகரில் வைத்து கடத்தப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

லண்டனில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த இளைஞர் ஒருவர் பட்டப்பகலில் யாழ். நகரப் பகுதியில் வைத்து வெள்ளை வானில் கடத்தப்பட்டுள்ளார். யாழ். நகரில் ஸ்ரான்லி வீதியையும் மின்சார நிலைய வீதி யையும் இணைக்கும் இணைப்பு வீதியிலுள்ள வர்த்தக வங்கிக்கு முன்பாக பயணித்துக் கொண் டிருந்த வேளையிலேயே வெள்ளை வானில் வந்தவர்களால் இவர் கடத்தப்பட்டுள்ளார்.

சாவகச்சேரியைச் சேர்ந்த 29 வயது டைய கதிரவேலு அஜந்தன் என்பவரே கடத் தப்பட்டவராவார். செலிங்கோ நிறுவனத்தில் கடந்த 05 (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

## சிங்களஔ மொழிப் பயிற்சி

வட மாகாண மதுவரி உத்தியோகத்தர்களுக்கு சிங்கள மொழிப் பயிற்சி வழங்கப்பட்டு வருவதாக வட மாகாண உதவி மதுவரி ஆணையாளர் கிருப்ரி யோசப் தெரிவித்துள்ளார்.மொழிப் பிரச்சினை ஏற்படுவதை தவிர்க்கும் நோக்குடனேயே சிங்கள மொழிப் பயிற்சி வழங்கப்படுகிறது.

தென் பிராந்தியத்திலுள்ள மதுவரி உத்தியோகத்தர்களும் தமிழ் மொழியும் வட பிராந்திய உத்தியோகத்தர்களுக்கு சிங்கள மொழியும் கற்பிக்கப்பட்டு வருகிறது.

இந்த பயிற்சி நெறி கடந்த 20ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதோடு தொடர்ந்து இரண்டு வாரத்திற்கு இடம்பெறவுள்ளது.தமிழ், சிங்கள மொழிப் பயிற்சியில் அறுபது உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டுள்ளனர். (ந-6)

**வர்த்தகப் பெருமக்களே...**


பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290

# அரசியல் தீர்வுத்திட்டம் என்ன என்பதை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும்

## ரவி கருணாநாயக்க எம்.பி. கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு எத்தகைய அரசியல் தீர்வு திட்டம் முன்வைக்கப்படவுள்ளது என்பதை அரசாங்கம் தெளிவுபடுத்திக் கூறவேண்டுமென பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.



ஐக்கிய தேசிய கட்சியின் எதிர்கால வேலைத்திட்டங்கள் குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சிமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி சிறந்த முன்னேற்றத்தை கண்டுள்ள இந்நிலையில் தொடர்ந்தும் நாட்டு மக்களை தெளிவுபடுத்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வைக் குறைக்க அரசாங்கம் விரைவில் நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.வாழ்க்கைச் செலவு உயர்வினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவும் அரசாங்கம் முன்வரவேண்டும்.இது தொடர்பில் திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டும்.

மேலும் வடக்கு கிழக்கு மக்களுக்கான அரசியல் தீர்வை முன்வைப்பது குறித்தும் அரசாங்கம் கூடிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது.முக்கியமாக அரசியல் தீர்வுத்திட்டம் எவ்வாறு அமையப் போகின்றது என்பது தொடர்பில் அரசாங்கம் கருத்து வெளியிட வேண்டியது அவசியமாகும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் அரசாங்கம் நடத்துகின்ற பேச்சுவார்த்தைகளின் போது அரசியல் தீாவுத்திட்டம் குறித்து கலந்துரையாட வேண்டியது அவசியமாகும். ஆனால் இதுவரை நடைபெற்றுள்ள பேச்சுக்களில் அரசியல் தீர்வு விடயம் குறித்து பேசப்பட்டதா என்று தெரியவில்லை.

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் வாக்கு வங்கி உயர்வடைந்துள்ளது.அதனை மேலும் அதிகரிப்பதற்கு தேவையான வேலைத் திட்டங்களை நாங்கள் மேற்கொள்வோம்.மக்களை சிறந்த முறையில் ஐக்கிய தேசிய கட்சி தெளிவுபடுத்திக் கொண்டேயிருக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க குறிப்பிட்டார். (ந-5)

## லிபிய விவகார...

மேற்குலக நாடுகளின் படைகள் லிபியாவில் பொதுமக்களின் உயிரிழப்புக்களை தவிர்ப்பதற்காக பெரும் முயற்சிகள் எடுத்து வருவதாக அவர் அப்போது கூறியுள்ளார்.

மேலும் அடுத்த சில நாட்களில் லிபியாவில் நடக்கும் சண்டை கள் குறைந்துவிடும் என்று தாம் ரஷ்ய அமைச்சரிடம் கூறியதாகவும் கேட்ஸ் தெரிவித்துள்ளார்.

அதேசமயம் லிபியாவில் உடனடியாக போர்நிறுத்தம் ஏற்படுத்துவதே பொதுமக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கும் வழி என்று ஸ்யோர்டியூக்கோப் தெரிவித்தார்.

அமெரிக்க விமானம் விழுந்தது

இதேவேளை லிபியாவில் கேணல் கடாபியின் படைகள் பொது மக்கள் மீது தாக்குதல் நடத்துவதை தடுக்கும் சர்வதேச நடவடிக்கையின் போது அமெரிக்க போர் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த எஃப் 15போர் ஜெட்டின் உடைந்த பாகங்களைச் சுற்றி மக்கள் கூட்டம் காணப்படுவதை தொலைக்காட்சிப் படங்கள் காண்பித்தன.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அது வீழ்ந்ததாக அமெரிக்க இராணுவம் கூறுகிறது.

விமானத்திலிருந்து தப்பிக் குதித்த இரண்டு விமானிகளும் மீட்கப்பட்டுவிட்டனர். (ந-5)

**யாழ்ப்பாணம் மாநகர சபை ஆதனவரி அறிவித்தல் - 2011**

2011-ம் ஆண்டு முதலாம் கந்தாயத்திற்கான ஆதனவரியினை 2011.03.31 ஆந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு முன்பதாக எவ்வித தண்டமுமின்றி இவ்வலுவலகத்தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் செலுத்தப்படும் வரிப் பணத்திற்கு மேலதிகமாக கீழ்க்குறிப்பிடப்படும் விபரப்படி வெலியாற்றுப்பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் - 15 %
ஏனைய காணிகள் -20 %

நிலுவை உட்பட 2011ஆம் ஆண்டிற்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். குறித்த நிலுவைத் தொகுதியினைச் செலுத்தாத பட்சத்தில் மாநகர சபைக் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 252: பிரிவு XII 252 (I) இன்படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

காசோலையாகச் செலுத்துவோர் ‘மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்'' என எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி யோ.பற்குணராசா
முதல்வர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(C-2781)

## ஜோர்ஜ் வெப்ஸ்ரார் வெற்றிக்கிண்ணம்;
# அணிகள் தரவரிசையில் யாழ்.பல்கலை முதலிடம்

ஜோர்ஜ் வெப்ஸ்ரார் வெற்றிக் கிண்ணத்திற்கான யாழ்.சென்றல் விளையாட்டு கழகம் 2010ஆம் ஆண்டு முதல் சிறந்த கழக அணி தெரிவு நிகழ்வினை நடத்தி வருகின்றது.

2011ஆம் ஆண்டிற்கான இத் தெரிவில் கடந்த வாரம் வரை நடைபெற்ற 21போட்டிகளின் முடிபுகளின் அடிப்படையில் யாழ்.பல்கலைக்கழக அணி 20புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்திலும், கே.சீ.சீ.சீ. கழக அணி 13 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தி லும், ஸ்கந்தா ஸ்ரார் கழக அணி 10 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்திலும் உள்ளன.

ஜொலிஸ்ரார் கழக அணி 8புள்ளிகளைப் பெற்று 4ஆம் இடத்திலும், மானிப்பாய் பரீஸ் கழக அணி, சென்றலைட்ஸ் கழக அணி, யூனியன்ஸ் கழக அணி, சிறிகாமாட்சி கழக அணி, கிறஸ்கொப்பர்ஸ் கழக அணிகள் தலா 5 புள்ளிகளைப் பெற்று 5ஆம் இடத்திலும் உள்ளன.

இத் தரவரிசையில் கூடிய புள்ளிகளை பெறும் அணிக்கு யாழ்.நகரில் முதன் முதலில் துடுப்பாட்டத்தை அறிமுகப்படுத்திய ஜோர்ஜ் வெப்ஸ்ராரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணமும், ரூபாய் 10,000 பணப் பரிசும் வழங்கப்படும் என யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் அறிவித்துள்ளது.

2010-ம் ஆண்டு யாழ்.பல்கலைக்கழக அணி 44 புள்ளிகளை பெற்று முதலிடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## வல்வெட...

மாலை வரை வீடு திரும்பாமையால் இவர்கள் குறித்து தேடுதல் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

பின்னர் இந்தியாவிலிருந்து இந்திய மீனவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தாம் அவர்களை சிறைப்பிடித்து வைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளதுடன் சிறைப் பிடிக்கப்பட்ட ஒருவரை உறவினர்களுடன் பேசவைத்துள்ளனர். (ந-5)

**விற்பனையாளர் தேவை**

புடைவை நிலையத்திற்கு விற்பனையாளர் தேவை. அனுபவமுள்ள, பழக விரும்பும் பெண் பிள்ளைகள் நேரில் வரவும். 40-45 வயதுக்குட்பட்ட ஆண் ஒருவர் தேவை.சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கலாம்.

தொடர்புக்கு:
லைடன் புடவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.
T.P: 021 2222381
(சி-2778)

**PRINCESS OF WALES NURSING HOME**

132,Kokulam Kachcheri Nallur Road,Jaffna, Srilanka.
Phone- +94 (21)2226179, +94 (21)2226180
Email: princesshosp@gmail.com

- ★ சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் — தினமும் காலை 6.30
- ★ பொது சிகிச்சை வைத்திய நிபுணர் — தினமும் மாலை 5.00
- ★ மகப்பேற்று வைத்திய நிபுணர் — புதன் மதியம் 12.00
- ★ கண் சிகிச்சை வைத்திய நிபுணர் — புதன் மாலை 3.30, வெள்ளி மாலை 6.00
- ★ குழந்தை வைத்திய நிபுணர் — தினமும் மாலை 5.00
- ★ இருதய சிகிச்சை வைத்திய நிபுணர் — ஞாயிறு காலை 10.00, புதன் மாலை 5.00
- ★ காது, மூக்கு, தொண்டை வைத்திய நிபுணர் — சனி மாலை 5.00

இன்றிலிருந்து (23/03/2011) தாதியர் பயிற்சி 3.30 மணிக்கு ஆரம்பமாகின்றது.
(C-2783)

Eu Lanka Forum

**Vacancy**

கொழும்பிலுள்ள வெளிநாட்டு சட்ட நிறுவனம் ஒன்றிற்கு பெண் செயலாளர் தேவை.

எதிர்பார்க்கப்படும் தகுதிகள்:

- ★ 25-35 வயதுப்பிரிவுக்கு உட்பட்டவர்.
- ★ பட்டதாரி.
- ★ சரளமான ஆங்கில அறிவு- எழுத்து, வாசிப்பு, பேச்சு (குறிப்பாக கடிதங்கள் தயாரித்தல்)
- ★ சுமாரான கணனி அறிவு (MS Office)
- ★ தங்குமிட வசதியுடன் Rs.20,000/= வரை சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 15.04.2011

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
# No. 29, Palam Road, Kantharmadam, Jaffna.
அல்லது
# No. 27/1, Huluthagoda Road, Mount Lavinia, Colombo.
E-Mail : eulankafourm.ev@gmail.com
(C-2779)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 - ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

## இந்தியாவை வீழ்த்தும் வாய்ப்பு அவுஸ்திரேலிய அணிக்கு உள்ளது

### மைக்கெல் ஹசி கணிப்பு



உலகக்கிண்ண காலிறுதிப் போட்டியில் இந்திய அணியை விழ்த்த வாய்ப்பு இருப்பதாக அவுஸ்திரேலிய வீரர் மைக்கெல் ஹசி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பத்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் நாளை அகமதாபாத்தில் நடக்கவுள்ள 2 ஆவது காலிறுதியில் இந்திய அணி நடப்புச் சம்பியன் அவுஸ்திரேலியாவை சந்திக்கிறது.

இது குறித்து அவுஸ்திரேலிய அணியின் மூத்த வீரர் மைக்கெல் ஹசி கூறியதாவது,

இந்தியாவுக்கு எதிரான காலிறுதிப் போட்டியை மிகுந்த ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளேன். இப் போட்டி இரு அணியினருக்கும் முக்கியமான ஒன்று. இதில் வெற்றிபெற்றால் மட்டுமே அரையிறுதிக்கு முன்னேற முடியும். என்பதால் சவால் நிறைந்ததாக இருக்கும்.

இப் போட்டியில் எங்கள் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற அதிக வாய்ப்பு உள்ளதாகத் தெரிகிறது. சமீபத்தில் இந்தியாவில் நடந்த நிறைய போட்டிகளில் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றி உள்ளது. அகமதாபாத் ஆடுகளம் குறித்து எங்கள் அணி வீரர்கள் நன்கு அறிந்திருப்பதால் இதற்கேற்ப போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியும் என நம்புகின்றேன்.

இந்தியாவை வீழ்த்தும் பட்சத்தில் அவுஸ்திரேலிய அணி நிச்சயம் உலகக்கிண்ணத்தை வென்று சாதிக்கும்.

இப் போட்டியில் ஆரம்பம் முதல் இந்திய வீரர்களுக்கு நெருக்கடி கொடுக்க வேண்டும். அப்போதுதான் சுலப வெற்றிபெற முடியும்.

முதலில் துடுப்பாட்டம் செய்யும் பட்சத்தில் வலுவான இலக்கை பதிவு செய்து இந்திய வீரர்களுக்கு நெருக்கடி கொடுக்க முயற்சிப்போம். இந்திய வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் நல்ல போர்மில் உள்ளார். எனவே இவரது பந்து வீச்சை கவனமுடன் கையாள வேண்டும்.

எங்கள் அணித்தலைவர் பொன்டிங் லீக் சுற்றில் பெரிய அளவில் சாதிக்கவில்லை. இருப்பினும் இவர் மீது நம்பிக்கை உள்ளது. இவர் சரியான நேரத்தில் எழுச்சிகண்டு அணியின் வெற்றிக்கு முக்கிய பங்குவகிப்பார். இந்தியாவுக்கு எதிரான காலிறுதி அவருடைய போட்டியாக அமையும் என எதிர்பார்க்கிறேன். அணியின் வேகப்பந்துவீச்சு சிறப்பாக உள்ளது. எளிதில் விக்கெட் வீழ்த்தும் திறமை உள்ளதால் இந்திய அணியின் முதல் வரிசை துடுப்பாட்ட வீரர்களை விரைவில் வெளியேற்ற முயற்சிக்க வேண்டும்.

எங்கள் அணியின் முதல் வரிசை துடுப்பாட்ட வீரர்கள் சாதிக்கும் பட்சத்தில் வலுவான இலக்கை நிர்ணயிக்கலாம். விளையாடும் லெவின் அணியில் பெரிய அளவில் மாற்றம் இருக்க வாய்ப்பு இல்லை. இவ்வாறு மைக்கெல் ஹசி கூறினார்.

## காலிறுதியில் முழுக் கவனமும்

### அணித்தலைவர் அப்ரிடி கருத்து



(டாக்கா)

அரையிறுதி குறித்து சிந்திக்காமல், காலிறுதியில் வெற்றி பெற முழுக்கவனம் செலுத்தி வருவதாக, பாகிஸ்தான் அணித் தலைவர் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இந்திய துணைக் கண்டத்தில் நடக்கிறது. பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் உள்ள மிர்பூர் நகரில், இன்று நடக்கும். முதலாவது காலிறுதியில் பாகிஸ்தான், மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் மோதுகின்றன. இது குறித்து பாகிஸ்தான் அணித்தலைவர் அப்ரிடி கூறியதாவது,

தற்போது எங்கள் அணியின் கவனம் முழுவதும் இன்றைய காலிறுதிப் போட்டி மீது மட்டுமே உள்ளது. அரையிறுதி குறித்து இதுவரை யோசிக்கவில்லை. ஒரு வேளை இன்று மேற்கிந்தியத் தீவுகள் அணியை வீழ்த்தும் பட்சத்தில், அரையிறுதியில் இந்தியா அல்லது ஆவுஸ்திரேலியாவை எதிர்கொள்ள நேரிடும்.

இன்று சந்திக்க உள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணியை குறைத்து மதிப்பிடக் கூடாது. பொதுவாக ஒருநாள் போட்டியை பொறுத்தவரை, இன்றையதினம் சிறப்பாகச் செயற்படும் அணிக்கு வெற்றி வாய்ப்பு அதிகம்.

இது 'நொக் - அவுட்' சுற்று என்பதால், மிகுந்த கவனமுடன் விளையாட வேண்டும். தோல்வி அடையும் பட்சத்தில் தொடரில் இருந்து வெளியேற நேரிடும்.

லீக் சுற்றில் பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு பந்துவீச்சாளர்களே முக்கிய காரணமாக விளங்கினர். இருப்பினும் இனிவரும் போட்டிகளில் துடுப்பாட்டத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

ஏனெனில் அடுத்து எதிர்கொள்ள உள்ள ஒவ்வொரு அணிகளும் பலம் வாய்ந்தவை லீக் சுற்றில் எனது துடுப்பாட்டம் படு மந்த மாக இருந்தது. பந்து வீச்சில் விக்கெட் வீழ் த்தி வருவதால், இதுகுறித்து அதிக விமர்ச னங்கள் எழவில்லை என நினைக்கிறேன். எனவே துடுப்பாட்டத்தில் எழுச்சி பெற வேண்டிய கட்டாயத்தில் உள்ளேன்.

இதற்காக சிறப்பு பயிற்சி மேற்கொண்டுள்ளேன். இனி வரும் போட்டிகளில் துடுப்பாட்டத்தில் சாதிப்பேன் என நம்புகிறேன்.

யூனிஸ் கான், மிஸ்பா உள்ளிட்ட அனுபவ துடுப்பாட்டவீரர்கள் நடுவரிசையில் நம்பிக்கை அளிப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இவர்களது பொறுப்பான ஆட்டம் தொடரும் என எதிர்பார்க்கிறேன்.

முன்னதாக மிர்பூரில் நடந்த லீக் போட்டியில் மேற்கிந்திய அணி, பங்களாதேஷ் அணியை58 ஓட்டங்களுக்குள் சுருட்டியது. எனவே மேற்கிந்தியத்தீவுகளின் பந்துவீச்சை மிகுந்த கவனமுடன் எதிர்கொள்ள வேண்டும்.

பாகிஸ்தான் அணி வீரர்கள் ஒவ்வொருவரும் உலகக்கிண்ணத்தை வெல்வதற்காக கடுமையாக பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். இதற்கு நல்ல பலன் கிடைக்கும் என நம்புகிறேன். இவ்வாறு அப்ரிடி கூறினார்.


கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஓர் நற்செய்தி!

MCS இன் ஒரு மில்லியன் ரூபா பரிசை வெற்றிகொள்ள உங்களுக்கு அரிய சந்தர்ப்பம்

தினமும் 5 பேருக்கு
50ஆயிரம் ரூபா வீதம் 100 பேருக்கு
ஒரு மில்லியன் வெற்றிகொள்ளும் வாய்ப்பு
வலம்புரியில் கேட்கப்படும்
உலகக்கிண்ண கேள்விகளுக்கு
சரியான பதிலை அனுப்பி உங்கள் உயர்கல்வி வாய்ப்பை
பெற்றுக்கொள்ளுங்கள்

கூப்பனை வெல்பவர் அல்லது அவரால் வழங்கப்படும் ஒருவர் பின்வரும் கற்கை நெறிகளுக்கு இப் பரிசுக் கூப்பனை பயன்படுத்த முடியும்

1. கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பட்டக் கற்கை நெறி
2. சீமா (லண்டன்) CIMA_UK
3. மைக்கிரோசொப்ற் நிறுவன கணினிப் பொறியியலாளர் கற்கை நெறி
4. அடோப் நிறுவனத்தின் மல்ரிமீடியா கற்கை நெறி

இறுதிச் சுற்றுக்கு தெரிவாகும் அணிகள்

1. ..............................
2. ..............................

பெயர்: ..............................
முகவரி: ..............................
..............................
தொ.பே: ..............................
தே.அ.அ.இல: ..............................

சரியான விடையை எழுதி கூப்பனை பூரணப்படுத்தி 28.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர் ஒருவருக்கு ஒலிம்பியா ஸ்போட்ஸ் வழங்கும் பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.

அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

ஒலிம்பியா ஸ்போட்ஸ்
இல06,ஜும்மா பள்ளிவாசல் லேன்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 3490

இன்றைய கேள்வி ?

பத்தாவது உலகக்கிண்ணத் தொடரில் லீக் சுற்றுவரை அதிக ஆட்டநாயகன் விருது வென்ற வீரர் யார்?
..............................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 25.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு M.C.S வழங்கும் பரிசுக் கூப்பன்.

பெயர்:- ..............................
முகவரி:- ..............................
..............................
தொ.பே:- ..............................
தே.அ.அ.இல:- ..............................

அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

உலகக்கிண்ண கிரிக்கெட்-2011

சம்பியனாகும் நாடு?..............................
தொடர் நாயகன் விருது யாருக்கு?..............................
சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 28.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

ரசிகர்களின் வேண்டுகோளிற்கிணங்க உலகக்கிண்ண இறுதியாட்ட விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி ஒரு வார காலத்திற்கு நீடிப்புச் செய்யப் பட்டுள்ளது.

பெயர்..............................
முகவரி..............................
தொலைபேசி..............................
தே.அ.அ.இல..............................

'உலகக்கிண்ணம்'
வலம்புரி
இல.3, 2-ம் ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

இன்னும் பல பரிசுகள்

Midea Electro Mart
No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA.

ESPN
இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம்
52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

JAFFNA ELECTRICAL
94(6), Stanley Road, Jaffna.
Tel: 021 222 2353
Fax: 021 222 4302
E-mail:matheesan16@yahoo.com

SINGER-Manipay
Alady Junction, Manipay.
T.P.:021 225 5343
077 6139592

PCS PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD
305,Kasthuriyar Road,Jaffna.
T.P.021 2221101,021 2229644
email:- pcsjaffna@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்டார் சைக்கிள்-சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயம்

வல்லிபுரக் குறிச்சி ஆனைவிழுந்தான் பகுதியில் மோட்டார் சைக்கிள் - துவிச்சக்கர வண்டி மோதிய விபத்தில் இருவர் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

தும்பளைப் பகுதியிலிருந்து வந்த மோட்டார் சைக்கிளும் வல்லிபுரக் குறிச்சி பகுதியிலிருந்து வந்த துவிச்சக்கர வண்டியும் விபத்துக்குள்ளாகியுள்ளன.

இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நெல்லியடி வதிரியைச் சேர்ந்த யோகநாதன் றணதீபன் (வயது 21) என்ற இளைஞரும் துவிச்சக்கர வண்டியில் பயணித்த மணற்காட்டுப் பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் றதீஸ் (வயது 17) என்ற சிறுவனும் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

மேலதிக சிகிச்சைக்காக சுப்பிரமணியம் றதீஸ் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஸ்ரீ-3-24)

# கழகங்களுக்கிடையிலான கிரிக்கெற் சுற்றுப்போட்டி

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில் வடமராட்சிக்கு உட்பட்ட அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான அணிக்கு 5 ஓவர் 6 பேர் கொண்ட கிரிக்கெற் சுற்றுப்போட்டி எதிர்வரும் 26,27ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

வடமராட்சியிலுள்ள 44 கழகங்கள் பங்குபற்றும் இப்போட்டிகள் 4 பிரிவுகளாக நடைபெறவுள்ளன.

இதில் 'ஏ' பிரிவினருக்கான போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.30 மணிக்கும் 'பி' பிரிவினருக்கான போட்டி அன்றைய தினம் 12.30 மணிக்கும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை 'சி' பிரிவினருக்கான போட்டி காலை 7.30 மணிக்கும் 'டி' பிரிவினருக்கான போட்டி நண்பகல் 12.30 மணிக்கும் நடைபெறவுள்ளன.

போட்டி அட்டவணை அன்றைய தினம் மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் வைத்து தயாரிக்கப்படும் என்று மைக்கல் விளையாட்டுக் கழகத்தினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-3-24)

## பொதுமக்களின் நலன்கருதி

# நடமாடும் சுதேச மருத்துவமுகாம்

வடமராட்சி வடக்கு ஆயுள்வேத பாதுகாப்புச் சபையின் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களமும் யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகின் மருத்துவப் பிரிவினரும் இணைந்து நடாத்தும் நடமாடும் சுதேச மருத்துவ முகாம் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன், மருதங்கேணி பிரதேச செயலர் ந.திருலிங்கநாதன் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

இவ்விசேட வைத்திய முகாமில் யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகின் விரிவுரையாளர்களான வைத்திய கலாநிதி ரி.குமுதரஞ்சன், வைத்தியகலாநிதி எம்.சிறிகாந்தா, வைத்தியகலாநிதி எம்.சிறிதரன் மற்றும் சுதேச மருத்துவத் திணைக்கள அதிகாரிகளான வைத்தியகலாநிதி ரி.விஜயகுமார், வைத்தியகலாநிதி சி.சறோஜினி ஆகியோருடன் பாதுகாப்புச் சபையின் சார்பில் வைத்தியகலாநிதி க.க.யோகநாதன் உட்பட பல வைத்தியர்கள் கலந்துகொண்டு சிகிச்சைகளை வழங்கவுள்ளனர்.

இம்மருத்துவ முகாம் மாதமொரு தடவை தொடர்ச்சியாக நடைபெறுவதற்கு சுதேச மருத்துவ பணிப்பாளரும் பாதுகாப்புச் சபையினரும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இம்முகாமில் வாதம், சுவாசம், சருமம், முறிவு, நெரிவு, பொது வைத்தியம் போன்ற சிகிச்சைகளும் ஆலோசனைகளும் இலவசமாக வழங்கப்படும்.

வடமராட்சி கிழக்கு மக்களை இதில் பங்குபற்றி பயனடையுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-19)

யாழ்.செய்திகள்

# சைக்கிளில் சமாந்தரமாக சென்ற இருவருக்கு அபராதம்

பொதுப்போக்குவரத்துக்கு இடைஞ்சலாகப் பிரதான வீதியில் சமாந்தரமாகத் துவிச்சக்கரவண்டிகளில் பயணம் செய்த இரு நபர்களை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்து நேற்றைய தினம் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகம் கணேசராசா தலா ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்ததுடன் செலுத்தத் தவறின் ஒரு மாதகால சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3-29)

# கசிப்பு வைத்திருந்த நபர்களுக்கு அபராதம்

கொடிகாமம் எருவன் பகுதியில் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

மேற்படி வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகம் கணேசராசா குற்றத்தை ஒப்புக் கொள்ளாத காரணத்தால் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 2 ஆட்பிணையில் செல்ல அனுமதித்ததுடன் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதிக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

இரண்டாம் நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டமையாலும் முன்னரும் சில குற்றச்சாட்டுக்களில் குற்றம் சுமத்தப்பட்டிருப்பதாலும் கசிப்பு வைத்திருந்தமைக்கு 30 ஆயிரம் ரூபாவும் கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணங்களை வைத்திருந்தமைக்காக 30 ஆயிரம் ரூபாவும் மொத்தமாக 60 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். செலுத்தத்தவறின் 6 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3-29)

◆◆◆◆◆

(கரவெட்டி)

யாழ்ப்பாண மட வீதிப் பகுதியில் சட்டவிரோத கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண்ணொருவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்த யாழ்.நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தனது வீட்டில் வைத்து கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் யாழ்.பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட மேற்படி பெண் நேற்றைய தினம் யாழ்.நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் ஏ.பிறேமசங்கர் முன்னிலையில் மன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த பதில் நீதவான் குறித்த பெண் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3-24)

# அனுமதிப்பத்திரமின்றி மதுபானம் விற்ற நபருக்கு ரூ.5 ஆயிரம் அபராதம்

(கரவெட்டி)

அரசாங்க அங்கீகாரம் பெற்ற மதுபானத்தை அனுமதிப்பத்திரமின்றி விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் கந்தர்மடத்தை சேர்ந்த நபரொருவரை யாழ்.பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய நபரை நேற்றைய தினம் பொலிஸார் யாழ்.நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் ஏ.பிறேமசங்கர் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த பதில் நீதவான் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் 5 ஆயிரம் ரூபாய் அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (ஸ்ரீ-3-24)


# நடைபாதை செருப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட இருவருக்கு அபராதம்

(கரவெட்டி)

யாழ்.நகரப் பகுதியில் நடைபாதையில் செருப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட இருவரை யாழ்.பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர்கள் இருவரும் நேற்றைய தினம் யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் பதில் நீதவான் ஏ.பிறேமசங்கர் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த பதில் நீதவான் இரு நபர்களும் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு இருவருக்கும் தலா 2 ஆயிரம் ரூபாய் அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (ஸ்ரீ-3-24)




புனித பத்திரிசியார் கல்லூரியின் முத்தமிழ் விழா அண்மையில் கல்லூரியின் மத்தியூஸ் மண்டபத்தில் அதிபர் அருட்பணி ம.ஜெறோ செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தீவக வலயத் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருஞானம் ஜோன் குயின்ரஸ், அவரது பாரியார் திருமதி விஜித்தா ஜோன் குயின்ரஸ் ஆகியோர் வரவேற்கப்படுவதையும் பிரதம விருந்தினரின் பாரியார் மாணவனொருவனுக்குப் பரிசில் வழங்குவதனையும் கலை நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபிய விமானத் தாக்குதல்களுக்கு எதிராக சீனாவும் ரஷ்யாவும் வீட்டோவை பயன்படுத்த வேண்டும்

## அமைச்சர் விமல் வேண்டுகோள்



லிபிய மக்களை பாதுகாப்பது மேற்கு நாடுகளின் நோக்கமல்ல. மாறாக லிபியாவின் எண்ணெய் வளத்தை கொள்ளையடிப்பதே அந்நாடுகளின் நோக்கமாகும். அவலமான தலைவிதியை நோக்கி லிபியாவை இழுத்துச் செல்லும் இந்த சந்தர்ப்பத்தில் அதற்கெதிராக எழுந்து நிற்குமாறு ஐ.நா. பாதுகாப்பு சபையில் வீட்டோ அதிகாரம் இருக்கின்ற ரஷ்யா, சீனா உள்ளிட்ட சக்திகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் அனுமதி என்ற போர்வையில் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் லிபியா மீது நடத்தும் தாக்குதலை வன்மையாக கண்டிக்கின்றோம். இதனை லிபியாவுக்கு எதிராக செய்யப்படும் வெளிநாட்டு ஆக்கிரமிப்பாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

உலகத்தை அமைதியாக பேணுவதே ஐக்கிய நாடுகள் சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பாகும். எனினும் ஐ.நா.வின் தற்போதைய செயலாளர் நாயகம் பான் கீ மூன் என்ன செய்துள்ளார்? சமாதானத்தை பேணுவதற்கு பதிலாக யுத்தம் ஒன்றுக்காக ஊக்கமளித்துள்ளார். வெளிநாட்டு ஆக்கிர மிப்பு ஒன்றுக்கு உதவியுள்ளார்.

நாடொன்றில் உள்ளக பிரச்சினை ஏற்படும் போது அந்த நாட்டின் இறைமையை மதித்து அவர்களின் உள் பிரச்சினையை அங்குள்ள ஆட்சியாளர்களே தீர்ப்பதற்கு இடமளிப்பதே சர்வதேச சமூகம் முதலில் செய்ய வேண்டிய விடயமாகும்.

எனினும் லிபியாவில் நெருக்கடி ஏற்பட்டதிலிருந்து அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் லிபியாவில் ஜனநாயகம் இல்லை மனித உரிமை மீறப்படுகிறது. பொது மக்களை பாதுகாக்க லிபியாவை ஆக்கிரமிக்க வேண்டும் என்று கூறிக் கொண்டிருக்கின்றன.

லிபியா மீது வான் தாக்குதல் மேற்கொள்ள இந்த தந்திரமான பாதுகாப்பாளர்கள் ஐ.நா. பாதுகாப்பு சபையின் அனுமதியைப் பெற்றுக் கொண்டனர். எனினும் இந்த தந்திரமான பாதுகாப்பாளர்கள் வான் தாக்குதல்களில் பொதுமக்கள் எத்தனை பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

லிபிய மக்களை பாதுகாப்பது இந்த மேற்கு நாடுகளின் நோக்கமல்ல. லிபியாவின் எண்ணெய் வளத்தை கொள்ளையடிப்பதே அவர்களின் நோக்கமாகும். அதற்காக அமெரிக்கா இயக்கிய திரைப்படத்தில் பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட மேற்கு நாடுகளின் நடிகர்களின் நடிப்பு பங்களிப்பு இடம்பெற்றுள்ளது.

(ஸ்ரீ-2)

# கருத்தரங்கு


யாழ். கல்வி வலயத்தினால் சீமா கல்வியின் முன்னோடி கப்ஸ்ரன் நிறுவன அனுசரணையுடன் நல்லூர், யாழ்ப்பாணக் கோட்ட பாடசாலைகளில் கற்கும் க.பொ.த. உயர்தர கணக்கீடு, வணிகக் கல்வி பாட மாணவர்களுக்கான கருத்தரங்கு நாளை வியாழக்கிழமையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெறுமென யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# தடகளப் போட்டி

(கரவெட்டி)

பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான தடகளப் போட்டிகள் எதிர்வரும் 26, 27 ஆம் திகதிகளில் காலை 6 மணிக்கு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாக பருத்தித்துறை பிரதேச செயலாளர் இரா. வரதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-24)

# ஜப்பானுக்கு வருமாறு ரஜினிக்கு அந்நாட்டு பிரதமர் அழைப்பு



(சென்னை)

சுனாமியால் பாதிக்கப்பட்ட ஜப்பான் நாட்டுக்கு வருகை தரும்படி நடிகர் ரஜினிகாந்திற்கு அந்நாட்டு பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

ஜப்பானில் சுனாமியாலும் பூகம்பத்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டம் 'இந்தோ-ஜப்பான் சேம்பர் ஒப் கொமர்ஸ்' சார்பில் சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. கூட்டத்துக்கு அவ்வமைப்பின் தலைவர் வீரமணி தலைமை தாங்கினார். அஞ்சலி கூட்டத்தில் ரஜினிகாந்த் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில்,

"ஜப்பானிய மக்கள் எவ்வளவு பெரிய துன்பங்கள் வந்தாலும் அதிலிருந்து விரைவாக மீண்டெழுந்துவிடுவார்கள். கடினமாக உழைக்கின்ற மக்கள் அவர்கள்.

அந்த மக்களுக்கு இயற்கை தொடர்ந்து இன்னல்களைக் கொடுத்து வருகின்றது. எவ்வளவு இன்னல்கள் வந்தாலும் தியானம், பிரார்த்தனை மூலம் அவர்கள் மீண்டும் சகஜ நிலையை அடைந்து விடுவார்கள். அவர்களுக்காக இறைவனிடம் நான் பிரார்த்தனை செய்கின்றேன்.

ஜப்பானிய மக்கள் மிகவும் கட்டுக் கோப்பானவர்கள், கடமை தவறாதவர்கள். அங்கு சுனாமி வந்தபோது, ஒரு ரயிலில் ரிக்கெற் பரிசோதகர் சோதனை செய்து கொண்டிருந்தார். அப்போது அவர் பயணிகளிடம் நம் நாட்டை சுனாமி தாக்கியிருக்கிறது என்றாலும் நான் கடமையிலிருந்து தவறமாட்டேன் என்று கூறி தொடர்ந்து தனது கடமையைச் செய்திருக்கிறார்.

இன்னொரு இடத்தில் மக்கள் வரிசையாக நின்று பொருட்களை வாங்கிக் கொண்டிருந்தார்கள். சுனாமி தாக்கியதும் அவர்கள் சிதறிப் போனார்கள். சுனாமி அடங்கிய பின் மீண்டும் அவர்கள் அதே வரிசையில் நின்று பொருட்களை வாங்கியிருக்கிறார்கள். இது போன்ற கட்டுக்கோப்பும் கடமை உணர்வும் தான் ஜப்பானியர்களின் மிகச்சிறந்த குணம்.

ஜப்பானுக்கு வரும்படி என்னை அந்நாட்டின் பிரதமரும் சில முக்கியஸ்தர்களும் அழைத்திருக்கிறார்கள். ஜப்பானிய மக்கள் மீண்டும் சகஜ நிலையை அடைவதற்காக நான் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்" என்று அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## சூரியன் பூமிக்கு மிக அருகில்!

# சூரியக்கதிர்கள் நேரடியாக பதிவதால் அதிஉஷ்ண காலநிலை

(கொழும்பு)

சூரியன் பூமியை அண்மித்துள்ளதாலும் சூரியக்கதிர்கள் நேரடியாகப் பூமிக்கு வந்து சேர்வதாலும் அதிக உஷ்ண காலநிலை ஏற்பட்டிருப்பதாக வானிலை அவதான நிலையத்தின் வானிலையாளர் சமிந்திர டி சில்வா தெரிவித்துள்ளார்.

வானில் மேகத்திரள் குறைவடைந்துள்ளதால் சூரியக்கதிர்கள் நேரடியாகப் பூமிக்கு வந்து சேர்கின்றன.

மேலும் காற்றின் வேகமும் வளிமண்டலத்திலுள்ள ஈரப்பதனும் குறைவடைந்துள்ளது.

நாட்டில் அதிக உஷ்ண காலநிலை ஏற்பட்டிருப்பதற்கு வெப்பநிலை அதிகரிப்பு காரணமல்லஎன்று அவர் குறிப்பிட்டார். வியர்வை ஆவியாகும் வீதமும் பெரிதும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

இதன் காரணமாக தற்போதைய அசௌகரிய காலநிலை ஏற்பட்டிருக்கின்றது. மற்றப் படி வெப்பநிலை அதிகரிப்புக்கு தற்போதைய அதிக உஷ்ண காலநிலை காரணமல்ல. இருப்பினும் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தின் முற்பகுதியில் சூரியன் இலங்கைக்கு நேராக உச்சம் கொடுக்கும் என்றார். (ஸ்ரீ-2)


"அறிவு ஒளிர சால்பு சிறக்க"

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்



செல்வி.துஷிதா மனோகரன்

அகில இலங்கை ஆங்கில மொழித்தின எழுத்தாக்கப் போட்டியில் (Creative Writing) முதலாமிடத்தினைப் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்த மாணவியை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

– கல்லூரிச் சமூகம் –





ரன் வன் உங்கள் தங்க நகைகளை இலவசமாக மீட்பதற்கு இப்பொழுது பொன்னான வாய்ப்பு!

மாதாந்தம் ரூ.10,000 வரை வெல்லுங்கள்

3 மாதங்களுக்கு ஒரு தடவை ரூ.100,000 வரை வெல்லுங்கள்

நிபந்தனைகளுக்கு உட்படும்

உங்கள் தங்க நகைகளுக்கு ஆகக் கூடிய கடனும் ஆகக் குறைந்த வட்டியும்!

24 K ரூ.34,500/=

மாதாந்த வட்டி 1.16%

(011) 2374100

யூனியன் வங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## தேநீர்

5ஆயிரம் வருடங்களுக்கு முன் சுஷன் – நங் என்ற அரசன் சீனாவை ஆட்சி செய்தார்.

அவருக்கு ஒரு பழக்கம் இருந்தது. அது என்ன வென்றால்... எப்பொழுதும் வெந்நீர்தான் குடிப்பார்.

ஒரு நாள் அவருக்காக அடுப்பில் தண்ணீர் கொதித்துக் கொண்டிருந்தது.

அந்தச் சமயத்தில் அடுப்புக்குமேல் வளர்ந்திருந்த ஏதோ ஒரு செடியிலிருந்து காய்ந்து சருகாகி போயிருந்த ஒரு இலை கொதிக்கும் நீரில் விழுந்து விட்டது. அதை யாரும் கவனிக்கவில்லை.

சிறிது நேரத்தில் அதிலிருந்து நல்ல மணம் வீச ஆரம்பித்தது.

வெந்நீர் குடித்த மன்னருக்கு அந்த வாசனை மிகவும் பிடித்துவிட்டது.

என்ன வென்று பார்த்தால் இலை கிடந்திருக்கிறது.

சரி... இனிமேல் இந்த இலையைப்போட்டு தண்ணீரைக் கொதிக்க விடுங்கள் என்று உத்தரவிட்டார்.

அந்த இலை என்னவென்று நினைக்கிறீர்கள்?

அதுதான் தேயிலை.

ஆசியாவில்தான் தேநீர் குடிக்கும் பழக்கம் முதன் முதலில் ஆரம்பமானது.

அதன்பின் பல காலம் கழித்து 1610 இல்தான் அது ஐரோப்பாவில் பழக்கத்துக்கு வந்தது.

அப்போதெல்லாம் தேயிலை உற்பத்தி அதிகமாக இல்லை. அதனால் தேநீர் என்பது வசதியானவர்களின் வீட்டில் மட்டும்தான் கிடைக்கும்.

இன்றைக்கு தண்ணீருக்கு அடுத்ததாக உலகம் முழுவதும் அதிகமாகப் பருகப்படும் பானம் தேநீர் தான்.

ஒரு காலத்தில் ரஷ்யாவின் தெருவில் தேநீர் வண்டி வருகிறது என்றால் மக்கள் ஓடி வந்து கூடிவிடுவார்களாம். அந்தக்காலத்தில் எல்லாம் அவுஸ்திரேலியாவில் ஒரு பழக்கம் உண்டு.

அதாவது காலையில் வேலைக்குப் போகமுன் தண்ணீரைக் கொதிக்க வைத்து அதில் சில தேயிலைகளைப் போட்டு விட்டு போய்விடுவார்களாம்.

மாலையில் திரும்பிவந்து அதை எடுத்து பருகுவார்களாம். தேநீர் ஐரோப்பாவில் பழக்கத்துக்கு வந்ததும் ஒரு பிரெஞ்சுஅறிஞன், ‘‘இது இந்த நூற்றாண்டை ஆளவந்திருக்கும் புது எஜமான்’’ என்றானாம் 1650இல்தான் பிரித்தானியர்களுக்கு தேநீர் பழக்கத்துக்கு வந்தது.

அமெரிக்காவிற்கு விடுதலை வாங்கிக்கொடுத்தது யார் என்று நினைக்கிறீர்கள்?

தேநீர் தான்.

அது எப்படித் தெரியுமா?

“பாஸ்டன் ரீ பார்ட்டி” என்ற வார்த்தை அங்கு மிகவும் பிரபலம்.

திடீரென தேயிலைக்கான வரியை அதிகரித்து 342 பெட்டிதேயிலையை அமெரிக்காவிற்கு அனுப்பியது இங்கிலாந்து. தேயிலை மீதான வரியை பொறுக்காத அமெரிக்கர்கள் 1773 டிசெம்பர் 16 ஆம் திகதி பிரிட்டிஸ் கப்பலில் இருந்த 342 தேயிலைப் பெட்டிகளையும் தூக்கி பாஸ்டன் ஹார்பர் துறைமுக கடலில் வீசி விட்டார்கள்.

காலனி விடுதலைப்போருக்கு இதுதான் ஆரம்பம்.

இப்படித் தேநீரைப்பற்றி சுவையான செய்திகள் பல உண்டு. இந்தக் காலத்தில் யாருடைய வீட்டுக்குப் போனாலும் உடனே கிடைப்பது தேநீர். அதற்காகவே நண்பர்களின் வீட்டுக்கு போகிறவர்கள் உண்டு.

ஒருத்தர் தனது நண்பருடைய வீட்டுக்குப்போயிருந்தார். உடனே அவர் ஒரு பெரிய கோப்பையில் இவருக்கு தேநீர் கொடுத்தார். அதை இவர் வாங்கிக் குடித்தார்.

அவ்வளவுதான் அங்கே கட்டியிருந்த நாய் குரைக்க ஆரம்பித்து விட்டது.

‘‘உங்களுடைய நாய் ஏன் குரைக்கிறது?’’ என்று கேட்டார் இவர்.

இதற்கு அவர் சொன்னார்:

‘‘இந்த நாய்க் குட்டி எப்பொழுதும் இப்படித்தான். தன்னுடைய பாத்திரத்தில் வேறு யார் எதைக்குடித்தாலும் இப்படித்தான் குரைக்குது’’ என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# க.பொ.த சாதாரணதர பரீட்சை பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

*யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்*

சி.ரேக்கா(2ஏ,3பி, 2சி, 2எஸ்), சோ.லஜித்தா(2ஏ,2பி,4சி), பி.துஸ்யந்தன்(ஏ,3பி,4சி,எஸ்), மா.சிவகௌரி(ஏ,2சி,3எஸ்) ஜெ.ஜான்சன் (ஏ,3சி,4எஸ்),

*யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்*

ம.மனோதாஸ்(6ஏ,பி,சி), த.குபேரன்(5ஏ,2பி,சி), சி.நீலவண்ணன்(3ஏ,2பி,3சி,எஸ்), ஜெ.ஜெயதீபன்(3ஏ,2பி,2சி),அ.கார்தீபன் (3ஏ,பி,2சி,எஸ்) வி.பிரதீபன் (2ஏ, 4பி,2சி), ஈ.சாந்தரூபன் (2ஏ,பி,4சி,2எஸ்), வவிமலன்(2ஏ,பி, 4சி,எஸ்), ப.சசிகரன் (2ஏ,பி,3சி,எஸ்), ஜே.சுயேந்திரன்(ஏ,4பி, சி, எஸ்), ஜெ.செ நீதீசன் (ஏ,2பி,2சி,எஸ்), அ.டினுசன்(ஏ,பி,3சி,2எஸ்), ஆபாலபவான் (ஏ,4சி,3 எஸ்), ச.நிறோஜன் (ஏ,4சி, 3எஸ்), வீ.றிதர்சன் (ஏ,4சி, 2எஸ்),

*யா/செங்குந்தா இந்துக் கல்லூரி*

இ.தர்சிகா (7ஏ, பி, சி), த.சுவேதா(4ஏ,பி,3சி), நீ.நிரோஜன் (3ஏ3 பி,2சி,எஸ்), இ.யனுசா (3ஏ,2பி ,4சி), ச.லலீசன் (2ஏ,5பி,சி,எஸ்), மொ.ஜனவியா (2ஏ,2பி,2சி, 2எஸ்) மு.சசி ரேகா(2ஏ, பி,4சி, எஸ்),

*யா/அச்சுவேலி இடைக்காடு மகாவித்தியாலயம்*

ஆங்கில மொழி மூலம்

து.குகமாறன்(6ஏ, 2பி, சி), ம.வரதாஞ்சினி(5ஏ,2பி,2சி), த.தமிரா(4ஏ,4பி,சி)

தமிழ் மொழி மூலம்

க.அபர்ணா(6ஏ,2பி,சி), த.இலக்சன்(3ஏ,2பி,3சி, எஸ்) (ஸ்ரீ–3)

# அதிபர்களுக்கான செயலமர்வு

யாழ்.வலய பாடசாலை அதிபர்களுக்கான வாண்மை விருத்தி செயலமர்வு நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

எனவே, யாழ்.வலய பாடசாலை அதிபர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.வலயக்கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளர். (ஸ்ரீ–2)

# பலசரக்குக் கடை உடைக்கப் பட்டு பெறுமதியான பொருட்கள் கொள்ளை

(வட்டுக்கோட்டை)

சித்தங்கேணிச் சந்தியில் இருந்து சங்கானை நோக்கி செல்லும் வீதியில் அமைந்துள்ள பலசரக்கு கடையில் நேற்று முன்தினம் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, குறித்த கடையை உடைத்து நேற்றுமுன்தினம் உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்து 30 ஆயிரம்ரூபா பெறுமதியான அங்கர் பால் மாபைக்கட்டுகள், குளிர்பானவகைகள், மீள் நிரப்பு அட்டைகள் மற்றும் பெறுமதியான பொருட்கள் என்பவற்றை களவாடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிசாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

குறித்த கடை அண்மையில் கான் புதிதாக திறந்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ–2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50-60 | 90 | 90 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 150 | 120 | 150 |
| தக்காளி | 60 | 100 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 50 |
| கோவா | 80 | 80 | 80 |
| கரட் | 150 | 200 | 140 |
| பூசணி | 50 | 70 | 60 |
| புடோல் | 60 | 80 | 60 |
| வாழைக்காய் | 40 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 60-100 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 | 60 |
| பாகற்காய் | 120 | 60 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 70 | 100 |
| கருணைக் கிழங்கு | - | 80 | - |
| பயற்றங்காய் | 70 | 120 | 160 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 60 |
| கறிமிளகாய் | 150 | 160 | 150 |
| முருங்கைக்காய் | 300 | 600 | 500 |
| போஞ்சி | 120 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 50 |
| கீரை – 1 பிடி | 5-10 | 20 | 20 |
| தேசிக்காய் | 30-60 | 40 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 50 |

# கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் சர்வமத ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைந்த சமூக வெளிபாட்டின் ஊடாக மனித நேயத்தை சாத்தியமாக்கல் தொடர்பான கூட்டம் எதிர்வரும்26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரியகுளம் வீதி யிலுள்ள நாகவிகாரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது (ஸ்ரீ–3–51)

# இராசி பலன்

*23.03.2011*
*(பங்குனி 09,புதன்கிழமை)*
***சூரிய உதயம் காலை 6.14 மணிக்கு***
***சதுர்த்தி பிற்பகல் 3.40 மணிவரை***
***விசாகம் பின்னிரவு 3.29 மணிவரை***
***இராகுகாலம் 12.16-1.46 மணிவரை***
***சுப நேரம் 4.46-6.16 மணிவரை***
*சங்கடகர சதுர்த்தி விரதம்*
*சித்தாமிர்தம்*

**மேடம்** வாழ்க்கைத்துணைவழியே மகிழ்ச்சிக்குரிய செய்தி ஒன்று வந்து சேரும், குடும்பத்துடன் குதூகலப்பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம்மேலோங்கும்.

**இடபம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், தொலைபேசி வழித்த கவலால் மகிழ்ச்சி காண்பீர்கள், உதிரிவருமானங்கள் வந்து சேரும், தொழில்சம்பந்தமாக முக்கிய முடிவெடுப்பீர்கள்.

**மிதுனம்** பிள்ளைகளுக்காக சில செலவுகளை எதிர்கொள்ளநேரிடும், மாமன், மைத்துனர்வழியில் இனிய செய்தி ஒன்று காத்திருக்கும், நல்லவர்கள் தொடர்பால் நலம்காணும் நாள்.

**கடகம்** பெற்றோரின் பாசமழையில் நனையும் நாள்,சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், வள்ளல்களின் உதவிகள் கிடைக்கலாம்.

**சிங்கம்** சிந்தித்து செயற்படவேண்டிய நாள்,கௌரவம், அந்தஸ்து உயரும், உறவினர் நண்பர்கள் வலிய வந்து உறவாடுவார்கள், பொருளாதாரநிலை திருப்திதரும்.

**கன்னி** இனிய செய்திகள் இல்லம்தேடி வரலாம், திறமைமிக்கவர்களின் ஒத்துழைப்பு தொழில் வளர்ச்சிக்கு உதவும், குடும்பத்தில் மங்கள நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும்.

**துலாம்** பயணத்தால் பலன்கிடைக்கும்,பணவரவுதிருப்திதரும், தொழில்ரீதியாக எடுத்தமுயற்சி வெற்றி தரும், கற்பனைகள் மிகுதியாகக் காணப்படும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** காரிய நலன்கருதி பயணங்கள் ஏற்படலாம், ஆடம்பரப் பொருட் சேர்க்கையுண்டு, சுபசெலவுகள் ஏற்படலாம், திருமணத்தடை அகலும்,

**தனுசு** கௌரவம், அந்தஸ்து உயரும் நாள், விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்துசேரலாம், பயணவாய்ப்புக்கள் கைகூடும், குடும்பசுகமுண்டு.



**மகரம்** எடுத்தகருமங்கள் கைகூடும், எதிர்பாராதவகையில் பெரியவர்களின் உதவிகள் கிடைக்கலாம், தூரத் தேச செய்திகள் வந்து சேரும், தொழில்முன்னேற்றமுண்டு.

**கும்பம்** தொலைபேசித்தகவல் மனக்குழப்பத்தை அகற்றும், அரைகுறையாக இருந்தபணிகளை மீண்டும் தொடர்வீர்கள், விருந்தினர் வருகையால் மகிழ்ச்சியுண்டு.

**மீனம்** பிறருடைய வேலையை நீங்கள் செய்யும் சூழ்நிலை அமையலாம், திடீர் செலவுகள் ஏற்படலாம், தேகாரோக்கியத்தில் கவனம் எடுக்க வேண்டியநாள், உங்கள் செயற்பாடுகளில் பிறர் குறைபிடிக்கலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/ ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் அதிபர் செ.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சி. பாலசுந்தரம் மங்கல விளக்கேற்றுவதையும் கலந்து கொண்ட மாணவர்களையும் ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-புன்னாலைக் கட்டுவன் செய்தியாளர்)

## அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள்

(கொழும்பு)

இம்முறை நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்ட பல முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்றுள்ளனர்.

இவர்கள் குறித்த உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களாக நியமிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பாணந்துறை மாநகர சபை தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் நந்தன குணதிலக்க அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்றுள்ளார்.

முன்னாள் பிரதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.ஏ.பாயில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக புத்தளம் நகர சபை தேர்தலில் போட்டியிட்டு 8 ஆயிரத்து 500 அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்றுள்ளார்.

இதேவேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எம். நௌஷாட் சம்மாந்துறை பிரதேச சபை தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக போட்டியிட்டு 15 ஆயிரத்து 190 அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்றுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக ஏறாவூர் நகர சபை தேர்தலில் போட்டியிட்டு 9 ஆயிரத்து 601 அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்றுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற எட்வேர்ட் குணசேகர ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக மினுவாங்கொடை பிரதேசசபை தேர்தலில் போட்டியிட்டு அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்றுள்ளார்.

எனினும் மினுவாங்கொடை பிரதேச சபை தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்துள்ளது.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்ட அனைத்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடந்த வருடம் ஏப்ரல் 8 ஆம் திகதி இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## சரத் பொன்சேகாவை பிரதித்தலைவராக நியமிக்க ரணில் விக்ரமசிங்க விருப்பம்

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் பதவிக்கு நியமிக்க ரணில் விக்ரமசிங்க விருப்பம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய செயற்குழு மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் தெரிவின் போது ரணிலின் அணியில் பொன்சேகாவை கட்சியின் பிரதித் தலைவர் பதவிக்கு நியமிக்க பிரேரிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பொறுப்புக்களை வகிப்பவர்கள் அனைவரும் வாக்களிப்பு மூலமாகத் தெரிவு செய்யப்படவுள்ள நிலையில் அதில் ரணில் தரப்பினர் வெற்றி பெறுவது உறுதியாகியுள்ளது.

அவ்வாறான, நிலையிலேயே கட்சியின் பிரதித் தலைவர் பதவிக்கு சரத் பொன்சேகாவை நியமிப்பது குறித்து ரணில் விக்ரமசிங்க விருப்பத்தை வெளியிட்டுள்ளார்.

ஆயினும், சரத் பொன்சேகாவோ அவரது ஜனநாயக தேசிய முன்னணி கட்சியின் முக்கியஸ்தர்களோ ஐக்கிய தேசியக் கட்சியின் முன்மொழிவு தொடர்பில் இதுவரை எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை. (ஸ்ரீ-2)

## புதிதாக தெரிவான பிரதேச சபை உறுப்பினருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

அண்மையில் நடைபெற்று முடிவடைந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் களனி பிரதேச சபைக்கு ஐ.ம.சு. முன்னணி சார்பில் போட்டியிட்டு புதிதாக தெரிவான பிரதேச சபை உறுப்பினரான சரத்சந்திர டயஸை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

சக வேட்பாளரின் 5 வயதான மகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு காயப்படுத்தினார் என்று மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நிலையிலேயே அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

தெரிவான உறுப்பினர்கள் பட்டியலில் இவர் கடைசி இடத்தைப் பெற்றதால் ஆத்திரமடைந்திருந்தார் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. (ஸ்ரீ-2)

## 2011.03 23 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1752- கனடாவின் முதலாவது பத்திரிகைத ஹலிஃப் பாக்ஸ் கசெட் வெளியிடப்பட்டது.

★ 1801- ரஷ்யாவின் முதலாம் பவுல் மன்னன் வாள் ஒன்றினால் வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டான்.

★ 1816- அமெரிக்க மதப் பிரசாரகர்கள் கொழும்பு வந்தடைந்தனர்.

★ 1848- நியூசிலாந்தின் டுனெடின் நகரில் முதலாவது தொகுதி ஸ்கொட்டிஷ் குடியேறிகள் தரையிறங்கினர்.

★ 1857- எலிஷா ஒட்டிஸ் முதலாவது உயர்த்தியை நியூயோர்க் நகரில் அமைத்தார்.

★ 1868- கலிபோர்னியா பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது.

★ 1903- ரைட் சகோதரர்கள் தமது வெற்றிகரமான முதலாவது வானூர்திக்கான காப்புரிமம் பெறுவதற்கு விண்ணப்பித்தனர்.

★ 1919- இத்தாலியின் மிலான் நகரில் முசோலினி தனது பாசிச அரசியல் இயக்கத்தை ஆரம்பித்தார்.

★ 1931- இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களான பகத்சிங், ராஜ்குரு, சுகதேவ் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர்.

★ 1933- ஹிட்லர் ஜேர்மனியின் சர்வாதிகாரியானது ரெய்க்ஸ்டாக்கினால் சட்டபூர்வமாக்கப்பட்டது.

★ 1940- முஸ்லிம் லீக், இந்தியாவை மத அடிப்படையில் பிரிக்கும் கோரிக்கையை வெளியிட்டது.

★ 1942- இரண்டாம் உலகப் போர்: இந்தியப் பெருங்கடலில், அந்தமான் தீவுகளை ஜப்பானியர் கைப்பற்றினர்.

★ 1956- பாகிஸ்தான் உலகின் முதல் இஸ்லாமியக் குடியரசாகியது.

★ 1965- ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது இரு விண்வெளிவீரர்களைக் கொண்ட நாசாவின் ஜெமினி 3 விண்கலம் ஏவப்பட்டது.

★ 1966- தனது முதல் கரந்தடி தாக்குதலில் சேகுவேராவின் அணி வெற்றிகரமாக பொலிவிய இராணுவப் பிரிவை தோற்கடித்தது.

★ 1982- கௌதமாலாவின் பெர்னாண்டோ கார்சியா தலைமையிலான அரசு இராணுவப் புரட்சி ஒன்றில் கவிழ்ந்தது.

★ 1994- சைபீரியாவில் ரஷ்ய ஏரோபுலொட் விமானம் ஒன்று வீழ்ந்ததில் 75 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1996- தாய்வானில் முதற்தடவையாக நேரடித் தேர்தல் இடம்பெற்று லீ டெங்- ஹூய் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

★ 1998-டைட்டானிக் திரைப்படம் 11 ஒஸ்கார் விருதுகளை வென்றது.

★ 2001- ரஷ்யாவின் மீர் விண்வெளி நிலையம் வளிமண்டலத்தில் வெடித்து பீஜியின் அருகில் தெற்கு பசுபிக் பெருங்கடலில் வீழ்ந்தது.

### பிறப்புக்கள்

★ 1858- லூட்விக் குயிட், நோபல் பரிசு பெற்றவர் (இ.1941)

★ 1881- ரொஜர் டு கார்ட் , நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் (இ. 1958)

★ 1881-ஹேர்மன் ஸ்டீடிஞ்சர் , நோபல் பரிசு பெற்றவர் (இ.1965)

★ 1893- ஜி.டி. நாயுடு , தமிழக விவசாய அறிவியலாளர்

★ 1907-டானியல் போவெட் , நோபல் பரிசு பெற்றவர் (இ.1992)

★ 1910-அகிரா குரோசாவா, ஜப்பானியத் திரைப்பட இயக்குநர் (இ. 1998)

★ 1916- ஹர்கிஷன் சிங் சுர்ஜித் , இந்திய மாக்சிய கம்யூனிசத் தலைவர் (இ.2008)


★ 1973- ஜேசன் கிட், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புக்கள்

★ 1931-பகத்சிங் , இந்திய சுதந்திரப் போராட்ட வீரன் (பி. 1907)

★ 1992- பிரீடெரிக் ஹயெக் , நோபல்பரிசு பெற்றவர் (பி. 1899)

**1964- யோகர் சுவாமிகள், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சித்தர் (பி. 1872)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்களின் படகுகளை திருடியதாக யாழ்.இளைஞர் கைது

(கொழும்பு)

தமிழக மீனவர்களின் படகுகளை திருடிய குற்றச்சாட்டின் பேரில் இலங்கை இளைஞர் ஒருவரை இந்திய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தனுஷ்கோடி பிரதேசத்தில்குறித்த நபர் இரண்டு படகுகளை களவாடியதாக தெரிவிக் கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ரவிநாத் என்ற இளைஞரே இவ்வாறு படகுகளை களவாடியுள்ளதாக தமிழகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

ரவிநாத் தமிழகத்தில் உத்தியோகபூர் வமாக புகலிடம் கோரவில்லை எனவும் எப்போது தமிழகத்தை சென்றடைந்தார் என்ற தகவல்கள் கிடையாது எனவும் தெரி விக்கப்படுகின்றது. கியூ பிரிவு பொலிஸார் குறித்த நபரிடம் விசாரணைகளை நடத்த வுள்ளதாக குறிப்பிடப்படுகிறது (ஸ்ரீ-2)

# கிளிநொச்சி மாவட்டத்தில் எஞ்சியுள்ள குடும்பங்களை மீள்குடியேற்ற நடவடிக்கை

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தில் எஞ்சியுள்ள குடும்பங்களை மீள் குடியேற்ற அரசாங்கம் துரித நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இந்த நடவடிக்கையின் போது சொந்தக் காணி இல்லாதவர்களுக்கு காணிகளை வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரி வித்துள்ளார்.

எஞ்சியுள்ள குடும்பங்கள் அனைத்தும் இன்னும் இரண்டு வாரங்களுக்குள் மீள் குடியேற்றப்படுமென்றும் அதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவ தாகவும் அவர் குறிப்பிட்டார்.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் கண் ணிவெடி அகற்றல் நடவடிக்கைகள் இடம் பெற்றதாலேயே அங்கு மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்படவில்லை தற்போது கண் ணிவெடி அகற்றப்பட்டுவிட்டமை தொடர்பான சான்றிதழ் கிடைத்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

# விருப்புவாக்குகளின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றப் பதவிகள்

விருப்பு வாக்குகளின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றப் பதவிகள் நிர்ணயிக் கப்படும் என ஆளும் கட்சி அறிவித்துள் ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கூடிய ஸ்ரீலங்கா சுதந் திரக்கட்சியின் மத்திய செயற்குழுக்கூட் டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள் ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் அதி கூடிய விருப்புவாக்குகளைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு பதவிகள் வழங் கப்படும் என இந்தக் கூட்டத்தில் தீர்மானிக் கப் பட்டுள்ளது. அமைச்சர் ரட்னசிறி விக்கிரமநாயக்க தலைமையிலான குழு வினர் அதிகாரிகளை நியமிப்பார்கள் எனத் தெரிவிக்கப் படுகிறது.

கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற 234 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்த லில் 205 உள்ளூராட்சி மன்றங்களில் ஆளும் கட்சி வெற்றியீட்டியுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# பசுபிக் பிராந்திய உறுப்புநாடுகளின் சர்வதேச மாநாடு இலங்கையில்

(கொழும்பு)

பசுபிக் பிராந்திய உறுப்பு நாடுகளின் சர்வதேச மாநாடு இலங்கையில் நடை பெறவுள்ளது.

நாளை வியாழக்கிழமை மற்றும் 26 ஆம் திகதிகளில் இந்த மாநாடு நடை பெறவுள் ளது.

அதில் 154 நாடுகள் இதில் கலந்து கொள்ளவுள்ளதுடன் அதன் 400 இணை அமைப்புக்களும் பங்குபற்றவுள்ளன. இதற் கான ஏற்பாடுகள் அனைத்தும் மேற்கொள் ளப்பட்டுள்ளதாக அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் சுற்று லாத்துறை அபிவிருத்தி அடைந்ததை தொடர்ந்து இலங்கையின் சீரான சூழல் தொடர்பில் சர்வதேசத்துக்கு எடுத்துக் காட்ட கிடைத்த முதலாவது சந்தர்ப்பமாக இதனை கருதுவதாக அவர் தெரிவித் துள்ளார்.(ஸ்ரீ-2)

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் தரம் 9 மாணவர்களுக்கான தமிழ் மொழியும் இலக்கியமும் பயிற்சி வினாவிடை நூல் வெளியீட்டு விழா இன்று காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நூலானது மாகாணப் பரீட்சைக்கு ரிய விடயங்களை உள்ளடக்கிய நூலாக அமைந்துள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# பொதுமக்களை மிரட்டி கப்பம் பெற்ற பொலிஸ் அதிகாரி கைது

(கொழும்பு)

கண்டி நகரப் பகுதியில் இரவு வேளையில் சாதாரண உடையில் பொது மக்களை அச் சுறுத்தி கப்பம் பெற்று வந்த பொலிஸ் அதிகாரி ஒருவரை கண்டி பொலிஸார் கைது செய்துள் ளனர்.

பொதுமக்களால் கண்டி பொலிஸ் தலை மையகத்துக்கு வழங்கப்பட்ட தகவல் அடிப் படையில் அவர் கைது செய்யப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இரவு வேளைகளில் சாதாரண உடை யில் பொது மக்களிடம் அடையாள அட் டைகள் மற்றும் உடமைகளை பரிசோதித்து அச்சுறுத்தி பொதுமக்களிடம் இருந்து பணத்தை பெற்றுக் கொண்டு வந்துள் ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து அவரிடம் பொலிசார் விசார ணைகளைமேற்கொண்டுவருகின்றனர். (ஸ்ரீ-2)

# அழகியல் பாட உதவிக்கல்வி பணிப்பாளர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

தீவக கல்வி வலயத்தில் அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளருக்கான வெற் றிடம் உள்ளதால் யாழ்ப்பாணம் மாவட் டத்தில் அழகியல் பாடம் கற்பிக்கும் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 1, வகுப்பு 2 -1 ஐச் சேர்ந்தஆசிரியர்களிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கான விண்ணப்பங்களை எதிர் வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக மாகா ணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல் வரத்தினத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்படுகின்றனர். (ஸ்ரீ-2)

# பிரெஞ்சு வர்த்தக தூதுக்குழு இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

பிரெஞ்சு வர்த்தக தூதுக்குழு ஒன்று இரு நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளது.

இலங்கையிலுள்ள பிரெஞ்சு தூதரக மும் புதுடில்லியிலுள்ள பிரெஞ்சு தூதரகத் தின் பொருளாதாரத் திணைக்களமும் இணைந்து இந்தியாவிலுள்ள பிரான்ஸ் கம்பனிகளை இலங்கையிலுள்ள வர்த்த கக்குழுவுடன் இணைந்து முயற்சிகளை மேற்கொள்ளுமாறு ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

பிரெஞ்சு வர்த்தகதூதுக்குழுவின் பிரான் ஸ்சை சேர்ந்த 7 பாரிய கம்பனிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 9 பேர் உள்ளடங் கியுள்ளனர்.

அவர்கள் அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் தனியார்துறையினரை சந் திப்பார்கள்.

இதேவேளைகொழும்பில் தெற்காசியா வில் உள்ள பிரெஞ்சு தூதரகங்களின் பொருளாதார ஆலோசகர்களும் தமது வருடாந்த சந்திப்பை நடத்தவுள்ளனர். இலங்கையின் அண்மைய பொருளாதார முன்னேற்றங்களை பிரான்ஸ் வரவேற் றுள்ளது.

வரி மறு சீரமைப்பு உட்பட இலங்கை யின் நிதிக் கொள்கையை பிரான்ஸ் வரவேற்றிருப்பதுடன் இந்த நடவடிக் கைகள் தொடர்பாக மதிப்பீடுகளை மேற் கொள்வதற்கு பிரெஞ்சு கம்பனிகள் விசேட ஆர்வத்தை வெளியிட்டுள்ளன. (ஸ்ரீ-2)

# மரண அறிவித்தல்

## தில்லையம்பலம் அரியரத்தினம்



வத்திராயன் தெற்கு, தாளையடியைப் பிறப்பிடமாகவும் டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் அரியரத்தினம் 20.03.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தில்லையம்பலம் சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், யோகேஸ்வரியின் (டென்மார்க்) அன்புக் கணவரும், பிறேம் (டென்மார்க்), மீரா (டென்மார்க்), குமார் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரஞ்சோதி (ஜேர்மனி), அமரர் நந்தகுமார் மற்றும் கேசவன் (இலங்கை), சாரதா (அவுஸ்தி ரேலியா), விஜிதா (இலங்கை) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 23.03.2011 புதன்கிழமை டென் மார்க்கில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வத்திராயன் தெற்கு, தாளையடி. (4212)


தகவல்: மைத்துனன் அ.வசந்தராஜ் தொ.பே: 0777803431

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கள்ளிக்காட்டு இதிகாசம்

71



கவிப்பேரரசு வைரமுத்து

"ஏ புத்தியில்லாத பொட்டக்கழுத! வழியவிடும்மா. இன்னம் ரெண்டே ரெண்டு நடைதான். வீட்டையே பேத்தெடுத்துக் கொண்டார்ந்து மேட்டுல போட்ற மாட்டனா?"

மின்னல மிரட்டித் தள்ளிப் போகச் சொல்லிட்டு "ஏலே அய்யா! கடப்பாரைய மட்டும் கெட்டியாப் புடிச்சுவாடா"ன்னு மொக்கராசுக்கு உத்தரவு 'போட்டுட்டு வலத்துமாட்ட அடிச்சு வண்டிய ஓட்டித் திரும்புனாரு. சரளக்கல்லுகளக் 'கருக்கு மொருக்கு'ன்னு தின்னுக்கிட்டே மூணாம் நடைக்கு முன்னேறுது வண்டி.

வடக்க கன்னிமார் ஓடையைத் தாண்டி ஊருக்குள்ள வருது பேயத்தேவர் வண்டி. தெக்க சுக்கான் மேடு ஏறி இறங்கிக் காஞ்சு கெடந்த கத்தாழ மட்டைகள அடிச்சு வருது தண்ணி. உலகத்துல முத(ல்) சமதர்மவாதி தண்ணிதான் போலிருக்கு. மேடுபள்ளங்கள நெரவல் பண்ணிக் கிட்டே நிமிசத்துக்கு நிமிசம் நீண்டு வருது. அணக்கட்டு நீர் மட்டம் நாப்பத் திரண்டத் தொட்டு நாப்பத்தி மூணுக்கு ஏறுது.

வண்டிய நிறுத்தினாரு வாசல்ல. தொளதொளன்னு இருந்த உருமால அவுத்து இறுக்கிக் கட்னாரு. இங்கிட்டும் அங்கிட்டும் அவுந்து தொங்குன வேட்டிய அண்ணாக் கயித்தோட சேத்து ஒரு இறுக்கு இறுக்கி அவுக்க முடியாதபடி இழுத்துக் கட்னாரு. எடுத்தாரு கடப்பாரைய; பட்டாளத்துக்காரன் சண்டைக்குப் போற மாதிரி புகுந்தாரு வீட்டுக்குள்ள. கடப் பாரையோட குனிஞ்சு கும்புட்டாரு வீட்ட; எந்திருச்சாரு. நெல கதவச் சுத்தியிருந்த சுவத்துல போடுபோடுன்னு போட்டாரு. அஞ்சாங்குத்து ஆறாங்குத்துலயே ஆட்டங் காண ஆரம்பிச்சுருக்கு சுவரு. வெளிச் சுவரு மண்சுவரு; உள் சுவரு காரச்சுவரு; ஏகப்பட்ட வருசமாச்சு; இத்துப்போச்சு. பேயத்தேவர் போட்ட போட்டுல புட்டு மாதிரி பொலபொலன்னு உதிருது சுவரு; பேந்து வருது நெல.

"ஏலே மொக்க! இந்த நெலயத் தாங்கிப் புடிச்சுத் தூக்கிட்டுப் போயி வண்டியில போடுறா?."

ஆவேசம் வந்து அடுத்த நெலைக்குத் தாவுறாரு. கதவு நெலைய இடிக்கக் கண்ணீராக் கொட்டுது. அப்பன் ஆத்தா தலமேலயே கடப்பாரையத் தூக்கிப் போடுறமாதிரி கதிகலங்குது அவருக்கு. ஒரு நெலய இழுத்துக்கொண்டு போயி வண்டியில தூக்கிப் போட்டுட்டு வந்த மொக்கராசு, தாத்தா! தண்ணி ஊருக்குள்ள வந்துருச்சு... முத்தலாம்மன் கோயில முட்டுது தண்ணி"ன்னான்.

அவன் கத்துன கத்து காதுல விழுகல; காத்துச் சத்தம் காதுல விழுகல. ஒப்பாரி பாடிக்கிட்டே ஊருக்குள்ள ஓடிவர்ற அலச்சத்தம் அவரு காதுல விழுகல. அம்பும் பறவையும் மட்டுமே கண்ணுக்குத் தெரிஞ்ச அர்ச்சுனன் மாதிரி கடப்பாரையும் சுவரும் மட்டுமே அவரு கண்ணுக்குத் தெரியுது; அடுத்த நெலையும் பேத்தாரு. சன்னல் விட்டம் பேத்தாரு! என்ன அருள் வந்துச்சோ! என்ன ஆவேசம் வந்துச்சோ!... கதவ உச்சுன்னப்புல தூக்கி வண்டியில வச்சாரு.

ஓங்காரமாப் புகுந்து வருது ஊருக்குள்ள தண்ணி. ஆண்டாண்டு காலமாப் பஞ்சாயத்துப் பேசுன அம்பலக்கல்லுல முதல் அலவந்து முட்டுது. அம்பலக்கல்லுக்கு அடியில எலும்பு மழை பெய்யுதுன்னு கனாக்கண்டு படுத்திருந்த செவத் தவீரன் நாயி "எவண்டா என்ன எழுப்புறது"ன்னு

பாத்தா-ஆண்டாண்டு காலமா ஆண்டு அனுபவிச்ச தெருவுல-ஆள் நடந்த தெருவுல-ஆடுமாடு புடிச்சுப்போன தெருவுல-வெளஞ்ச தானியங்கள வீடு சேத்த தெருவுல-பெறந்த குழந்தையத் தூக்கி வந்த தெருவுல -பொணம் தூக்கிப்போன தெருவுல 'விடமாட்டண்டா'ன்னு வெளையாடி வருதய்யா சிவீர்ன்னு செந்தண்ணி.

"வைரவா! சீலக்காரி! இந்த வங்கொடுமையப் பாக்கவும் என்னிய உசுரோடு வச்சிருக்கியே!" கையி ரெண்டையும் அகல விரிச்சு ஆகாயத்தைப் பாத்து அழுகுறாரு பேயத்தேவர்.

இனி என்ன பண்ண முடியும்? இந்தா... இந்தா... வருது... வந்திருச்சு. ஓடிவந்து ஒரு அலை அவரு உள்ளங்கால்ல ஊசிபோடுது. உடம்பு குளிருது; உசுரு சுடுது.

வீட்டுக்குள்ள இருந்த ஆட்டுரல வண்டியில ஏத்த முடியுமான்னு பாத்தா ஏத்த முடியல. ஒரு முழு ஆட்டத்தோலோட தின்டுபுட்டுப் பத்து எளந்தாரிக கூடித் தூக்க வேண்டிய ஒரல ஒரு ஆளு பேயத்தேவரும் அரை ஆளு மொக்கராசுமாக் கூடித் தூக்கறதுன்னா நடக்கிற காரியமா?

வள்ளுன்னு விழுந்து சுள்ளுன்னு முழிக்குது.

நட்டுவச்ச நாள்ல மட்டும் தண்ணியப் பாத்துட்டு அதுக்குப்பெறகு அனாதையாவே காஞ்சு கருவாடாக் கெடந்த அரசங்குட்டி, வேர்ல தண்ணிவந்து எறங்கவும், சில்லுன்னு குளுந்து சிலுத்துப்போச்சு. தலையில மஞ்சத்தண்ணி விழுந்ததும் பரவசமாகிச் சிலுத்துப்போற பலியாடுமாதிரி ஆட்டுது தலைய அரசங்குட்டி.

"அம்பலக்கல்லுக்குத் தண்ணி வந்திருச்சு தாத்தா"ன்னு அலர்றான் மொக்கராசு.

வாசல்ல கெடந்த பெரிய உரலப் பெரட்றாரு பேயத்தேவரு; முடியில. முக்கிமுக்கிப் பெரட்றாரு; முடியல; மூச்சப்புடிச்சுப் பெரட்றாரு; முடியல.

கல்லு வேர் விட்டிருச்சா? பூமியவிட்டு வருவனாங்குதே! ஒத்த ஆளா அவரு கருமாயப் பட்டுக் கல்லுத்தள்றதப் பாத்துட்டு, அந்தப்பக்கம் அவரு தள்ள இந்தப்பக்கம் மொக்கராசு இழுக்க, கஞ்சப்பய மனசு மாதிரி லேசா அசஞ்சு கொடுத்துச்சு ஆட்டுக்கல்லு.

எடது கால பூமியில அழுத்தி ஊனிக்கிட்டே வலது கால்ல ஓங்கி மிதிச்சு உசுரையும் ஒடம்பையும் சேத்துப் பேயத்தேவர் ஒரு தள்ளுத் தள்ளவும் படக்குன்னு புரண்டு கொடுத்துச்சு உரலு. உரலுக் கடியில கெடந்த பூரானும் பூரான் குஞ்சுகளும் நெளிநெளின்னு நெளிஞ்சு பேயத்தேவர் மேல ஏறுதுக. "சீ! ஓடிப்போங்க நாய்களா"ன்னு ஒரு ஒதறு ஒதறிட்டு உருட்டிட்டுப் போறாரு ஆட்டுரலை.

வண்டி வரைக்கும் கொண்டு வந்து சேத்துட்டாரு; வண்டியில ஏத்த முடியல. என்னடா பண்றதுன்னு நெஞ்சப் புடிச்சுக்கிட்டே நிமிந்து

வசால்ல கெடக்குது உரலு; வாசப்படி தாண்டுது தண்ணி; சுழட்டியடிக்குது காத்து; துரத்தி வருது அல.


"மாட்ட அவுத்துட்டு வண்டியக் கொடசாச்சு விடுறா மொக்க."

சொன்னதச் செஞ்சான்; வண்டியக் கொடசாச்சு நேக்காலப் புடிச்சு அந்தரத்துல தொங்குனான். வண்டியில ஏத்தியிருந்த கதவு நெல சன்னல் எல்லாம் சரசரன்னு சரிஞ்சு தண்ணியில விழுந்திருச்சு. தோள்ல முட்டுக் கொடுத்து ஆட்டு ஒரல உருட்டி உருட்டி அணவா- ஆதரவா- தரைதொட்ட வண்டியில பின்பக்கமா ஏத்தி "இழுடா மொக்க; நேக்கால இழு"ன்னு கத்துனாரு. அவன் படாத பாடுபட்டுத் தொங்கித் தொங்கி இழுக்க நேக்கா கீழவந்திருச்சு; ஆட்டு ஒரல் வண்டியில ஏறிருச்சு.

முழங்கால்தண்ணியேறிச்சு தெருவுல; கெண்டைக்கால் தண்ணி புகுந்திருச்சு வீட்டுக் குள்ள. தெருவுலவிழுந்து தண்ணியில நனஞ்சு கெடந்த கதவு நெல சன்னலையெல்லாம் திரும்பியும் ஏத்தி ஓட்டுனாரு வண்டிய உசுரக் கையில புடிச்சு.

தண்ணியத்தாண்டி ஊரக்கடந்துட்டாரு. கன்னிமார் கோயில் ஓடைப்பள்ளம் தாண்டி மேட்ல ஏர்றப்ப இழுக்கமாட்டாம மருகி நின்ன வலத்து மாடு, தார் முள்ளுல குத்தவும் வாலமுறுக்கவும் படக்குன்னு கால்மடங்கிப் படுத்துக்கிருச்சு. விலா எலும்புல ஒண்ணு 'கடக்'குன்னு முறிஞ்சுபோன மாதிரி இருந்துச்சு பேத்தேவருக்கு.

(வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் தீவிலுள்ள அகதிகளின் எண்ணிக்கையை குறைக்க திட்டம்


(கொழும்பு)

அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவில் உள்ள அகதிகள் தடுப்பு முகாம்களில் உள்ள அகதிகளின் எண்ணிக்கையினை குறைக்க அவுஸ்திரேலிய குடிவரவு-குடியகல்வு அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

அரசியல் அந்தஸ்து கோரும் செயற்பாடுகள் நிறைவடையும் வரை இந்த முகாமில் பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் அதிகளவில் தடுத்து வைக் கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாகவே, அடிக்கடி பிரச்சினைகள் ஏற்படுவதாக குடிவரவு அமைச்சர் கிரிஸ்ப்ரெளன் தெரிவித்துள்ளார். எப்படியிருப்பினும் இந்த முகாம் குறைந்த அளவிலான அகதிகளுடன் இயங்கும் என அவர் குறிப்பிட்டார்.

அண்மைக்காலத்தில் முகாமினுள் ஏற்பட்ட குழப்பநிலை காரணமாகவே இந்த நடவடிக்கைகளை தாம் மேற்கொள்வதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)



வடமாகாண சபையின் புதிய கேட்போர் கூடம் யாழ்.பொது நூலகத்திற்கு அருகில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கேட்போர் கூடத்தை நாடாவெட்டி திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். (படம் :- என்.குமார்)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அம்பாறை மாவட்ட அமர்வுகள் நாளை மறுதினம் ஆரம்பம்

(கொழும்பு)

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் அம்பாறை மாவட்ட விசாரணை அமர்வுகள் நாளை மறுதினம் மற்றும் 26,27 ஆம் திகதிகளில் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெறவுள்ளதாக ஆணைக்குழுவின் தகவல்கள் தெரிவித்தன.

அம்பாறையில் நாளை மறுதினம் காலை நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வு நடைபெறவுள்ளது. எதிர்வரும் 26 ஆம் திகதி மொனராகலை பகுதியில் சில பிரதேசங்களை நல்லிணக்க ஆணைக்குழுவினர் பார்வையிடவுள்ளனர்.

யுத்தகாலத்தில் தாக்குதலுக்குள்ளான பிரதேசங்களையே ஆணைக்குழுவினர் பார்வையிடவுள்ளனர்.

மேலும் 27ஆம் திகதி கல்முனையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அமர்வு நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் கொழும்பு அமர்வுகள் முடிவுக்கு வந்துள்ளன.தற்போது ஆணைக்குழுவினர் ஏற்கனவே பெறப்பட்ட சாட்சியங்களை ஆய்வு செய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ள்னர்.

இந்நிலையிலேயே அம்பாறை மாவட்டத்தில் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அமர்வுகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கொழும்பு அமர்வுகள் முடிவுக்கு வந்த பின்னர் காலியிலும் மாத்தறையிலும் கடந்த மாதம் அமர்வுகள் நடைபெற்றன.

நல்லிணக்க ஆணைக்குழு ஏற்கனவே, யாழ்ப்பாணம்,வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, அநுராதபுரம், புத்தளம் ஆகிய மாவட்டங்களில் விசாரணை அமர்வுகளை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# லிபியாவிலுள்ள இலங்கை தூதரகம் மூடப்பட்டது

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையினர் லிபியாவில் மேற்கொண்டு வரும் தாக்குதல்களால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகளை அடுத்து தலைநகர் டிரிபோலியில் இயங்கும் இலங்கை தூதரகத்தை நேற்று முன்தினம் தற்காலிகமாக மூட இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

லிபியாவில் தூதரக தொடர்புகளை கொண்டிருந்த ஏனைய நாடுகளின் தூதரக அதிகாரிகளுடன் இணைந்து எடுக்கப்பட்ட கூட்டுத் தீர்மானத்தை அடுத்து அங்குள்ள இலங்கை தூதுவர் அ[illegible]வித்ததை தொடர்ந்து அரசாங்கம் இந்த தீர்[illegible]ானத்தை எடுத்துள்ளது.

இதனடிப்படையில் லிபியாவில் பணியாற்றி வரும் இலங்கை தூதுவர் மற்றும் இரண்டாம் நிலை அதிகாரிகள் இலங்கை திரும்பவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

லிபியாவில் நெருக்கடி நிலை தோன்றியதை அடுத்து அங்கு இலங்கை தூதரகத்தில் பணியாற்றி வந்த ஏனைய அதிகாரிகள் அண்மையில் நாடு திரும்பினர். இந்த அதிகாரிகள் நாடு திரும்பியதால் தூதுவரும் இரண்டாம் நிலை அதிகாரிகள் மாத்திரமே தூதரகத்தில் பணியாற்றி வந்தனர்.

அதேவேளை லிபியாவில் பணிபுரிந்து வந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது. (ஸ்ரீ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# ஆரோக்கிய வாழ்வில் யாழ்ப்பாணத்து கீரைகள்

''பொன்னை எறிந்தாலும் பொடிக் கீரையை எறியாதே.''

பொன்னுக்கு கூட மதிப்புக் குறையலாம், அல்லது இல்லாமலும் போகலாம். ஆனால், கீரைவகைகளை பொடிதாக இருந்தாலும், பொன்னைவிட அதிக மதிப்புடையது. அன்றைய சித்தர்கள் சொன்னதை ஏற்றுக் கொண்டு கீரை மருத்துவத்தை எல்லா நோய்களுக்கும், நோயாளிகளுக்கும் பயன்படுத்தலாம்.

கீரை உடலில் நோய் வராமல் காப்பாற்றுவதால் அனைவரும் தினமும் ஒரு கீரை சாப்பிட வேண்டும்.


சித்த மருத்துவமானது, ஆரோக்கியமான வாழ்விற்கு வழிகோலும் படியாக காலத்தை வகுத்து பருவகாலங்களினையும் அக்காலங்களில் மேற்கொள்ள வேண்டிய பழக்க வழக்கங்களையும் உணவுமுறைகளையும் மிகத் தெளிவாக வகுத்துக் கூறப்பட்டுள்ளது. அந்தவகையில், நாம் தற்போது வெப்ப காலத்தினை எதிர்நோக்கியுள்ளோம். இந்தக் காலத்திற்கு மிகவும் வேண்டிய உணவு கீரைகள் ஆகும். இவை வருடம் முழுவதிலும் சேர்த்துக் கொள்ள வேண்டிய ஒரு உப உணவாய் இருப்பினும் வெப்பகாலமான இக்காலத்திற்கு இதன் சேர்க்கை தேவையான ஒன்றாகும்.

பொதுவாக கீரைகள் வெப்பகாலத்திற்கு ஏற்றவாறு குளிர்மையை உடலிற்கு தருவனவாயும், சிறுநீரை நன்கு வெளியேற்றக் கூடியனவாயும் விளங்குகின்றன.

வெப்பகாலத்தில் மலக்கட்டு ஒரு முக்கியமான ஒரு பிரச்சினையாகும்.இக்காலத்தில் கீரைகளினை உணவில் சேர்ப்பதன் மூலம் மலச்சிக்கலை நிவர்த்திசெய்து ஆரோக்கியமான வாழ்விற்கு வழிவகுக்கலாம்.

மேலும் கீரைகளில் காணப்படும் உயிர்ச் சத்துகள், கனிப் பொருட்கள் மற்றும் தாதுப் பொருட்கள் உடல் வளர்ச்சிக்கும் உள்ளுறுப்புக்களின் வளர்ச்சிக்கும் ஏதுவாகின்றன.

தற்போதைய ஆய்வுகளின்படி நார்ப் பொருட்களில், ஒட்சிசன் எதிரிகள் (Anti oxidant) மிகவும் அதிகமாகக் காணப்படுவதாக



கூறப்படுகிறது. இவை புற்றுநோய் மற்றும் ஏனைய நோய்கள் ஏற்படாது பாதுகாப்பளிக்கிறது. இவ்வகையான நார்ப்பொருட்கள் நிறைந்த கீரையை கட்டாயம் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டியது நமது நல் ஆரோக்கியத்திற்கு அவசியமானதாகும்.

இவ்வாறு சிறப்பான அம்சங்களை கொண்ட கீரைவகைகளை மக்கள் விளக்கமின்மையாலும் அவசர உலகில் தயாரிக்கப்பட்ட செயற்கை (Artificial food) உணவுகளை உள் ளெடுப்பதாலும் இயற்கையுணவுகளை உண்ணாது தவிர்த்து தமக்கான நோய்களைத் தாமே தேடிக்கொள்கின்றனர். தன்பாட்டில் வரும் இக்கீரைகள் இரசாயன உரமாக்கிகள் சேர்க்கப்படாததும் இலகுவில் கிடைக்கக் கூடியதும் மலிவானதும் உயர்ந்த சத்துப் பொருட்களைக் கொண்டதுமாகும்.

நமக்குத் தேவையானவை எல்லாம் தமது பிரதேசத்திலேயே இயற்கையிலேயே படைக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் நமது பிரதேசத்தில் 45 வகையான கீரைகள் காணப்படுகின்றன. இவற்றை நாள்தோறும் ஒன்று வீதம் உணவில் பச்சையாகவோ சமைத்தோ சேர்க்கும் போது ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான சத்துக்களை பெறக்கூடியதாயும் ஆரோக்கியமான வாழ்விற்கு உதவியாயும் அமையும். அத்துடன் நோய் எதிர்ப்பு சக்தியையும் மேம்படுத்தி நோயின்றி வாழவும் முடியும்.

இதனை நோக்கமாகக் கொண்டு அன்றாட வாழ்வில் பயன்படுத்தக் கூடிய கீரைகளையும் அவற்றின் மருத்துவப் பயனையும் உருவப்படமும் விளக்கமாக கூறப்பட்டு ள்ளது.

இயற்கையாக 45 வகையான கீரை வகைகள் இருந்தாலும் சில வகை கீரை இனங்களே சந்தைப்படுத்தப்படுகின்றன. இதற்கு முக்கிய காரணம் மக்களின் அறியாமையாகும். ஆகவே, எல்லா வகைக்கீரைகள் பற்றி எடுத்துக் கூறி சந்தைப்படுத்துவதன் மூலம்நாம் ஆரோக்கியமான வாழ்வு வாழலாம்.

**மருத்துவப்பயன்கள்**

**மணலிக்கீரை**

பருப்புடன் சேர்த்து கடைந்து உண்ணலாம். அல்லது மல்லி, வெங்காயம், சிறிது உப்பும் சேர்த்து துவையல் செய்தும் சாப்பிடலாம். வயிற்றுப் புண்ணிற்கு சிறந்தது. தாய்ப்பால் ஊட்டும் தாய்மாருக்கு சிறந்த கீரையாகும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

**குப்பைக்கீரை**


முளைக்கீரை, அரைக்கீரை ஆகியவற்றுடன் சேர்த்து கலப்புக்கீரையாக சமைத்து சாப்பிடலாம். மலம் நன்கு இளகி வெளியேறும். சிறுநீர் நன்கு வெளிப்படும். முளைக்கீரையைவிட அதிகம் சுவையுடை யது. 125, 175 கிராம் கீரையை உபயோகிக்கலாம், சொறி, சிரங்கு ஆகியவற்றை போக்கும் தன்மையுடையது.

**கறிவேப்பிலை/கறிவேம்பு**

நடுத்தர கொழுந்து இலைகளை தேங்காய், தயிர், தக்காளி சேர்த்து சட்னி செய்யலாம். 15 கிராம் நடுத்தர கொழுந்து இலைகள் வரை உபயோகிக்கலாம். அஜீரணம், பித்தரோகங்களுக்கு சிறந்தது. பசிமந்தம், வாந்தி தீரும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டம், பதவிகள் யாரைத் தேடி வரும்?



பாக்கியாதிபதி லக்கின கேந்திரம் ஏறி குரு பகவான் பார்வை பெற்றால் அந்த ஜாதகர் அரசியல் தலைவர்களால் கௌரவிக்கப்படுவார்.

குருவோ, புதனோ சுப கிரகமாக இருந்து சேர்க்கையும் கிடைத்தால் விருதுகள் பெறுவார். பட்டம், பதவிகள் இந்த ஜாதகரைத் தேடி வரும். மிகவும் புகழ்பெறுவார்.

ஜீவனாதிபதி தனது சொந்த வீட்டில் இருக்க சுபகிரகம் அவருடன் சேர்ந்திருந்தால் சொன்ன சொல் காக்கக்கூடிய குணம் பெற்றவராக, சொந்தத் தொழிலில் இலாபம் அடையக்கூடியவராக விளங்குவார்.

ஜீவன ஸ்தானமாகிய பத்தாம் இடத்தில் பத்துக்கு உடையவன் ஆட்சி பெற்று சுப கிரகம் சம்பந்தம் பெற்றால் மிகுந்த விவேகம் உள்ளவராக இருப்பார்.

பத்துக்கு உடையவன் சுப கிரகம் சம்பந்தம் எந்தவிதத்தில் பெற்றாலும் அல்லது உச்சம் பெற்று இருந்தாலும் இதே பலன் கிடைக்கும்.

### அரசியலில் வெற்றி பெற

பாக்கியாதிபதியாக ஒன்பதாம் வீட்டுக்கு உடையவன் ஸ்தானத்தில் இருந்தால் அரசியல் பிரமுகர்களால் கௌரவிக்கப்படுவார். சுப கிரகத்தின் பார்வையும் பெற்று பாக்கியாதிபதி திசை நடைபெறுமானால் அரசியல் ஆலோசகராக விளங்குவார். சிறந்த அரசியல்வாதிகளை உருவாக்குவார்.

10ஆம் பாவாதிபதி சுப கிரகத்துடன் சேர்ந்தாலோ அல்லது பார்க்கப்பட்டாலோ கட்டளையிட்டு ஒரு கூட்டத்தை நடத்தக்கூடியவராக இருப்பார்.

பத்தாம் பாவத்தில் சூரிய பகவானோ, அங்காரகனோ இருந்து பலம் பெற்றால் மற்றவர்களுக்கு வழிகாட்டுபவராக விளங்குவார்.

பத்தாம் பாவாதிபதி கேந்திரம் ஏறி சுபகிரகத்துடன் கூடியோ, பார்க்கப்பட்டோ இருந்து சுப கிரக திசை நடக்கும் காலத்தில் இன்முகத்துடன் இனிமையாகப் பேசி மற்றவர்களை வசப்படுத்தி காரியங்களை இனிமையாகச் சாதிப்பார்.

ஜீவன ஸ்தானத்தில் சூரியன் இருந்து பலம் பெற்ற கிரகங்களின் பார்வை பெற்றால் அரசியல் தலைவர்களின் ஆணையை திறமையாகச் செய்துமுடிப்பார்.

### சொந்தத் தொழிலில் ஈடுபாடு யாருக்கு?

ஜீவன ஸ்தானமாகிய பத்தாம் இடத்தை சுப கிரகங்கள் பார்வையிட்டால் அந்த ஜாதகர் சொந்தத் தொழிலில் நாட்டம் உள்ளவரா்க இருப்பார்.

ஜீவன ஸ்தானத்தில் புதன் பகவான் இருந்தால் திறமையாகப் பேசி வியாபாரம் செய்யும் திறமை மிக்கவராகத் திகழ்வார்.

ஜீவனாதிபதியும் லக்கினாதிபதியும் சேர்ந்திருந்தாலோ, ஒருவருக்கொருவர் பார்த்தாலோ, பரிவர்த்தனம் அடைந்தாலோ சாதுர்யம் உள்ள சொந்தத் தொழில் செய்வார்.

லக்கினாதிபதி ஜீவன ஸ்தானமாகிய பத்தாம் இடத்தில் இருந்தால் மற்றவரைக் கவர்ந்திழுக்கும் வியாபாரியாகத் திகழ்வார்.

ஜீவனாதிபதியாகிய பத்தாம் வீட்டுக்கு உடைய கிரகம் கேந்திரம் ஏறினாலோ, இலாப ஸ்தானம் ஏறினாலோ, பூர்வபுண்ணிய ஸ்தானத்திலோ அல்லது பாக்கிய ஸ்தானத்திலோ இருந்து சுப கிரகப் பார்வை பெற்றாலோ அவர் திறமை வாய்ந்த வளர்ச்சியடையக் கூடிய வியாபாரியாகத் திகழ்வார்.

### இராஜ இரகசியம் அறிபவர் யார்?

கேந்திரங்களில் சூரியன் இருந்து பலம் பெற்றாலும் இராஜ இரகசியங்களைக் கட்டிக் காப்பார்.

சந்திரன் திரிகோணத்திலோ, கேந்திரங்களிலோ இருந்து சுப கிரகப் பார்வை பெற அரசியல் தலைவர்களின் எண்ணங்களைக் கவனித்துத் திறமையாகச் செய்துமுடிப்பார்.

பத்தாம் பாவாதிபதி இலாப ஸ்தானமாகிய பதினோராம் இடத்தில் இருந்தாலோ அல்லது கேந்திரங்களில் இருந்தாலோ இராஜ விசுவாசியாக விளங்குவார்.

குரு பகவான் லக்கினத்திலோ, சதுர்த்த கேந்திரமாகிய நான்காம் இடத்திலோ இருந்து சுப கிரகப் பார்வை பெற இராஜ இரகசியங்களைத் திறமையாகக் கையாள்வார்.

நவாம்ச கட்டத்தில் ஜீவன ஸ்தானத்தில் இரு கிரகங்கள் வீற்றிருந்து பலம் பெற்றால் அவர் பிறந்த குலத்தில் பலரால் கொண்டாடப்படுவார்.

## ஜோதிடக் களம்

# ஜப்பானுக்கான விமான சேவைகளை இடையூறின்றி நடத்துமாறு பணிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான விமான சேவைகளை இடையூறின்றி நடத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விமான சேவைகள் அமைச்சுக்கு பணித்துள்ளார்.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டதை அடுத்து பல நாடுகள் ஜப்பானுக்கான விமான சேவைகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளன. இவ்வாறான நிலையில் இருநாடுகளுக்கும் இடையில் இருக்கின்ற நட்புறவை கருத்திற்கொண்டு விமான சேவைகளை இடையூறு இன்றி நடத்துமாறு பணித்துள்ளார்.

இதேவேளை ஜப்பானில் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிப்பதற்கென 60 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான 3 மில்லியன் தேயிலைப் பொதிகளை இலங்கை தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தது.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் சங்கத்தின் தலைவர் இப்பொதிகளை ஜனாதிபதியிடம் கையளித்தார். இந்த வைபவத்தில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவர் அட்மிரல் வசந்த கரன்னாகொட ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-2)

# புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஜனாதிபதி உதவி

(கொழும்பு)

புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட பெண் ஒருவருக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேரடியாக உதவி வழங்கியுள்ளார்.

களுத்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவருக்கே ஜனாதிபதி இவ்வாறு உதவி வழங்கியுள்ளார். குறித்த பெண்ணின் சத்திர சிகிச்சையைக் கட்டணம் அறவீடு செய்யாது மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி, மகரகம புற்றுநோய் வைத்தியசாலை அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

முதலில் குறித்த சத்திர சிகிச்சைக்காக 4 இலட்சம் ரூபாய் தேவைப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஞாயிறு பத்திரிகையொன்றில் குறித்த பெண்ணின் நெருக்கடி நிலைமை விபரிக்கப்பட்டிருந்ததாகவும் அதனைப் பார்வையிட்ட ஜனாதிபதி மேற்படி உதவி வழங்கியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# ஜப்பானிலிருந்து 770 பேர் நாடு திரும்பியுள்ளனர்

ஜப்பானிலிருந்து 770 பேர் நாடு திரும்பியதுடன் மேலும் பலர் நாடு திரும்ப ஆயத்தமாக இருப்பதாக அந்நாட்டு இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வெளிவிவகார அமைச்சுக்கு அறிவுறுத்தியுள்ளதுடன் அவர்களை இலங்கைக்கு அனுப்பி வைப்பதற்காக விசேட விமான சேவைகள் ஏற்பாடு செய்யப்படவுள்ளதாக ஜப்பானிலுள்ள இலங்கை தூதரகத்தின் பிரதித் தூதுவர் அசேல வீரகோன் தெரிவித்தார்.

ஜப்பானில் இருந்து மேலும் 500 இலங்கையர்கள் கடந்த 19 ஆம் திகதி நாடு திரும்பினர். இதேவேளை இரு தினங்களுக்கு முன்னரும் 270 பேர் விசேட விமானம் மூலம் நாடு திரும்பினர். (ஸ்ரீ-2)

# ஜப்பான் பொருட்களுக்கு கதிரியக்க பரிசோதனை

ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களை கதிரியக்க பரிசோதனைக்கு உட்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பரிசோதனையின் பின்னரே சுங்கத் திணைக்களத்திலிருந்து பொருட்கள் வெளியேற்றப்படுமென்றும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதன்படி ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்து வாகனங்கள் மற்றும் பொருட்களை கொழும்பு துறைமுகத்திலுள்ள கதிரியக்க பரிசோதனை நிலையங்களில் பரிசோதிக்கவுள்ளதாக அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

தேசிய அணுப் பரிசோதனை நிலையம் சுங்கத் திணைக்களத்துடன் இணைந்து இந்நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளது.

அணுத்தாக்க பரிசோதனை மேற்கொள்வதற்கான இயந்திர சாதனங்கள் கடந்த 2006ஆம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)





யா/இணுவில் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் சு.சதானந்தன் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் பிரதம விருந்தினரும் பழைய மாணவருமாகிய க.விவேகானந்தன் நிற்பதையும் செயலாளர் இ. நந்தகுமாரன் ஒலிம்பிக் தீபம் ஏற்றி வைப்பதனையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தம் என்பது என்ன?

**உங்கள் சேமிப்பே உங்கள் சிறை!**

வாழ்க்கை முழுவதும் எல்லோருமே சேமித்துக் கொண்டே இருக்கிறார்கள். ஒருவர் பொருள் சேமிக்கிறார்; இன்னொருவர் உறவுகளைச் சேமிக்கிறார்; மற்றொருவரோ அறிவைச் சேமிக்கிறார். அவரவருக்கு விருப்பமான ஏதோ ஒன்றை சேமிப்பதை பொதுவாக அனைவருமே செய்கிறார்கள்.

இப்படி நீங்கள் சேமித்ததைத்தான், 'நான்' என்று உணர்கிறீர்கள். பிரச்சினை இங்குதான் எழுகின்றது. நீங்கள் சேமித்ததோடு உங்களை அடையாளப்படுத்தி விட்டீர்கள். அதனால் உங்கள் இயல்பான அடையாளம் கரைந்து போய்விட்டது.

சேமிப்பு உங்கள் வாழ்வை வளமாக்கிறது என்பது உண்மைதான்; அதில் ஒன்றும் சந்தேகம் இல்லை. உங்களில் யார் செல்வந்தர்? அதிகம் சேமித்தவர் தானே! ஆனால் இப்போது என்ன சிக்கல் என்றால், நீங்கள் சேமித்த பொருட்களோடு உங்களையும் அடையாளப்படுத்திக் கொண்டு, நீங்களும் ஒரு பொருளாக மாறிவிட்டீர்கள். உங்களது உயிர்ப்பு ஐந்து நிமிடமே காணாமல் போய்விடுகிறது.

நீங்கள் உறவுகளாக, நட்புகளாக மனிதர்களையும் சேமிக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் அவர்களையும்பொருட்களைப்போல்த் தானே நீங்கள் பயன்படுத்துகிறீர்கள்? அவர்கள் உங்கள் உடமைகள்தானே? உங்கள் கணவன் அல்லது மனைவி, குழந்தைகள் அனைவரும் உங்கள் சொத்துத்தானே? உயிரற்ற பொருட்களைச் சேமித்துப்பார்த்து, அதில் திருப்தி ஏற்படாதபோது உயிருள்ளவற்றையும் சேமிக்க ஆரம்பிக்கிறீர்கள். அப்படித்தானே?

சேமிப்பதைத் தவறு என்று சொல்லவில்லை. ஆனால் அவற்றோடு உங்களை அடையாளப்படுத்திக் கொண்டதால், உங்கள் உயிரின் தன்மையான ஆனந்தத்தை இப்போது உங்களால் உணரமுடியாமல் போய்விட்டது. இப்போதைக்கு உங்களது அனுபவத்தில் உள்ளது எல்லாமே பொருட்கள்தான். உயிரை, வாழ்வை நீங்கள் உணராததால், நீங்களும் ஏதோ ஒரு பொருளாகவே வாழ்கிறீர்கள்.

இந்த உலகத்தில் ஏதோ ஒரு பொருளோடு முதலில் உங்களை அடையாளப்படுத்திக் கொண்டீர்கள். பிறகு அதுவாகவே மாறினீர்கள். சிறிது காலம் சென்றபின் அது உங்களிற்குப் போதுமானதாகவில்லை என உணர்ந்தீர்கள். அதனால் இன்னொன்றையும் சேர்த்துக் கொண்டீர்கள். உங்கள் அடையாளம் மாறியது. சில காலம் நன்றாகப்போனது. பிறகு அதுவும் உங்களுக்குப் போதவில்லை. மீண்டும் இன்னொன்றைச் சேர்த்தீர்கள். பிறகு மற்றொன்று! இப்படியே இந்த பிரபஞ்சம் முழுவதையுமே உங்களுடையதாக்கினாலும், நீங்கள் நிறைவடையமாட்டீர்கள்.

ஏன் இப்படி? உங்களுக்குள் இருக்கும் உயிர்த்தன்மை இதுபோன்ற சின்னச் சின்ன விடயங்களில் திருப்தியடைந்து விடுவதில்லை. அதனுடைய இயல்பும் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தவனுடைய இயல்பும் ஒன்றே. இரண்டுமே எல்லையற்றது. உங்களுக்குள் இருக்கும் படைப்பின் மூலமான உயிர்த் தன்மையை எந்த அடையாளங்களுக்குள்ளும் சுருக்கிவிட முடியாது.

எதனோடு நீங்கள் அதை அடையாளப் படுத்தினாலும் அது கஷ்டப்படுகிறது; இருப்புக் கொள்ளாமல்தவிக்கிறது. அந்த அடையாளங்களிலிருந்து விடுபடமுயல்கிறது. எல்லையற்ற அதன் சுபாவத்தை ஒரு எல்லைக்குள் அடையாளப்படுத்த நீங்கள் முயன்றால், அது போராடும். அந்தப் போராட்டம் தான் நீங்கள் அனுபவிக்கும் துயரம்.

பலவிதமான அடையாளங்களில் உங்களை நீங்களே கட்டிப்போட்டு வைத்திருக் கிறீர்கள். இந்தக் கட்டுக்களை அவிழ்த்தாலே போதும்... ஆனந்தத்தைத் தேடி எங்கும் அலையவேண்டாம். ஆனந்தம் உங்கள் காலடியில் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருக்கும்!

**வெளிச்சூழல் வெறும் வாய்ப்பு**


நீங்கள் என்னோடு அமர்ந்திருக்கும் போது, ஆனந்தத்தை உணர்கிறீர்கள். இது எப்படிச் சாத்தியமாகிறது என்பதை விளக்குகிறேன்.

என்னுடைய சக்திநிலை உங்கள் உடலையும் மனதையும் உணர்ச்சிகளையும் குறிப்பிட்ட ஒரு விதத்தில் ஒருங்கிணைக்கிறது. அதனால் ஆனந்தமாக உணர் கிறீர்கள். ஆனால் ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். ஆனந்தம் உங்கள் உள்ளே தான் இருக்கிறது. புறச்சூழல் ஒரு தூண்டுதல் மட்டுமே.

சில கவிதைகளில் ஆனந்தமழை பொழிகிறது என்று சொல்வார்கள். ஆனால் அது அப்படி நடக்காது. குறிப்பிட்ட விதத்தில் ஒரு புறச்சூழலை உருவாக்கினால், உங்களை ஆனந்தமாக உணரச் செய்யமுடியும். ஆனால் ஆனந்தம் எப்போதுமே ஓர் உள் அனுபவந்தான். வெளியிலிருந்து ஆனந்தத்தை ஏதோ பனி மழை மாதிரி உங்கள் மீது தூவ முடியாது. அப்படித் தூவினால் உங்கள் சருமம் தானேஆனந்தத்தை முதலில் உணர முடியும்(சிரிப்பு). உங்கள் உயிரின் ஆதாரமானது, அதனுடைய தன்மையை வெளிப் படுத்தும் போது அதை நாம் ஆனந்தம் என்று அழைக்கிறோம்.

இப்படியான வெளிச் சூழ்நிலைகள் எப் போதாவது கிடைக்கும் வெறும் வாய்ப்புக்கள் தான். ஆனந்தத்தின் ஊற்று உங்கள் உள்ளேதான் உள்ளது. நீங்கள் இதைக் கவனித்து இருக்கலாம். சில நாட்களில் நீங்கள் ஆனந்தமாக இருந்தபோது, சிரிப்பதற்கு ஒரு சின்ன சந்தர்ப்பம் கிடைத்தால் போதும்... வெடித்துச் சிரித்து ஆனந்தப் படமாட்டீர்கள். வேறு சில நாட்களில் நீங்கள் கண்ணீர் சிந்தி அழவும் துயரத்தில் மூழ்கிப்போகவும் அற்ப மான காரணங்களே போதுமானதாக இருந்தது!

என்ன நடந்தது என்றால் உங்கள் உடல்,மனம், உணர்ச்சி இவை நன்றாக ஒருங்கிணைந்த நிலையில் சீராக இருந்த போது, உயிரின் இயல்பான ஆனந்தத்தை



## ஆன்மீகம் 02


உணர்ந்தீர்கள். ஆனால் வேறு சில நாட்களில் உங்கள் உடல், மனம், உணர்ச்சி இவை தாறுமாறாக ஒருங்கிணைப்புத் தவறி இருக்கும்போது, உயிரின் இயல்பான ஆனந்தத்தை உங்களால் உணர முடியவில்லை.

தினசரி நடக்கும் நிகழ்வுகளில் ஒன்றும் பெரிய மாறுதல்கள் இல்லை. ஒவ்வொரு நாளிலுமே நல்ல சூழ்நிலைகளும் நிகழ்வுகளும் எதிர்மறையான சூழ்நிலைகளும் நிகழ்வுகளும்தொடர்ந்து நடந்து கொண்டு தான் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றுக்கும் ஏற்றபடி நீங்கள் வெளிப்படுத்தப் போகும் உணர்வு... சிரிப்பா அல்லது அழுகையா என்பதைத் தீர்மானிப்பது உங்கள் உள்நிலை தான்; வெளி நிகழ்வுகள் அல்ல. ஆக, உங்கள் ஆனந்தம் வெளிநிகழ்வுகளால் வருவது இல்லை. வெளிநிகழ்வுகள் வெறும் சந்தர்ப்பங்கள் தான் ஆனந்தத்தின் ஊற்று நீங்கள்தான்.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# இலங்கையில் தமிழியல் ஆய்வு: பண்பாடு

02



கலைவாணி இராமநாதன் "வரலாற்றுக்கு முற்பட்ட ஈழத்து இந்து மத நம்பிக்கைகள்" (1993) என்னும் கட்டுரை எழுதியுள்ளார்

**"கொழும்பில் நடைபெற்ற சர்வ தேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

யாழ்ப்பாணத்து இந்து-சைவ சமயம் பற்றியும் பொதுவான சமநிலை பற்றியும் கூறுவனவாக வி.சிவசாமியின் "யாழ்ப்பாணத்தில் இந்துசமயம்" (1975) ஆ.வேலுப்பிள்ளையின்"Religiousness in Yalppanam upto the Thirteenth Century"(1990), சி.பத்மநாதனின் "The Religious Traditions of Kingdom of Yalppanam"(1990), கா.சிவத்தம்பியின் "தமிழ் சைவப் பண்பாட்டிற் செல்வச் சந்நிதியின் முக்கியத்துவம்-விரிவான ஓர் ஆய்வுக்கான சில தொடக்கக் குறிப்புக்கள்" (1984) என்பன அமைகின்றன.

பண்டிதமணி யாழ்ப்பாணத்துக் கலாசாரம் "கந்தபுராணக் கலாசாரம்" எனக் கூறினார். ஆனால் ஆ.வேலுப் பிள்ளையோ "கந்த புராணக் கலாசாரம் மட்டுமல்லாது கயிலாச பாரம் பரியமும் இலங்கைத் தமிழர்களின் பண்பாட்டைக் காத்துவந்துள்ளது" எனத் தன்னுடைய இலங்கைத் தமிழர்களின் கைலாசப்பாரம்பரியம் (1989) என்னும் சிறு நூலிலே கூறுகிறார்.

வீரசைவம் பற்றி இரு ஆய்வுகள் வெளிவந்துள்ளன. அவை த.சண்முக சுந்தரத்தின் யாழ்ப்பாணத்து வீர சைவர்(1983) என்னும் நூலும் டெனிஸ்மக்கில்வ்ரேயின்"The Matrilineal Viracaiva Priests of Eastern Srilanka(1982) என்னும் கட்டுரையும் ஆகும். ஏனைய வழிபாடுகள் பற்றிய ஆய்வாக செ.நவரத்தினத்தின் "ஈழ நாட்டில் முருக வழிபாடு" (1974), இரா.வை. கனகரத்தினத்தின் "ஐயனார்வழிபாடும் ஈழத்து வன்னிமை மக்களும்" (1980), சி.க.சிற்றம் பலத்தின் "தாய்மை வழிபாட்டின் தொன்மை" (1985) ஆகியன அமைகின்றன. பொதுவாகச் சைவம்பற்றி நோக்குவனவாக எஸ்.முருகவேளின் "A Bibliographycal guide of the study of saivaism(1965). ப.கோபால கிருஷ்ணனின் "சிவாகமங்கள்-ஓர் ஆய்வு" (1989), "சைவசமய மரபில் ஆகமங்கள்" (1995), வி.சிவசாமியின் "சைவம்-வரலாறும் சிறப்பும்" (1993), சு.சுசீந்திரராசாவின்" Religiousness in the saiva village" (1979), சொக்கனின் சைவம் வளர்த்த தையலர் (1977) ஆ.வேலுப்பிள்ளையின் பண்டிதமணி போற்றிய யாழ்ப் பாணத்துச் சைவப்பாரம்பரியம் (1989) என்பன அமைகின்றன.

தமிழர் சமயம், சமயவரலாறு, வழிபாடு பற்றியும் பல எழுத்துக்கள் வந்துள்ளன. கைலாசபதியின் "பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்" (1966), "அடியும்முடியும்" (1970), வி.கே. கணேசலிங்கத்தின் "மிருகங்களும் தமிழர் வழிபாட்டு முறையும்" (1974), கா. சிவத்தம்பியின் "தமிழ் இலக் கியத்தில் மதமும் மானுட மும்" (1983), ஆ.வேலுப்பிள்ளையின் "தமிழர் சமய வரலாறு" (1985),"Religious Traditions of the Tamil" (1995), அ.சண்முக தாசின் "தமிழர் வழிபாட்டில் செவ்வேளும் திருமாலும்" (1983), "அகநானூறு தரும் சமயச் செய்திகள்" (1993), கி.விசாக ரூபனின் "பழந்தமிழர் வழிபாட்டு மரபுகளும் நம்பிக்கைகளும்" (1993).

பொதுவாக இந்துமதம் பற்றியும் சாஸ்திரங்கள் பற்றியும் பின்வரும் வெளியீடுகள் ஆராய்கின்றன.சி.சிவ ரட்ணம்:Origion and Development of the Hindu Religion and people(1978), ப.கோபாலகிருஷ்ணன் ஆத்மீக மரபு-ஊற்றுக்களும் ஒட்டகங்களும் (1988), இந்துப் பண்பாட்டு மரபுகள் (1993), வாழ்வியல் சிந்தனைகளைக்கூறும் இந்து சாஸ்திரங்கள்(1993) செ.தனபாலசிங்கன்: கீதை அமுதம்(1970), கந்தபுராணச் சிந்தனைகள்(1976), தங்கம்மா அப்பாக்குட்டி கந்தபுராணச் சொற்பொழிவுகள், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தாலே வெளியிடப்பட்ட இந்துக் கலைக் களஞ்சியம் முதலாம்பாகமும் (தொகுப்பாசிரியர்: பொ.பூலோக சிங்கம்) இரண்டாம் (1992), மூன்றாம்(1996), நான்காம்(1998), ஐந்தாம்(2001), பாகங்களும் (தொகுப் பாசிரியர்: சி.பத்மநாதன்) இந்துசமயம் பற்றி பன்முகப்பட்ட தகவல்கள் தரும் வெளியீடுகளாகும். சமயம் பற்றிய ஒரு பொதுவான கட்டுரையாக க.சண்முகலிங்கம் மொழிபெயர்த்த கோ.இ.கோல்ட்தோப்பின் "சமூகவியல் நோக்கில் சமயமும் சடங்குகளும்" (1992) என்னும் கட்டுரை அமைகிறது. வி.ரி.தமிழ்மாறனின் "நீதி, சட்டம், நீதிநிர்வாகம் பற்றிய இந்துமதக் கருத்துக்கள்" நா.ஞானகுமரனின் "அறிவாராய்ச்சியியல்" என்னும் கட்டுரைகளை பண்பாடு(1996:14) இதழில் எழுதியுள்ளார். கு. சிவானந்தமூர்த்தி "அஹிம்சை" என்னும் கட்டுரையினை பண்பாடு(1997:17) இதழில் எழுதியுள்ளார். இலங்கையில் "இந்து நாகரீகம்" (இந்து கலாசாரத் திணைக் களம் 2000) என்னும் நூல் சி.பத்மநாதனால் எழுதப்பட்டது.

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி முடிவுகள்

நல்லூர் கோட்டமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி முடிவுகள் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். மாணிக்கராசாவினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முதல் 3 இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

**நீளம் பாய்தல்**

ரி.சரணியா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), எஸ்.துவாரகா (கொக்குவில் இந்துக் கல்லூரி), பி.சாந்தினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

**உயரம் பாய்தல்**

ஆர்.தமிழினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), வி.கீர்த்தனா (யாழ்.இந்துமகளிர் கல்லூரி), எஸ்.சுகுமாரி (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**முப்பாய்ச்சல்**

பி.சுகந்தினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ரி.சரணியா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), எஸ். துவாரகா (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**தட்டெறிதல்**

எம்.பவித்திரா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ஆர்.சோபனா (செங்குந்தா இந்துக் கல்லூரி), ஜே.ஆன்பானுஜா (கனகரட்ணம் ம.ம.வி)

**குண்டு போடுதல்**

ஜே.ஆன்பானுஜா (கனகரட்ணம் ம.ம.வி), எஸ்.ஹேமா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), எஸ்.வினோஜிகா (கனகரட்ணம் ம.ம.வி)

**ஈட்டி எறிதல்**

என்.சுருதிகா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ஜே.ஆன்பானுஜா (கனகரட்ணம் ம.ம.வி), வி. சுபத்திரா (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**4×100 மீற்றர் அஞ்சல்**

யாழ்.இந்து மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, கனகரட்ணம் ம.ம.வி

**4×400 மீற்றர் அஞ்சல்**

யாழ்.இந்து மகளிர்.கல்லூரி, கனகரட்ணம் ம.ம.வி, கொக்குவில் இந்துக் கல்லூரி

**21 வயதின் கீழ் பெண்கள்**

**100 மீற்றர்**

எஸ்.பானுஜா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), வி.சரண்யா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ரி.தர்மினி (செங்குந்தா இந்துக் கல்லூரி)

**200 மீற்றர்**

யு.ஷோபினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), கே.ஜான்சி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), கே. துஸ்யந்தி (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**400 மீற்றர்**

கே.ஜான்சி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), வி.ரிஷாந்தினி (பெரியபுலம் ம.வி), வை.சங்கீதா (செங்குந்தா இந்துக் கல்லூரி)

**800 மீற்றர்**

வி.சயந்தினி (செங்குந்தா இந்துக் கல்லூரி), எஸ்.அனுதா (கோண்டாவில் இராம கிருஷ்ண ம.வி.)

**1500 மீற்றர்**

கே.ஜான்சி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ரி.தமிழினி (செங்குந்தா இந்துக் கல்லூரி), எஸ்.நிலக்ஹி (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**நீளம் பாய்தல்**

எஸ்.பானுஜா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி),யு.கம்ஷினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), வி.சியந்தினி (செங்குந்தா இந்துக் கல்லூரி)

**உயரம் பாய்தல்**

யு.சோபினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), கே.துஷாந்தினி (கொக்குவில் இந்துக் கல்லூரி), வி.சேயந்தினி (செங்குந்தா இந்துக் கல்லூரி)

**முப்பாய்ச்சல்**

எஸ்.பானுஜா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), யு.ஹம்சினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), கே.துஸ்யந்தி (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**குண்டு போடுதல்**

வை.நிஷானி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), வி.ரிஷாந்தினி (பெரிய புலம் ம.வி), என். சிவசங்கரி (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**தட்டெறிதல்**

எஸ்.ரிசிகா(யாழ்.இந்து மகளிர் கல்லூரி), எம்.மயூரி (முத்துத்தம்பி ம.வி), என்.சிவசங்கரி (கொக்குவில்இந்துக் கல்லூரி)

**ஈட்டி எறிதல்**

வி.சிவசங்கரி (கொக்குவில் இந்துக் கல்லூரி), வை.நிஷானி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), பி.மதிவதனி (முத்துத்தம்பி ம.வி)

**4×100 மீற்றர் அஞ்சல்**

யாழ்.இந்து மகளிர் கல்லூரி, செங்குந்தா இந்துக் கல்லூரி

**4×400 மீற்றர் அஞ்சல்**

யாழ்.இந்து மகளிர் கல்லூரி, செங்குந்தா இந்துக் கல்லூரி *(முற்றும்)*

# கெய்ரோவில் பான் கீ மூனை இலக்கு வைத்து தாக்குதல்

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூனை இலக்கு வைத்து, எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

லிபிய அரசாங்கத்துக்கு ஆதரவாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள எகிப்திய பொதுமக்கள் இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

எகிப்தில் உள்ள, ஐக்கிய நாடுகள் சபைத் தலைமையகத்தில் இருந்து அரப் லீக் கட்டடத் தொகுதிக்கு செல்ல முற்பட்ட வேளையில், அவர் மீது நூற்றுக்கணக்கான மக்கள் கல் வீச்சுக்களை மேற்கொண்டுள்ளனர்.

எவ்வாறாயினும் சம்பவத்தில் பான் கீ மூனுக்கு எந்த ஆபத்தும் ஏற்படவில்லையெனவும் லிபியாவில் வானூர்திகள் செல்வதற்கு தடை செய்யப்பட்ட வலயத்தை ஏற்படுத்தியமை மற்றும் லிபியாவுக்கு எதிரான தாக்குதலை நடத்த ஏதுநிலைகளை உருவாக்கியமை போன்ற காரணங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# மழை நீரில் கதிர்வீச்சுத் தாக்கமா? அணுசக்தி அதிகாரசபை பரிசோதனை

இலங்கையில் பெய்கின்ற மழையில் கதிர் வீச்சுத் தாக்கம் ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பில் பரிசோதனைகளை நடாத்துவதற்கு நாடளாவிய ரீதியில் மழை நீரின் மாதிரிகள் சேகரிக்கப்படுகின்றன.

அணுசக்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் இந்தப் பரிசோதனைக்கு காலநிலை அவதான நிலையம் நாடளாவிய ரீதியிலுள்ள கிளை நிலையங்களின் ஊடாக மழைநீர் மாதிரியைச் சேகரிக்கின்றது.

ஜப்பானில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தையடுத்து புகுஷிமா பகுதியில் அமைந்துள்ள அணு உலை வெடித்ததால் கதிர்வீச்சுத் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் நாட்டின் வெப்பம் வெகுவாக அதிகரித்துள்ளது. இவ்வாறான நிலையிலேயே இந்தக் கதிரியக்கப் பரிசோதனையை நடத்துவதற்கு சபை தீர்மானித்துள்ளது.

இதேவேளை ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் உள்ளிட்ட பொருட்களை இலங்கைச் சுங்கத் திணைக்களம் கதிரியக்கம் தொடர்பான சோதனைக்கு உட்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (ஸ்ரீ-2)

# லிபியா மீதான தாக்குதலுக்கு எதிர்ப்புப் போராட்டம்

## இலங்கை தொழிற்சங்கங்கள் முடிவு

(கொழும்பு)

லிபியா மீதான தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்களை நடத்த இலங்கை தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

அமெரிக்கா, பிரிட்டன்,பிரான்ஸ் உட்பட மேற்குலக நாடுகள் ஒன்றிணைந்து லிபியா மீது மேற்கொள்ளும் மிலேச்சத்தனமான தாக்குதலைக் கண்டித்து அனைத்து மக்களும் குரல் எழுப்ப வேண்டுமென தொழிற்சங்கத் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

லிபியா மீதான தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டுமென தெரிவித்த தொழிற்சங்க தலைவர்கள் ஏகாதிபத்திய வாதிகளுக்கெதிராகத் தொடர் ஆர்ப்பாட்டங்களை நடத்தப் போவதாகவும் தெரிவித்தனர்.

தாக்குதல் நடத்துவதைக் கண்டிக்கும் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடொன்று நேற்று முன்தினம் கொழும்பு பம்பலப்பிட்டியிலுள்ள மேல் மாகாண ஆளுநரின் பணிமனையில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் சிரேஷ்ட தொழிற்சங்கத் தலைவரும் மேல் மாகாண ஆளுநருமான அலவி மௌலானா, பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான ஏ.எச்.எம். அஸ்வர் உட்பட தொழிற்சங்கப் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். (ஸ்ரீ)

# நோர்வே தூதுவர் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹில்டே ஹரால்ஸ்டாட் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.


அண்மையில் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்த நிலைமைகளுக்கு நோர்வே அரசாங்கம் வழங்கிய உதவிகள் தொடர்பில் கண்காணிக்கும் நோக்கில் ஹில்டே இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

நோர்வே புகலிடக் கோரிக்கையாளர் பேரவை மற்றும் யுனிசெப் ஆகியவற்றின் ஊடாக இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுடன் நோர்வே தூதுவர் பேச்சுவார்த்தை நடத்தியதாகக் குறிப்பிடப்படுகிறது.

மனிதாபிமான உதவிகள் மூலம் மக்களுக்கு நன்மை வழங்கக் கிட்டியமை மகிழ்ச்சி அளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார். மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நோர்வே அரசாங்கம் 114 மில்லியன் ரூபாவினை வழங்கியுள்ளது.

இலங்கைக்கான தூதுவராகப் பதவியேற்றதன் பின்னர் முதற் தடவையாக ஹில்டே கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

உள்ளூர் அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள், சிவில் அமைப்புகளின் முக்கியஸ்தர்கள், மனிதாபிமான ஆர்வலர்கள் ஆகியோருடன் நோர்வே தூதுவர் சந்திப்புகளை நடத்தியுள்ளார். (ஸ்ரீ-2)




யா/புத்தூர் ஸ்ரீ பஞ்ஞசீக வித்தியாலயத்தில் யாழ்.கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவால் மனைமுகாமைத்துவப் பயிற்சிநெறி அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் போதானாசிரியர் செல்வி சி.பிருந்தா மங்கல விளக்கேற்றுவதனையும் அருகில் அதிபர் கு.ரவீந்திரன் மற்றும் செயற்றிட்ட உத்தியோகத்தர் ஆகியோர் நிற்பதையும் விருந்தினர்களுடன் பயிற்சி பெறும் மாணவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: உடுப்பிட்டி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நீதிமன்ற வளாகத்தில் சிவன் ஆலயச் சின்னங்கள்



கடந்த வாரம் வலம்புரி பத்திரிகையில் "சாவகச்சேரி நீதிமன்ற வளவில் புராதன சிவன் ஆலயம்" என்ற தலைப்பில் வெளிவந்த செய்தி எமது மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் அக்கறையுள்ள மக்களிடையே அவ்வாலயத்தின் பழைமையையும், அதன் வரலாற்றுச் சிறப்பையும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலைத் தோற்றுவித்துள்ளதென்பதில் ஐயமில்லை.

ஆனால் 1990க்கு முன்னர் இந்நீதிமன்ற வளவிலும், பிரதான பஸ்தரிப்பு நிலையத்திலும் பிறதேவைகளுக்காக நிலம் அகழப்பட்டபோது எதிர்பாராத வகையில் சில இந்து விக்கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அப்போது இவ்விக்கிரகங்களுக்குரிய ஆலயம் எது என்பதையிட்டு அவ்வூர் மக்களிடையே பல கருத்துக்களும், பல ஐதீகங்களும் கூறப்பட்டன.

1993 இல் மீண்டும் ஒரு விக்கிரகம் இங்கு கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ்வட்டாரத்தில் கிடைத்த அனைத்து விக்கிரகங்களை ஆய்வுசெய்த பேராசிரியர் பூபரட்ணம் 12-13 ஆம்நூற்றாண்டைச் சேர்ந்த இவ்விக்கிரகங்களுக்குரிய சிவன் ஆலயம் சாவகச்சேரி நகரப் பகுதியில் எங்கே அமைந்திருந்தென்ற கேள்வியை எழுப்பியிருந்தார்.

தற்போதைய நிலையில் அவ்வாலயம் நீதிமன்றவளவிலேயே அமைந்திருந்ததென்பதை அங்குகிடைத்து வரும் அழிவடைந்த ஆலயத்திற்குரிய கட்டட எச்சங்கள் ஆதாரபூர்வமாக உறுதிசெய்கின்றன. இந்நிலையில் முன்னர் இவ்விடங்களில் கிடைத்த விக்கிரகங்களின் வரலாற்றுப் பெறுமதியையும், அதன் பழைமையையும் அறிய வேண்டும் என்ற விழிப்புணர்வு அவ்வூர் மக்களிடையே ஏற்பட்டு வருவதைக் காணமுடிகிறது.

அவற்றை மனக்கருத்திற் கொண்டு 1993இல் பூநகரி-தொல்பொருளாய்வு என்ற நூலில் இவ்விக்கிரகங்கள் தொடர்பாகப் பேராசிரியர் பூபரட்ணம் அவர்கள் எழுதிய கட்டுரை இங்கு சுருக்கமாக புதிய தகவல்களுடன் பிரசுரிக்கப்படுகிறது.

**சாவகச்சேரியின் வரலாற்றுப் பின்னணி**

15ஆம் நூற்றாண்டுக்குரிய கோகில சந்தேசய என்ற சிங்கள இலக்கியத்தில் சாவகச்சேரி என்ற இடப் பெயர் "சாவக்கோட்டை" எனவும், இதன் சமகாலத்திற்குரிய திரிஸிங்கள கடயிம் ஸஹ வித்தி என்ற இன்னொரு சிங்கள இலக்கியத்தில் இது சாவகிரி எனவும் யாழ்ப்பாண அரசோடு தொடர்புபடுத்திக் கூறுகின்றன. கி.பி.12 ஆம் நூற்றாண்டுக்குரிய சோழக் கல்வெட்டுக்கள் இப்பிராந்தியத்தில் உள்ள மட்டுல் (மட்டிவால்) என்ற இடத்தை சோழப் படைகள் கைப்பற்றி அங்கிருந்த யானைகளையும், படைவீரர்களையும் சிறைப்பிடித்து தமிழ்நாடு கொண்டு சென்றதாகக் கூறுகின்றன.

1980களில் பேராசிரியர் இரகுபதி, 1993 இல் பேராசிரியர் பூபரட்ணம் ஆகியோர் இப்பிராந்தியத்தில் உள்ள கண்ணாடிப்பிட்டி, விறுமர் கோயில் பகுதியில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகள் இற்றைக்கு 2000ஆம் ஆண்டுகளுக்கு முன்னரே இப்பிராந்தியத்தில் செறிவான மக்கள் குடியிருப்புக்கள் இருந்துள்ளன என்பதை உறுதி செய்கின்றன. இவ்வரலாற்றுப் பின்புலம்தான் இங்கு தொன்மையான இந்து கோயில் தோற்றம் பெறக் காரணம் எனக் கூறலாம்.

**சாவகச்சேரி நகரப்பகுதியில் கிடைத்த விக்கிரகங்கள்**

இன்று சாவகச்சேரி நகரப்பகுதியில் நீதிமன்றம், பிரதான பஸ்தரிப்பு நிலையம், பொது நூலகம், கலாசார மண்டபம், சந்தையென வரையறுக்கப்பட்டுள்ள காணிகளின் எல்லைகள் பிற்காலத்தில் நிர்வாகக் கட்டடங்கள் அமைக்கப்பட்டதன் காரணமாக உருவாக்கப்பட்டவையாகும். ஏனெனில் ஒன்றோடு ஒன்று தொடர்புடைய இக்காணிகளில் இருந்தே பிற்காலத்தில் பிற தேவைகளுக்காக இவ்விடங்களில் நிலம் தோண்டப்பட்ட போது பலதரப்பட்ட இந்து விக்கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

1942 ஆம் ஆண்டு (2ஆம் உலக மகா யுத்த காலத்தில்) நீதிமன்றத்திற்கு அருகே பதுங்குகுழி வெட்டப்பட்ட போது ஆலயத்திற்குரிய மணியும் நந்தாவிளக்கும் கண்டெடுக்கப்பட்டதாக அவற்றை நேரில் பார்த்த மாத்தையா என்ற வயோதிபர் கூறியுள்ளார். இங்கிருந்த நீதிமன்றத்திற்கான அத்திவாரம் வெட்டும் போது நீதிமன்றத்தின் மையப் பகுதியில் உள்ள கிணற்றுக்குள் நான்கு கோமுகிகள் போடப்பட்டு மூடப்பட்டதாக அவர் மேலும் கூறியுள்ளார். பிரித்தானியர் ஆட்சியில் இந்நீதிமன்றத்துடன் இணைந்திருந்த கட்டடப்பகுதியொன்றை அவர்கள் 1940 இல் முக்கிய வரலாற்றுச் சின்னமாகப் பிரகடனப்படுத்தியதாகவும் தெரியவருகிறது. இவையெல்லாம் ஆலயம் ஒன்று இருந்ததற்கான ஆதாரங்கள் ஏற்கனவே இங்கு கிடைத்துள்ளதைக் காட்டுகின்றன.

இன்று யாழ்ப்பாணத்தில் காணப்படும் ஆலய வரலாற்றுப் பழைமை வாய்ந்த ஆலயங்கள் பலவும் ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியில் மத சுதந்திரம் அளிக்கப்பட்டதன் பின்னர் கட்டப்பட்டவையாகும்.

அவை பற்றிய வரலாறு இன்றும் மக்களால் பேணப்பட்டு வருகிறது. இன்று நீதிமன்ற வளவில் அடையாளம் காணப்பட்டுள்ள ஆலயம் ஒல்லாந்தர் ஆட்சியின் பின்னர் கட்டப்பட்டிருந்தால் அது பற்றிய ஆவணமும், வரலாறும் பேணப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.


இதனால் இங்கு காணப்படும் ஆலயச் சிதைவுகள் போர்த்துக்கேயர் வருகைக்கு முன்பிருந்த ஆலயத்திற்கு உரியதெனக் கூறலாம். அவற்றின் காலத்தை அறுதியிட்டு கூறுவதற்குரிய கல்வெட்டுக்கள் இதுவரை இங்கு கிடைக்காவிட்டாலும் நீதிமன்றச் சுற்றாடலில் கிடைத்துள்ள விக்கிரகங்களின் கலை மரபுகளில் இருந்து இங்கிருந்த ஆலயத்தின் காலத்தை ஓரளவுக்கு நிச்சயப்படுத்த முடியும். அவற்றுள் இங்கு கிடைத்த நான்கு விக்கிரகங்கள் சிறப்பாக நோக்கத்தக்கன.



## 800 ஆண்டுகளுக்கு முற்பட்டவையா?

**ஆவுடையுடன் கூடிய சிவலிங்கம்**

சாவகச்சேரி நகரப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ள விக்கிரகங்களுள் கருங்கல்லில் வடிவமைக்கப்பட்ட



ஆவுடையுடன் கூடிய சிவலிங்கம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இவ்விக்கிரகம் சந்தைக்கும் இராசமாளிகை வளவிற்கும் இடையிலுள்ள நீதிமன்ற வளவில் பழைய கிணறு மீண்டும் தோண்டப்பட்ட போது கண்டெடுக்கப்பட்டதாகும். இச்சிவலிங்கம் மாதோட்டத்தில் கண்டெடுக்கப்பட்ட பல்லவர் காலச் சிவலிங்கத்தைப் போல் மிகப் பெரிதாகும்.

எட்டடி உயரமான இந்த லிங்கத்தின் $6\frac{3}{4}$ அடி உயரமான பாகம் மண்ணினுள் மறைக்கப்பட்டு $1\frac{1}{4}$ அடி உயரமான பாகம் மட்டும் வெளியே தெரியுமாறு வைக்கப்பட்டுள்ளது. கிணற்றிலிருந்து வெளியே எடுத்த போது ஏற்பட்ட உடைவு காரணமாக லிங்கத்தின் மேற்பாகம் வெடிப்பு ஏற்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது. வட்டவடிவில் செய்யப்பட்டுள்ள இதன் ஆவுடை $1\frac{3}{4}$ அடி உயரத்தையும் பத்தடி சுற்றளவையும் கொண்டுள்ளது. இவ்வாவுடையின் அழகுத் தன்மையும், தோற்றமும் பிற்கால ஆவுடையின் அமைப்பிலிருந்து வேறுபட்டதாக காணப்படுகின்றது.

**மனோன்மணி அம்மன்**

இவ்விக்கிரகம் தற்போதைய நீதிமன்றத்திற்கு அருகில் உள்ள இராசமாளிகைவளவு என்ற இடத்தில் மலசலகூடம் அமைப்பதற்கு நிலத்தை வெட்டிய போது ஆறடி ஆழத்தில் கண்டெடுக்கப்பட்டதாகும். கருங்கல்லில் நிற்கின்ற சமபங்கு நிலையில் செதுக்கப்பட்டுள்ள இவ்விக்கிரகம் $2\frac{3}{4}$ அடி உயரத்தை உடையது.

மிக ஒடுங்கிய இதன் இடை ஐந்து அங்குல அகலத்தையும், இடுப்புக்கு கீழே உள்ள தொடைப்பகுதி ஒரு அடி அகலத்தையும் கொண்டுள்ளது. இதன் நான்கு திருக்கரங்களில் முழங்கையுடன் இணைந்த இடது வலது மேற்கரங்கள் பாசமும், தாம ரையும் தாங்கி நிற்க, வலது இடது கீழ்க் கரங்கள் முறையே அபயகஸ்தத்தையும், வரதகஸ்தத்தையும் குறித்து நிற்கின்றன.

ஒன்பது அங்குல உயரமுடைய இதன் திருமுடியின் மேற்பாகத்தில் உச்சிக் கொண்டையும், நெற்றிப்பட்டத்திற்கு மேல் இரத்தினாரமும், மகுடத்தின் முற்பக்கத்தில் குறுக்காகவும் நிலைக்குத்தாகவும் மூன்று குறியீடுகளும் காணப்படுகின்றன.

இதன் காதில் மும்மூன்று மகர குண்டலமும், கழுத்தில் திரண்ட தாலி அமைப்பும், அதன் மேல் அகன்ற பதக்கமும் அணியப்பட்டுள்ளன.

**செல்வி சசிதா குமாரதேவன்**
தொல்லியல் விரிவுரையாளர்,
வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

கல் விக்கிரகங்களுக்கு பொதுவாக உள்ள முப்புரிநூல் இவ் விக்கிரகத்தில் மிகத் தெளிவாக செதுக்கப்பட்டுள்ளது.

பொதுவாக இவ் விக்கிரகத்தின் ஒடுங்கிய இடையும், அகன்ற மார்பகமும் உயர்ந்த மகுடமும், கழுத்திலுள்ள அலங்காரத்தன்மை கொண்ட மார்பகங்களும் பழை மையான தெய்வ விக்கிரகம் என் பதை சான்றுபகர்கின்றன. இதன் அங்க அமைப்புக்களை வைத்து இவ்விக்கிரகத்தை மனோன்மணி அம்மனுக்குரியதாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசநோய் சமூக அணுகுமுறை

14

# காசநோயிற்கான சிகிச்சை

**பதிவு செய்தலும் அறிக்கையிடலும்**

நோய் கண்டறிதலின் காலாண்டு அறிக்கை மிகவும் முக்கியமானது. இதில் குறைவாக நோய் கண்டறியப்பட்டிருப்பின், நோய் அறிகுறி உள்ளவர்களில் குறிப்பாக இருமல் 2 கிழமைக்குமேல் உள்ளவர்களில் சளிப் பரிசோதனை செய்யப்படவில்லை என்பது கருத்து.

நுணுக்குக்காட்டி மூலமாக சளிப்படலப் பரிசோதனை சரியாக மேற்கொள்ளா விடாவிடினும் குறைந்தளவு நோயாளிகள் கண்டு பிடிக்கப்படுவர். அவ்வாறெனின் சரியான நுணுக்குக்காட்டிப் பரிசோதனை வசதி செய்யப்படல் வேண்டும். சளியில் கிருமிகள் காணப்படாத நுரையீரல் காசம் அதிகம் காணப்படலாம்.

சளிப்பரிசோதனை சரியாக நடைபெறாவிடின் இது ஏற்படலாம். மீளவும் காசநோய் ஏற்படல் அதிகம் காணப்படலாம். முன்னர் ஒழுங்காகச் சிகிச்சை பெறாமையினால் ஏற்பட்டு இருக்கலாம். சிகிச்சை பயனளிக் காத நோயாளர் எண்ணிக்கை அதிகம் ஏற் படின் முன்னர் கொடுத்த சிகிச்சை போதிய தாக இருக்கவில்லையெனலாம். காலண் டறிக்கையில் சளிமாதிரியில் "கிருமி அற்ற வீதம்" முக்கியமானது.

மூன்றாம் மாதத்தில் முற்றாக இல்லாது விடும். ஆரம்பத்தில் 3+,2+கிருமிகள் காணப்பட்டவை. சளியில் கிருமிஇல்லாது போகும் வீதம் 2 மாதத்தில் குறையும். ஆனால் குணமடையக்கூடியவை.

முதல் இருமாத சிகிச்சை முடிவில் சளிப்பரிசோதனை வகை I நோயாளிகளில் செய்யப்படும். அவர்களில் சளி மாதிரியில் கிருமிகள் காணப்படின் மேலும் ஒரு மாதத்திற்கு தொடர்ந்து நான்கு வகையான மருந்துகளையும் நீடிப்பதால் குணமடையும் நிகழ்தகவு அதிகரிக்கும். சளியில் கிருமி அற்றுப் போதலினை ஆவணப்படுத்தல் காசநோய் கட்டுப்பாட்டில் ஈடு[illegible]போருக்கு உறுதியினைக் கொடுக்கும். மே[illegible] சளியில் கிருமி இல்லாது போதல் வி[illegible]ானதும், உணர்திறன் மிக்கது மான காட்டியாகும். காசநோய் கட்டுப்பாட்டு செயல்முறையின் இவ்வீதம் குறைவாக காணப்படின் மேற்பார்வை தேவை. அதிகமாக இருப்பின் அப் பிரதேசத்தின் முன் மாதிரியாக எடுக்கலாம்.

சளியில் கிருமி இல்லாது போகும் வீதம், ஆரம்பத்தில் சளியில் கிருமி காணப்பட்டவற்றில் 2 மாதத்தில் கிருமி காணப்படாததன் 100% ஆல் தரப்படும்.

வகை I சிகிச்சையில் 3 மாதத்தில் சளியில் கிருமிஇல்லாதுபோதல்90%மேல்இருக்கும்.

**சளியில் கிருமி இல்லாது போகும் வீதம் குறைவாக இருப்பதற்கான காரணங்களும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளும்.**

1. நோயாளி சிகிச்சை பெற்றுக்கொண்டு இருப்பார். ஆனால், 2 ஆம் மாத முடிவில் சளிப்பரிசோதனை செய்யப்படவில்லை. 2 ஆம் மாத முடிவில் சளியில் கிருமி காணப்படின் நான்கு மருந்துகளை மேலும் 1 மாதத்திற்குக் கொடுத்தல் வேண்டும். எனவே, 2 ஆம் மாத முடிவில் கட்டாயம் சளிப் பரிசோதனை செய்யப்படல் வேண்டும்.

2. மருந்தினை நோயாளி எடுத்தலை நேரடியாக அவதானிக்கலாம். நோயாளி ஒழுங்காக மருந்து எடுக்கமாட்டார். இதனால் சளியில் கிருமி காணப்படும். எனவே, நேரடியாக அவதானித்து மருந்து எடுத்தலை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

3. அதிகமான நோயாளிகள் சிகிச்சையின் ஆரம்பத்திலேயே மருந்து எடுத்தலை கைவிட்டுவிடுகின்றனர். எனவே, நோயாளிகளுக்கு தொடர்ச்சியாக மருந்து எடுத்தலின் முக்கியத்துவத்தை அறிவூட்ட வேண்டும். மருந்து எடுத்தலை கைவிடுவோரை உடனடியாகக் கண்டு பிடிக்கும் செயல்முறை இருத்தல் அவசியம்.

4. ஏற்கனவே சிகிச்சை அளிக்கப்பட்டவர்களுக்கு மீளவும் நோய் ஏற்படும் போது தவறாது வகை II சிகிச்சை அளிக்கப்படல், சரியான சரித்திரத்தினை நோயாளியிடம் இருந்து பெறுவதால் எதனை தவிர்க்கலாம்.

5. மீளவும் நோய் ஏற்படும் போது வகை I மருந்துகள் தவறாக பயன்படுத்தல், முதலில் நோய் ஏற்பட்டு சிகிச்சை பெற்றவர்களுக்கு வகை II மருந்துச் செயற்கையே கொடுக்கப்படல் வேண்டும்.

6. சளிப்பரிசோதனையில் (+) எனக் கண்டறிந்தால் சளிப்படலத்தினை மீளவும் பரிசோதித்தல்

7. இறப்பு வீதம் அதிகமாக இருத்தல். நோய்கடுமையான பின் சிகிச்சைக்கு வருவதால் இறப்பு வீதம் அதிகமாக இருக்கும்.

8. தொடக்கத்தில் சளி மாதிரியில் அதிக கிருமிகள் காணப்படல். (3+)

3+ உள்ளவர்களில் இரண்டு மாதங்களின் பின்பும் (+) இருக்கும்.

மேலதிகமாக ஒரு மாதத்திற்கு மருந்து கொடுக்கப்படும் போது (-) ஆக மாறும். ஆரம்பத்திலேயே நோயாளிகளைக் கண்டறிந்து சிகிச்சையளிப்பதால் இவை குறைவடையும்.

**சிகிச்சை பற்றிய காலாண்டு அறிக்கை**

சளியில் காணப்படும் காசநோயாளரின் குணமடையும் வீதம் 90% க்கு மேல் இருத்தல் வேண்டும். சிகிச்சை வெற்றியளிக்கும் வீதமானது குணமடையும் வீதத்தினதும் முற்றாக சிகிச்சை பெற்றோரின் வீதத்தினதும் அளவாகும். இறப்பு வீதம் அதிகரிப்பதற்கான காரணங்களில் ஒன்று பிந்திய நிலையில் நோயினைக் கண்டறிதலாகும். சிகிச்சை பயனளிக்காது இறப்பர்.

சிகிச்சை பயனளிக்காமைக்குக் காரணம் நேரடியாக அவதானிக்காதுவிடல், மருந்துகள் மீளத்தொடங்கும் போது வகை II இற்கு பதிலாக வகை I மருந்துகளை தவறுதலாகக் கொடுத்தல்.

நோயாளி தொடர்ந்து எல்லா மருந்துகளையும் எடுக்காமை, மருந்திற்கு ஆரம்ப நிலையிலேயே எதிர்ப்பு உள்ள கிருமிகள் காணப்படல் என்பனவாகும்.

**இடையில் கைவிடுவதற்குக் காரணம்**

சரியான முறையில் நோயாளிகள் அறிவூட்டப்படாமை, நட்பாகப் பழகாமை, மருந்துகள் ஒழுங்காக சென்றடையாமை என்பனவாகும்.

வேறுஇடங்களிற்கு மாற்றுதல் அதிக மாக காணப்படின் சிகிச்சைக்கு வராதவர் களும் தவறுதலாக இதில் அடங்கலாம்.


**ஏ. ஒழுங்கான மருந்து விநியோகத்தினையும் ஏனைய பொருட்களின் விநியோகத்தினையுதம் மேற்கொள்ளல்**

காசநோய்க்கான சிகிச்சையிலும் நோய் தடுப்பிலும் முக்கியமான மருந்துகளும் அதனுடன் தொடர்பான பொருட்களினதும் ஆய்வுகூடப்பொருட்களினதும் விநியோகமாகும். அவற்றுள் பின்வருவன முக்கியமானவை.

1. காசநோயினைக் குணப்படுத்தும் மருந்துகள்
2. ஊசிகளும் ஸ்ரிஞ்சுகளும்
3. சளியினைச் சேகரிக்கும் பாத்திரம், சளிப்படலத்திற்குரிய ஸ்சிலைட் (கண்ணாடித் தகடு)
4. ஆய்வுகூடப் பதார்த்தங்கள்/ நுணுக்குக்காட்டி
5. பதிவுப் புத்தகங்கள்

இவை சரியான முறையில் சேமிக்கப்பட்டு, பாதுகாப்பாக விநியோகிக்கப்படல் வேண்டும்.

(தொடரும்)



Dr,சி.யமுனானந்தா, MBBS,DTCD
மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி,
மார்புநோய் சிகிச்சை நிலையம்,
பண்ணை,யாழ்ப்பாணம்.


## [illegible]ராட்டி வாழ்த்துகின்றோம்



[illegible]து வளம் கொழிக்கும் செம்மண் பிரதேசத்தில் 1990 ஆம் ஆண்டு தொடக்கம் இடம்பெற்ற அழிவுயுத்தம் காரணமாக அலுக்கையிலிருந்து புதுமாத்தளன் வரையும் இடத்துக்கிடம் அலைந்து திரிந்து அல்லற்பட்ட எம் உறவுகளை

உறவுக்கு கைகொடுப்போம்
உரிமைக்கு குரல் கொடுப்போம்

என்ற பொன்மொழிக்கு அமைய சொந்த மண்ணில் மீளக்குடியமர வைத்து பலவழிகளிலும் உதவிபுரிந்த மக்கள் தலைவன் தமிழ் இனத்தின் தலைவன்
**கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர்
**கந்தசாமி கமலேந்திரன் (தோழர் கமல்)** அவர்களையும்
எந்நேரமும் எமக்காக உழைக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி.வடக்கு அமைப்பாளர்
**இராசரத்தினம் ஜெயபாலசிங்கம் (தோழர் அன்பு)** அவர்களையும்
மனம்நிறைந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.



வலி. வடக்கு,
தெல்லிப்பழை.

வித்தகபுரம் J/223
கிராம அபிவிருத்திச்சங்கம்,
விவசாய சம்மேளனம்,
வித்தகபுரம் [illegible]

(4213)



சிவமயம்

## பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் சுபமங்களகரமான விகிர்தி வருடம் பங்குனி மாதம் 09ஆம் நாள் (23.03.2011) புதன்கிழமை அதிகாலை 3.40 மணி முதல் பி.ப. 3.29 மணி வரையுள்ள விசாக நட்சத்திரமும், சித்தாமிர்த யோகமும் கூடிய சுபவேளையில்



**எமது புத்திரி திருவளர் செல்வி**



# கிரிசாந்தனி

**அவர்களுக்கு**

இறைவன் திருவருள் துணைகொண்டு எமது இல்லத்தில் பூப்புனித நீராட்டு விழா நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து, மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்**



*திரு.திருமதி. நந்தகுமார் சந்திரகலா*
**குடும்பத்தினர்**
**சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு.**
*இராமச்சந்திரன் குடும்பம்,*
*கோண்டாவில்.*

(2777)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானில் நிலநடுக்கம், சுனாமியால் பலியானோர் 21 ஆயிரமாக உயர்வு

ஜப்பானில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சி மற்றும் சுனாமியால் பலியானோர் எண்ணிக்கை 21 ஆயிரமாக உயர்ந்துள்ளது. அணு உலைகளில் இருந்து வெளியேறிய கதிர்வீச்சின் அளவும் குறைந்து வருகிறது.

ஜப்பானில் கடந்த 11 ஆம் திகதி பூமி அதிர்ச்சியும் இதைத்தொடர்ந்து சுனாமியும் உருவானது. இதனால் சென்டாய் மற்றும் புகுஷிமா நகரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. ஆயிரகணக்கான கட்டடங்களும் வீடுகளும் தரைமட்டம் ஆயின. கடற்கரை நகரமான புகுஷிமாவின் அனைத்து பகுதிக்குள்ளும் கடல் 20 அடி உயரத்துக்கு புகுந்தது. இதனால் பல கோடிக்கு பொருள் சேதம் ஏற்பட்டது.

இந்த பயங்கர பூமி அதிர்ச்சியாலும் சுனாமியாலும் இறந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆயிரம் என்று முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த எண்ணிக்கை 21 ஆயிரமாக உயர்ந்து இருப்பதாக நேற்று முன்தினம் ஜப்பான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இன்னும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு பணியும் நிவாரணப்பணியும் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

**அணு உலையில் பாதிப்பு**

பூமி அதிர்ச்சி மற்றும் சுனாமி காரணமாக புகுஷிமா நகரில் உள்ள மிகப் பெரிய அணு மின் நிலையம் பெரிதும் பாதிக்கப்பட்டது. அங்குள்ள 6 அணு உலைகளைக் குளிர்விக்கும் கருவிகள் பழுதாகி விட்டதால் கதிர்வீச்சு ஏற்படத் தொடங்கியது. கதிர்சீச்சு 30 கிலோ மீற்றர் தூரம் வரை பரவியது.

இதனால் அந்தப் பகுதியில் வசித்த மக்கள் மற்றும் உயிரினங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து அனைவரும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

**கதிர்வீச்சின் அளவு குறைந்தது.**

இதனைத் தொடர்ந்து அணு மின்நிலையப் பகுதியில் மின்சார இணைப்புகள் சீர் செய்யப்பட்டன. தற்போது அணு மின்நிலையத்தை சீர்செய்யும் பணியில் 300 பொறியியலாளர்கள் இரவு-பகலாக வேலையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அணு உலைகள் மீது கடல்நீரை ஊற்றி குளிர்வித்தனர். இதனால் அங்கிருந்து வெளியேறும் கதிர்வீச்சின் அளவு பாதியாக குறைந்து விட்டது என்றும் ஆபத்தான நிலை மாறி விட்டது என்றும் அணுசக்திக் கட்டுப்பாடு குழுத் தலைவர் கிரேகோரி ஜேக்கோ கூறினார்.

சர்வதேச அணுசக்தி கட்டுப்பாடு குழுவின் மூத்த அதிகாரி கிரகாம் ஆட்ரூ கூறுகையில், ஜப்பான் அணு உலை பாதிப்பு நாளுக்கு நாள் குறைந்து வருகின்றது. அங்குள்ள நிலைமையை மிகவும் உன்னிப்பாக கவனித்து வருகிறோம் என்றார்.

**உணவுப் பொருளில் கதிர்வீச்சு தாக்குதல்**

அணு மின்நிலையப் பகுதிகளில் சேமித்து வைக்கப்பட்டு இருந்த காய்கறிகள் , உணவுப் பொருட்கள் கதிர்வீச்சால் பாதிக்கப்பட்டு இருப்பதாக தெரிய வந்திருக்கிறது. அவற்றை மக்கள் பயன்பாட்டுக்கு அனுப்பக் கூடாது என்று அதிகாரிகள் தடைவிதித்து இருக்கிறார்கள். அங்குள்ள பால் உற்பத்தி நிலையத்தில் இருந்து வெளி இடங்களுக்கு பால் விநியோகிக்கக்கூடாது என்றும் அறிவுரை வழங்கி இருக்கிறார்கள்.

ஜப்பானில் உள்ள நிலமையைப் பற்றி உலக சுகாதார நிறுவன செய்தி தொடர்பாளர் பீட்டர் கார்டிங்கிலி கூறுகையில், ஜப்பானில், பூமி அதிர்ச்சியாலும் சுனாமியாலும் இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். கதிர்வீச்சால் பாதிக்கப்பட்ட பகுதியில் உணவுப் பிரச்சினை ஏற்பட்டு இருக்கிறது. இதற்கு தேவையான உதவிகளை வழங்குவோம் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# ஏமன் நாட்டில் அமைச்சரவை கலைப்பு

(சனா)

ஏமன் நாட்டின் ஜனாதிபதிக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி தீவிரமடைந்ததையடுத்து ஜனாதிபதி அலி அப்துல்லா சலே தனது அமைச்சரவையை கலைத்துள்ளார். இராணுவ உயரதிகாரிகளையும் பதவி விலகுமாறு கூறியுள்ளார்.

ஏமன் நாட்டில் கடந்த ஜனவரி மாதம் முதல் ஜனாதிபதி அலி- அப்துல்லா சலேவுக்கு எதிராக மக்கள் புரட்சி செய்து வருகின்றனர். இதனால் ஏற்பட்ட வன்முறையில் 80 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். ஜனாதிபதிக்கு அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் கண்டனம் தெரிவித்துள்ளது.


இந்நிலையில் சனா பல்கலையில் நடந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய ஜனாதிபதி சலே, தனது மந்திரிசபையை கலைப்பதாகவும் இராணுவ உயரதிகாரிகளை பதவி விலகச் செய்யுமாறு வலியுறுத்தியுள்ளார். முன்னதாக தனது ஜனாதிபதி பதவியையும் இராஜினாமா செய்துள்ளார். (ஸ்ரீ-2)

# கேணல் கடாபியின் மகன் பலி!!! அரபு நாட்டு ஊடகங்கள் தகவல்

(டிரிபோலி)


லிபிய ஜனாதிபதி கடாபியின் ஆதிக்கத்தை ஒடுக்க அமெரிக்க கூட்டுப்படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இதற்கிடையில் கடந்த 19 ஆம் திகதி லிபிய விமானப்படை விமானம் ஒன்று கடாபி தங்கியிருக்கும் மாளிகையின் வளாகத்தில் மோதியதில் கடாபியின் மகன் காமிஸ் கடாபி படுகாயமடைந்தார். தீக்காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த காமிஸ் கடாபி சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாக அரபு நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)




# லிபியாவை தொடர்ந்து சிரியாவிலும் கலவரம்

## கட்டடங்கள் தீ வைப்பு



(தேரா)

கடந்த பெப்ரவரி மாதம் துனிசியாவிலும் அதைத் தொடர்ந்து எகிப்திலும் ஆட்சியாளர்களுக்கு எதிராக கலவரம் மூண்டது.

அவை முடிவுக்கு வந்த நிலையில் லிபியாவில் ஜனாதிபதி கடாபிக்கு எதிராக கலவரம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அதன் பக்கத்து நாடான சிரியாவிலும் போராட்டம் வெடித்துள்ளது. அங்கு பாத் கட்சியைச் சேர்ந்த பஷார் அல்-ஆசாத் கடந்த 50 ஆண்டுகளாக ஜனாதிபதியாக பதவி வகித்து வருகிறார்.மேலும் அங்கு 48 ஆண்டுகளாக அவசர சட்டம் அமுலில் இருந்து வருகிறது. அதனால் ஜனாதிபதி ஆசாத்துக்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இதைத் தொடர்ந்து அவர் பதவி விலக வலியுறுத்தி பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் போராட்டம் கலவரமாக மாறியுள்ளது. அங்குள்ள தேராநகர வீதிகளில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தினர். பதிலுக்கு அவர்களை மக்கள் தாக்கினர். அச்சம்பவத்தில் 4 பேர் உயிரிழந்தனர்.

இதையடுத்து கலவரம் வலுவடைந்தது. நேற்று முன்தினம் 3 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் தேரா நகருக்கு வரும் வீதிகள் மூடப்பட்டன. பாதுகாப்பு பணியில் பொலிஸாருடன் இராணுவமும் ஈடுபடுத்தப்பட்டது.


இதைத் தொடர்ந்து தேரா நகரின் மீது இராணுவ ஹெலிகொப்டர்கள் பறந்தபடி போராட்டக்காரர்களின் நடவடிக்கையை கண்காணித்தது. இதற்கிடையே போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தி கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர். அதில் ஒருவர் பலியானார். பலர் காயம் அடைந்தனர். அதனால் ஆத்திரமடைந்த அவர்கள் பாத் கட்சி அலுவலகத்துக்கு தீ வைத்தனர்.

மேலும் ஜனாதிபதி ஆசாத்தின் உறவினர்களுக்கு சொந்தமான 2 தொலைபேசி நிறுவனங்களுக்கும் தீ வைத்தனர். போராட்டம் வலுவடைந்துள்ள நிலையில் தேரா நகரில் இயங்கும் இன்டர்நெட் உள்ளிட்ட தகவல் தொடர்பு நிலையங்களின் செயல்பாடுகள் முடக்கப்பட்டுள்ளன.

மின்சாரம் நிறுத்தப்பட்டது. மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டது. அவர்கள் வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கின்றனர். இதற்கிடையே போராட்டத்தை கட்டுக்குள் கொண்டுவர சிரிய அரசு மேற்கொண்டு வருகிறது. (ஸ்ரீ-2)

# பாகிஸ்தான் நிலக்கரி சுரங்கத்தில் வெடிவிபத்து

## 52 பேர் பலி



பாகிஸ்தானில் நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 52 பேர் பலியாகினர்.

பாகிஸ்தானின் தென்மேற்கு மாகாணமான பலுசிஸ்தான் குவெட்டா ஆகிய மாகா ணங்களில் ஏராளமான நிலக்கரி சுரங்கங்கள் உள்ளன. இதில் குவெட்டாவில் உள்ள ஒரு நிலக்கரிச்சுரங்கத்தில் 200 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தனர். இதில் 100 தொழிலாளர்கள் சுமார் 4 ஆயிரம் அடி ஆழத்தில் (600 மீற்றர்) பணியாற்றச் சென்றனர். அப்போது விஷ வாயு தாக்கியதில் நிலக்கரி சுரங்கம் வெடித்தது.

இதில் பணியாற்றிக் கொண்டிருந்த தொழிலாளர்களுக்கு மூச்சு திணறல் ஏற்படவே, சுரங்கத்தில் அசம்பாவிதம் ஏற்பட்டதை தெரிவிக்கும் எச்சரிக்கை மணி ஒலித்தது. உடனடியாக மீட்பு குழுவினர் விரைந்து சுரங்கத்தில் சிக்கியவர்களை மீட்டனர்.

இதில் 24 பேரின் உடல்கள் மீட்கப்பட்டதாகவும் மேலும் 52 க்கும் மேற்பட்டோர் பலியாகியிருக்கலாம் என சுரங்கத்துறை ஆய்வாளர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# ஜப்பான் மீண்டும் புத்துயிர்பெற ஐந்து ஆண்டுகள் எடுக்கும்

## உலக வங்கி தெரிவிப்பு

சுனாமியால் சின்னாபின்னமாகிப்போன ஜப்பான் மீண்டும் புத்துயிர்பெற 5 ஆண்டுகள் ஆகும் என உலகவங்கி தெரிவித்துள்ளது.

ஜப்பானில் சென்டாய், புகுஷிமா ஆகிய மாகாணங்களில் கடந்த 11 ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பத்தினால் சுனாமி தாக்கியது. 4 க்கும் மேற்பட்ட அணு உலைகள் வெடித்துச் சிதறின. இந்த கோரசம்பவத்தால் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பலியாகியுள்ளனர்.

இந்நிலையில் சுனாமியால் பாதித்த பகுதிகளை ஆய்வுசெய்த உலகவங்கி ஜப்பானின் பொருளாதார வளர்ச்சியில் 0.5 அளவுக்கு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

ஏராளமான கட்டடங்கள் மற்றும் சாலைகள் அணு உலைகள் சேதமடைந்துள்ளதால் இவற்றின் மதிப்பு 235 பில்லியன் டொலர்கள் ஆகும். இவற்றினை சீரமைத்து உட்கட்டமைப்புக்களை மேற்கொள்ள 5 ஆண்டுகள் ஆகும்.

ஏற்கனவே 33 மில்லியன் டொலர் அளவுக்கு தனியார் அமைப்பு வாயிலாகவும் ஜப்பானின் பட்ஜெட்டில் 12 மில்லியன் டொலர் அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்து காப்புறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த பாதிப்பால் மின்சாதன மற்றும் மின்னணு பொருட்கள் உற்பத்தியில்தான் பெரிதும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கிழக்கு ஆசிய நாடுகளுக்கு மேற்கொள்ளப்படும் ஏற்றுமதியும் வீழ்ச்சியடைந்துள்ளது. இவற்றை மீண்டும் செயல்படுத்த தகுந்த நடவடிக்கை எடுக்க ஜப்பான் அரசு தீவிரம் காட்டிவருகிறது.

முன்னதாக உலகப்போரின் போது ஏற்பட்ட பாதிப்பை இந்த சுனாமி தாக்கியுள்ளதாக பிரதமர் நெட்டோகான் குறிப்பிட்டிருந்தார். அந்தளவுக்கு பாதிப்பு கடுமையாக உள்ளதால் இவற்றை புனரமைக்க 5 ஆண்டுகள் வரை கால அவசாசம் பிடிக்கும் என உலக வங்கி தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் எந்த விசயமும் காரணம் இன்றி தோன்றுவதில்லை.

- ஸ்டோவ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# கிழக்கு முதலமைச்சரால் அச்சுறுத்தல்; கூட்டமைப்பு எம்.பி. பொலிஸில் புகார்

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தனக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்ததாக மட்டக் களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோ கேஸ்வரன் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் எழுத்துமூலம் புகாரிட்டுள் ளார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித் ததாவது,

கடந்த மார்ச் 20ஆம் திகதி கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தனது கார் கதவுக் கண் ணாடியை கீழ் இறக்கி என்னை சுடுவ தாக சைகைமூலம் எச்சரிக்கை விடுத்தார்.

தேர்தல் காலத்திலும் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் எனக்கு எச்சரிக்கை விடுத்ததுடன் எமது மாமாங் கம் பிரதேச தேர்தல் அலுவலகம் முதல மைச்சர் தலைமையில் வந்த ஒரு குழு வினரால் உடைக்கப்பட்டது. இது குறித்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தாக அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

# லிபிய நாட்டு மக்களை கொன்று விடாதீர்கள்

லிபிய அதிபர் கடாபியின் சர்வாதிகாரத் திற்கு எதிராக மேற்குலக நாடுகள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

லிபிய நாட்டில் கடாபியின் சர்வாதிகாரத் தால் மக்கள் பெரும் பாதிப்பை அனுபவித்து வருகின்றனர்.

எனவே கடாபியின் கொடூர ஆட்சியிலிருந்து லிபிய நாட்டு மக்களை மீட்கவேண்டும் என்ற அடிப்படையிலேயே அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் கூட்டாக லிபியா மீது தாக்குதல் நடத்தி வருகின்றன.

மேற்குலக நாடுகள் நடத்திவரும் தாக்குத லுக்கு உலக அரங்கில் ஆதரவும், எதிர்ப்பும் இருக் கின்ற போதிலும் தாக்குதலுக்கான அனுமதி யை ஐ.நா பாதுகாப்புப் பேரவை வழங்கியுள் ளது என்ற சான்றை தாக்குதலில் ஈடுபட்டு வரும் நாடுகள் முன்னிலைப்படுத்தி வருகின்றன.

இந்நிலையில் லிபியா மீது நடத்தப்படும் தாக்குதல் சரியானதா? முறையானதா? என்ற வாதப் பிரதிவாதங்களுக்கு அப்பால், லிபியா மீது தாக்குதல் நடத்தும் நாடுகளுக்கும் எதிர்த் தாக்குதல் புரியும் அதிபர் கடாபிக்கும் மிக முக்கியமான தார்மிகப் பொறுப்பு உண்டு. அத் தார்மிகப் பொறுப்பு எதுவெனில் அந் நாட்டு குடி மக்களை பாதுகாப்பதாகும்.

கடாபியின் கொடூர ஆட்சியில் இருந்து மக் களை மீட்டெடுப்பதற்கான தாக்குதலை நடத்து வதாகக் கூறும் மேற்குலக நாடுகளின் தாக்கு தலில் லிபிய நாட்டுக் குடிமக்கள் கொல்லப்படு வார்கள் ஆயின்– அவர்களின் சொத்துக்கள் நாசம் செய்யப்படும் ஆயின் தாக்குதல் அர்த்த மற்றதாகிவிடும்.

அதேவேளை லிபியாவை தாக்கும் நாடுக ளின் உள்நோக்கம் வேறுவிதம் என்ற விமர் சிப்பும் ஏற்படும்.

அதேநேரம் லிபியாவில் போர் உக்கிரமடை வதைத் தவிர்ப்பதற்கு தாக்குதல் நடத்தும் மேற்குலக நாடுகள் உரிய நடவடிக்கைகளை எடுப்பது கட்டாயமானதாகும்.

அதில் ஒன்று, இரு தரப்பும் யுத்தநிறுத்தத் தைக் கடைப்பிடிக்கவும் அதன் மூலம் லிபியா வின் சர்வாதிகார ஆட்சியை அமைதியான முறையில் அடக்குவதும் ஆகும்.

இது மேற்குலகின் பணியாக இருக்கும் அதேவேளை லிபிய அதிபர் கேணல் கடாபி போதும் என்ற மன நிறைவோடு சர்வாதிகாரத் தை முடித்து ஓய்வு எடுத்துக்கொள்ளவேண் டும்.

இல்லையேல் லிபிய நாடு போர்க் கொடு ரத்தில் பேரழிவுகளைச் சந்திப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

# புல்மோட்டையில் அதிரடிப் படையினரால் வெடிபொருள் மற்றும் ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

புல்மோட்டைப் பிரதேசத்தில் இது வரை இனம் காணப்படாத மர்ம வெடி பொருள் மற்றும் ஆயுதங்கள் என்ப வற்றை விசேட அதிரடிப்படையினர் கண்டுபிடித்துள்ளனர்.

புல்மோட்டையை அண்டிய வனப் பிரதேசத்தில் வெடிபொருள் பொதி மற்றும் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டி ருப்பதாக விசேட அதிரடிப்படையினரு க்குக் கிடைத்த தகவலொன்றினையடு த்து அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்போது பதினொரு கைக் குண்டுகள் பிற ஆயுதங்கள் அடங் கலாக மர்ம வெடிபொருள் அடங்கிய பொதியொன்று விசேட அதிரடிப்படை யினால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அங்கு கைப்பற்றப்பட்ட மர்ம வெடி பொருள் இதுவரை கண்டறியப்படாத, இனம் காணப்படாத ரக வெடிபொருள் என்பதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

கண்டெடுக்கப்பட்ட ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள் தொடர்பான மேலதிக விசாரணைகள் புல்மோட்டைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின் றன. (ஸ்ரீ-2)

## நேர்முகப் பரீட்சையில் தோற்றாதவர்களுக்கு

யாழ்.மாவட்ட திடீர் மரண விசார ணை அதிகாரிகளைத் தெரிவு செய்வ தற்கான நேர்முகப் பரீட்சை கடந்த 21ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலகத் தில் இடம்பெற்றது.

இந்த நேர்முகப் பரீட்சையில் சமூக மளிக்கத் தவறியவர்கள் எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்திற்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள் ளது. (ந-6)

## ஏப்ரல் முதல் அரசஊழியர்களிடம் வருமானவரி அறவீடு

எதிர்வரும் ஏப்ரல் மாதம் தொடக்கம் அரச ஊழியர்களிடம் வருமானவரி அறவிடப்படவுள்ளது.

வரவு – செலவுத்திட்டத்தில் அறி வித்தபடி சகல கொடுப்பனவுகளுடன் ரூ. 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட சம்பளம் பெறும் சகல அரச ஊழியர்களும் வரு மானவரி செலுத்த வேண்டியுள்ளது.

கடந்த 1978 ஆம் ஆண்டு முதல் அரச ஊழியர்களது வருமானவரி நீக்கப்பட்டிருந்தது. 33 வருடங்களின் பின் மீண்டும் வருமான வரி செலுத்தும் நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



எந்த ஒரு சக்தியையும் புதிதாக உண்டாக்க முடியாது. ஏற்கனவே உள்ள சக்தியைத்தான் வேறு திசைக்கு நாம் திருப்பிவிட முடியும். எனவே நமது கைகளில் ஏற்கனவே உள்ள மாபெரும் ஆற்றல்களை அடக்கி ஆள நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அவற்றை மனதின் வலி மையைக் கொண்டு வெறும் மிருக சக்தியாக இருப் பதற்கு பதிலாக, ஆன்மீகச் சக்தியாக இருக்கச் செய். பிரம்மச்சரியம் தான் எல்லா, ஒழுக்கங்களுக்கும், எல்லா மதங்களுக்கும் அடித்தளமாக விளங்கிறது என்பது இதனின்று தெளிவாகிறது. நமது சொந்த மனப்பான்மைதான் நமக்கு ஏற் றாற்போல் உலகத்தைத் தோன்றும் படி செய்கிறது. நமது எண்ணங்களே பொருட்களை அழகு பொருந்தியவை ஆக்குகின்றன. நமது எண்ணங்களே பொருட்களை அவலட்சணமாக்குகின்றன. இந்த உலகம் முழுவதும் நமது சொந்த மனதிலேயே அடங்கியிருக்கிறது. எல்லாவற்றையும் சரியான முறையில் புரிந்துகொள்ளக் கற்றுக்கொள்.

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

# இனி "நான்", "தான்" வேண்டாம் (மத்20:17–28)

செபதேயுவின் மனைவி இயேசு விடம் வந்து தம் மக்கள் இருவருக்கும் விண்ணக இறையாட்சியில் உயர் பதவி வேண்டிய போது இயேசு கேட்ட கேள்வி, ''நான் குடிக்கப் போகும் துன்பக் கிண்ணத்தில் உங்களால் குடிக்க இயலுமா?'' இன்றைய நற்செய்தி எமக்கு விளக்குகின்றது. யூதர்களின் நம்பிக்கையின்படி கிண்ணத்தைப் பகிர்வது என்பது துன்பங்களைப் பகிர் வதற்குச் சமம். இயேசு தம் சீடர்களிடம் தமது பாடுகளைப் பகிர்வதற்கு அவர்கள் ஆயத்தமா? என்று வினவுகின்றார். தாங் கள் சொல்வது என்னவென்று உணரா மலே அவர்களும், 'ஆம்' என்கின்ற னர். இயேசுவோ அவர்களின் எதிர் கால பணிவாழ்வை மனதில் கொண்டு, 'ஆம்' என் கிண்ணத்தில் நீங்கள் குடிப்பீர்கள் என்கிறார்.

யாக்கோப்பும், யோவானும் இயேசு வுடன் அப்பத்தையும் துன்பக்கிண் ணத்தையும் பகிர்ந்த நல்ல சீடர்கள். அவரது அன்னையும், ஆசிர்வாதத் தையும் பகிர்ந்து கொண்டனர். அது போலவே அவரது பாடுகளிலும், துன்ப ங்களிலும் பங்கெடுத்தனர். உறவுகள் அப் படித்தான் இருக்க வேண்டும். இன்பத் திலும், துன்பங்களிலும் பங்கு கொள் வது தான் நல்ல உறவு. இன்று நமது உறவுகளை ஆய்வு செய்து நாம் துன்பக்கிண்ணத்திலும் குடிக்க தயாராக இருக்கின்றோமா? என்று நம்மையே கேட்டுக் கொள்வோம். இங்கே இயேசு எவருக்கும் "தான்" "நான்" என்ற அகந்தை இருக்கக் கூடாது. மாறாக இயேசு அனை வருக்கும் தாழ்ச்சி என்கிற புண்ணிய த்தைப் படிப்பிக்கின்றார்.

நாம் எப்போதும் அடுத்தவர்களைவிட நல்லவர்கள் என்ற தீர்ப்பை நமதாக்கி எந்த சூழ்நிலையிலும் பிறரை மதித்து பெருந்தன்மையுடனும் பணிவுடனும் வாழ முயற்சிப்போம். இயேசுவைப் பின்செல்லும் நாமும் அவரைப் போல மக்களுக்குப் பணிசெய்வதில் ஈடுபடும்போது மக்கள் கடவுளின் அன்பை அனுபவித்து அறிந்து கொள் வார்கள். எனவே, இறையாட்சியில் நாம் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்னும் முறை யற்ற வேண்டுகோளை இயேசுவிடம் கொண்டுசெல்வதே முறையல்ல என் பதை இயேசுவின் வார்த்தைகள் காட் டுகின்றன. இயேசுவைப் பின் தொடரு வோர் தொண்டு ஆற்றுவதிலும் பிற ருக்கு அன்புகாட்டிவாழ்வதிலும் நிலைத் திருக்க அழைக்கப்படுகிறார்கள். கடவு ளாட்சியின் பொருட்டு நாங்கள் துன் பத்தையும் தாங்கிக்கொள்கின்ற மன நிலையை உருவாக்குவோம்.

ம. பிரான்சிஸ்க்,
கத்தோலிக்க சுதந்திர,
பத்திரிகையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 - ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

# துளித்துளியாய்...



### அப்ரிடி முட்டாள்

அவுஸ்திரேலிய அணி லீக் சுற்று ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியிடம் தோல்வி அடைந்தது. இந்த ஆட்டத்தில் அப்ரிடியின் செயற்பாடு சரியில்லை என்று அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் இயன் செப்பல் தெரிவித்துள்ளார். அவர் கூறுகையில், ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தும் போதும் அப்ரிடி களத்தில் நடுவில் நின்று கைகளை உயர்த்தி ஆரவாரம் செய்கிறார். இது அவரது அணி வீரர்களையே எரிச்சலூட்டும். ஏனெனில் கிரிக்கெட் கூட்டு ஆட்டம். ஒவ்வொரு வீரருக்கும் இதில் பங்கு இருக்கிறது. ஆனால் எல்லாம் தான் சாதித்தது போல் அப்ரிடியின் செய்கை உள்ளது. மனநிலை சரியில்லாத ஒருவரை அணிக்கு தலைவராக்கினால் இதுபோன்றசெய்கைகள் தான் நடக்கும்.

அவுஸ்திரேலிய அணியுடனான போட்டியில் அவர் நடந்து கொண்ட விதம் முட்டாள்தனமாகவும் இருந்தது. என்னைப் பொறுத்தவரை அணித்தலைவர் பதவிக்கு அவர் தகுதி இல்லை. வெறித்தனமான அணியாக இருந்தால்தான் அப்ரிடி போன்ற ஒருவர் அணித் தலைவராக நீடிக்க முடியும் என்று சரமாரியாக விமர்சித்துள்ளார்.

### சேவாக்கின் நியூமராலஜி சட்டை

போட்டியின் போது சேவாக் அணியும் சட்டையின் பின்புறம் 44 என்ற எண் இருக்கும். தற்போது அவரது சட்டையின் பின்புறம் எந்த எண்ணும் இல்லை. நியூமராலஜி பார்த்து நம்பர் இல்லாத சட்டையை அவர் அணிந்துள்ளதாக கூறப்படுகிறது. இந்த உலகக் கிண்ண 5 போட்டிகளில் அவர் 327 ஓட்டங்கள் விளாசியுள்ளார். சராசரியாக 65.40 ஓட்டங்கள் எடுத்துள்ளார். நியூமராலஜி சட்டை அவருக்கு அதிர்ஷ்டத்தை கொடுத்ததா எனத் தெரியவில்லை.

### சுப்பர் வரவேற்பு

ஐ.சி.சி. தலைவர் சரத்பவார் கூறுகையில், உலகக் கிண்ண கிரிக்கெட்டுக்கு நல்ல வரவேற்பு இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இதனால் 50 ஓவர் கிரிக்கெட் மீண்டும் எழுச்சி பெறும். பல ஆட்டங்களை மக்கள் ஆர்வமுடன் பார்த்து மகிழ்ந்துள்ளனர். டிவி ரேட்டிங் பட்டியலும் இதைத்தான் தெரிவிக்கின்றன. இனி முக்கிய ஆட்டங்களில் ரசிகர்களின் கவனம் இன்னும் அதிகரிக்கும் என்று தெரிவித்தார்.

### 48 ஆயிரம் ரிக்கெட்டுகள் காலி

இந்தியா-அவுஸ்திரேலியா மோதும் காலிறுதி போட்டி அகமதாபாத்தில் நடக்கிறது. 48 ஆயிரம் பேர் அமரும் வகையில் உள்ள இந்த மைதானத்தில் அனைத்து ரிக்கெட்டுகளும் விற்று தீர்ந்துவிட்டன. நேற்று முன்தினம் ரிக்கெட் விற்பனை தொடங்கிய ஒரு மணி நேரத்திற்குள்ளேயே அனைத்து ரிக்கெட்டுகளும் காலியாகிவிட்டது. இதனால் சுமார் 2 கி.மீ. தூரம் வரிசையில் வெகுநேரம் காத்திருந்த ரசிகர்கள் பலர் ஆத்திரமடைந்து ரகளையில் ஈடுபட்டனர். அவர்களை பொலிஸார் லேசான தடியடி நடத்தி கலைத்தனர்.

### மகளுக்கு கொலிங்வூட் பதில்

மேற்கிந்தியத்தீவுகளுடன் நடந்த போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்றது. போட்டிக்கு முந்தைய நாள் இங்கிலாந்து வீரர்போல் கொலிங்வூட்டுக்கு அவரது மகள்கள் வித்தியாசமான கோரிக்கை விடுத்தனர். அப்பா தயவு செய்து இந்த போட்டியில் தோற்றுவிடுங்கள். அப்போது தான் நீங்கள் உடனே வீடு திரும்புவீர்கள் எனக் கூறினர். ஆனால் இந்த போட்டியில் வெற்றி பெற்றால் எனக்கு அதிக பணம் கிடைக்கும். உங்களுக்கு அதிக பேபி பொம்மைகள் வாங்க முடியும் என தான் பதிலளித்ததாக கொலிங்வூட் கூறியுள்ளார்.

### சாதனைக் களத்தில் சாதனை கிட்டுமா?

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் டெண்டுல்கர் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான சென்னை போட்டியில் சாதனை நிகழ்த்துவார் என எதிர்பார்க்கபட்டது. ஆனால் அவர் 2 ஓட்டங்களுடன் வெளியேறி அதிர்ச்சியளித்தார்.

சர்வதேச போட்டிகளில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் அவர் இதுவரை 99 சதங்கள் விளாசியுள்ளார். 100 சதங்களை கடக்க அவருக்கு இன்னும் ஒரு சதம்தான் தேவை.

இதை சாதனைக் களமான அகமதாபாத்தில் அடிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மைதானத்தில் 1987இல் கவாஸ்கர் டெஸ்ட் போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங்களை கடந்து சாதனை படைத்தார். அதிலிருந்து 17 வருடம் கழித்து கபில்தேவ் அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்தியவர் என்ற சாதனை நிகழ்த்தினார். தற்போது 17 வருடங்களுக்கு பின்னர் மீண்டும் சச்சின் சாதனை படைக்க ஒரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

## சூடுபிடிக்கிறது சூதாட்டம்

### 1000 கட்டினால்; 3000 பெறலாம்

இம்முறை உலகக் கிண்ணத்தை இந்திய அணிதான் வெல்லும் என சூதாட்டக்காரர்கள் தமது பணியை ஆரம்பித்துள்ளனர்.

இந்த சூதாட்டங்கள் இணையத் தளத்தில் தான் பரபரப்பாக நடக்கிறது. லேடு புரோக்ஸ் என்ற இணையத்தளம் இந்திய அணியே சம்பியன் பட்டம் வெல்லும் எனக் கணித்துள்ளது.


இதற்கு மையமாக வைத்து ரூபா ஆயிரம் கட்டினால் ரூபா 3 ஆயிரம் கிடைக்கும் என அந்த இணையத்தளம் அறிவித்துள்ளது.

மற்றொரு இணையத்தளம் வில்லியம் ஹெய்லும் இந்திய அணியே உலகக்கிண்ணம் வெல்லும் என கூறியுள்ளது. அந்த இணையத் தளம் இந்திய அணிக்கு அடுத்தபடியாக தென்னாபிரிக்கா மீது குறிவைத்துள்ளது.

பெட் 365 என்ற இணையத் தளம் தென்னாபிரிக்காவுக்கே முன்னுரிமை கொடுத்துள்ளது. இந்தியாவுக்கு 2 ஆவது இடம் தான் கொடுத்துள்ளது. மேலும் இந்திய - பாகிஸ்தான் அணிகள் அரையிறுதியில் மோதும் எனவும் தெரிவித்துள்ளன.

## அணித்தலைவர் பதவியிலிருந்து பொன்டிங்கை நீக்க முடிவு!

ஆஸஷ் டெஸ்ட் தொடரை இழந்ததுமே அணித்தலைவர் பதவியில் இருந்த பொன்டிங் நீக்கப்படுவது ஏறக்குறைய உறுதியானது. எனினும் உலகக் கிண்ண தொடர் சமயத்தில் அவரை நீக்கினால் அது அணியில் பாதிப்பை ஏற்படுத்திவிடும் என அவுஸ்திரேலிய நிர்வாகம் கருதியது.



இந்நிலையில் உலகக் கிண்ணத் தொடரில் பொன்டிங்கின் செயற்பாடு படுமோசமாக அமைந்துள்ளது. சிம்பாவேக்கு எதிரான ஆட்டத்தில் ரன்-அவுட்டான விரக்தியில் டி.வியை உடைத்தார். பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் பந்து மட்டையில் பட்டபோதும் ஆட்டமிழப்பு இல்லையென களத்தில் வாக்குவாதம் செய்தார். கனடாவுக்கு எதிரான ஆட்டத்தில் சக அணி வீரர் ஸ்டீவன்சிமித்திடமே பிரச்சினை ஏற்படுத்தினார்.

இந்த செயல்களால் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அதிருப்தியடைந்துள்ளது. இந்நிலையில் அணியின் எதிர்காலத்தை கணக்கில் கொண்டு முக்கிய மாற்றம் செய்ய வேண்டியுள்ளது. இதனால் பொன்டிங்கிடமிருந்து அணித்தலைவர் பதவி பறிக்கப்படும் என அணியின் முக்கிய நிர்வாகி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## நொக்-அவுட் சுற்று கதாநாயகன்

நொக்-அவுட் சுற்றான காலிறுதி மற்றும் அரையிறுதி சுற்றுகள் நாளை முதல் ஆரம்பமாகின்றன. இதுவரை நடந்த நொக்-அவுட் சுற்றுகளில் கிரிக்கெட் ஜாம்பவான்களான கபில்தேவ், காவஸ்கர், இம்ரான்கான், மியான்தத், டிராவிட், கும்ப்ளே, ஸ்டீவ்வோ, அலன்போர்டர், டீன்ஜோன்ஸ், மார்ட்டின்குரோவ், ரணதுங்கா, மைக்கெல் ஹோல்டிங், டொனால்ட் ஆகியோர் இதுவரை ஆட்டநாயகன் விருது வாங்கவில்லை.

தற்போதைய நாயகர்களான டெண்டுல்கர், கலிஸ், முரளிதரன், விக்டோரி, அப்ரிடி, சேவாக் ஆகியோருக்கு இந்த அதிர்ஷ்டம் கிடைக்கவில்லை. 1983இல் இருந்து பார்க்கும் அணித்தலை வர்களில் பொன்டிங் மட்டுமே இந்த விருதை பெறும் அதிர்ஷ்டத்தை பெற்றுள்ளார். மற்றபடி ஒவ்வொரு நாடுவாரியாக நொக்-அவுட்சுற்று கதாநாயகர்கள் விபரம்:

| அணி | போட்டி | வெற்றி | தோல்வி | சமநிலை | விருது |
|---|---|---|---|---|---|
| இந்தியா | 7 | 4 | 3 | 0 | அமர்நாத் (2), சித்து, கங்குலி |
| அவுஸ்திரேலியா | 13 | 10 | 2 | 1 | கில்மோர், மெக்டெர்மூட், பூன், வோர்ன் (3), சைமண்ட்ஸ், பொன்டிங், மெக்ராத், கில்கிறிஸ்ட், மார்க்வோ |
| பாகிஸ்தான் | 8 | 3 | 5 | 0 | இன்சமாம், அக்ரம், அக்தர் |
| மேற்கிந்தியத் தீவுகள் | 8 | 6 | 2 | 0 | காளிச்சரன், கிளவ் லொயிட், விவியன் ரிச்சர்ட்ஸ் (2), கரீனிட்ச், லாரா |
| இலங்கை | 6 | 4 | 2 | 0 | ஜெயசூர்யா, டீ சில்வா (2) ஜெயவர்த்தனா |
| நியூசிலாந்து | 6 | 0 | 0 | 0 | இல்லை |
| இங்கிலாந்து | 9 | 3 | 6 | 0 | கூச் (2), கிக் |
| தென்னாபிரிக்கா | 4 | 0 | 3 | 1 | இல்லை |
| கென்யா | 1 | 0 | 1 | 0 | இல்லை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரையிறுதிக்கு முன்னேறுமா பாகிஸ்தான்?

# மேற்கிந்தியத்தீவுகள் அணியுடன் இன்று சவால்

(மிர்பூர்)

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் நொக்- அவுட் சுற்றுக்களில் காலிறுதி ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றன.

இதில் இன்று மிர்பூரில் நடைபெறும் முதலாவது காலிறுதிப் போட்டியில் பாகிஸ்தான்- மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதுகின்றன.


சுழலில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சிக்குமா அல்லது ஹயில் புயலில் பாகிஸ்தான் அணி சிக்குமா என்ற எதிர்பார்ப்புக் காணப்படுகின்றது.

பத்தாவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நொக்- அவுட் (விலகல்) சுற்றுப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றது.

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் இன்று நடைபெறும் முதலாவது காலிறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணி மேற்கிந்தியத் தீவுகள் அணியைச் சந்திக்கிறது.

இத் தொடர் ஆரம்பமாகும் முன் சூதாட்டச் சர்ச்சையில் பாகிஸ்தான் அணி நிலை குலைந்தது. இதனால் மன ரீதியாகப் பாதிக்கப்பட்டு இருந்த பாகிஸ்தான் வீரர்களுக்கு அணித்தலைவர் அப்ரிடியின் திறமையான வழிகாட்டுதல் பெரும் முன்னேற்றத்தைக் கொடுத்துள்ளது.

உலகக் கிண்ண அரங்கில் தொடர்ச்சியாக 34 போட்டிகளில் தோல்வியடையாமல் இருந்த நடப்புச் சம்பியன் அவுஸ்திரேலிய அணியை கடைசி லீக் போட்டியில் பாகிஸ்தான் வீழ்த்திக் காட்டியது.



துடுப்பாட்டத்தில் ஆரம்ப வீரர் மொகமட் ஹபீஸ் தொடர்ந்து சொதப்புகிறார். எனினும் உமர் அக்மல் 05 போட்டிகளில் (211) ஓட்டங்கள் குவித்துள்ளார்.

மிஸ்பா உல் ஹக் (192), யூனிஸ்கான் (172), கம்ரன் அக்மல் (141) ஆகியோர் ஆறுதல் அளிக்கின்றனர். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அணித்தலைவர் சகிட் அப்ரிடி 06 போட்டிகளில் 65 ஓட்டங்கள் மட்டும் எடுத்து ஏமாற்றம் அளிக்கின்றார்.

அத்துடன் சகலதுறை வீரர் அப்துல் ரஷாக்கும் (101) கைவிட்டார். இன்று மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக எழுச்சி பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

**அப்ரிடி பலம்**

துடுப்பாட்டத்தில் ஏமாற்றம் அளிக்கும் அதேநேரம் சுழல்பந்து வீச்சில் அப்ரிடி அசத்துகிறார். இதுவரை 17 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ள அப்ரிடி எதிரணிக்கு அச்சுறுத்துவார் என்பது உறுதி.

வேகப் பந்துவீச்சில் உமர் குல் சாதிக்கிறார். இதுவரை 13 விக்கெட்டுக்களை கைப்பற்றியுள்ள இவருடன் மொகமட் ஹபீஸ், அப்துல் ரஷாக் இணைந்து ஜொலிக்கலாம்.

**பொல்லார்ட் நம்பிக்கை**

மேற்கிந்தியத் தீவுகள் அணி இத் தொடரில் காலிறுதிக்கு தட்டுத் தடுமாறித்தான் வந்துள்ளது. துடுப்பாட்டத்தில் டேவன் சிமித் (293) கைகொடுத்து வருகிறார். பின் வரிசையில் பொல்லார்ட் (179) வான வேடிக்கை காட்டினால் பாகிஸ்தான் பாடு திண்டாட்டம்தான்.

அனுபவ ஹயில் (162), டரன் பிராவோ (139) போன்றவர்கள் சாதிக்கவேண்டி கட்டாயத்தில் உள்ளனர்.

இவர்களுடன் மூத்த வீரர்கள் சர்வான் (131), சந்தர்போல் (70) அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்த உதவவேண்டும். தவிர அணித்தலைவர் சமி, ரசேலும் ஆறுதல் தரலாம்.

**ரோச் ஆறுதல்**

மிகவும் பலவீனமாகக் காணப்பட்ட அணியின் பந்துவீச்சு கீமர் ரோச்சின்13 விக்கெட்டுக்கள் ஹட்ரிக் சாதனையால் எழுச்சி பெற்றது. டரன் சமி, அன்ரூ ரசேல் சிறப்பாகச் செயற்பட முயற்சிக்கலாம்.

இந்திய அணிக்கு எதிராக 05 விக்கெட்டுக்களை வீழ்த்திய ராம் போலுக்கு இன்றும் வாய்ப்பு வழங்கப்படலாம்.

சுழல் பந்துவீச்சில் பென், பீசோ சிறப்பாகச் செயற்படுகின்றனர்.

**யாருக்கு வாய்ப்பு?**

மேற்கிந்தியத்தீவுகள் அணியை விட, பாகிஸ்தான் வீரர்கள் ஒருங்கிணைந்து விளையாடுவது நல்ல பலனைக் கொடுக்கிறது.

தவிர, பெரிய அணிகளை சாய்த்திருக்கும் அனுபவம் இருப்பதால் பாகிஸ்தான்இன்று எளிதாக வெல்ல முயற்சிப்பார்கள். இதனால் பாகிஸ்தான் அணியை வீழ்த்த மேற்கிந்தியத் தீவுகள் வீரர்கள் மிகக் கடுமையான போராட்டதைச் சந்திக்கவேண்டியிருக்கும்.



**கடந்துவந்த பாதை...**

*பாகிஸ்தான் அணி லீக் சுற்று*

- கென்யாவுக்கு எதிராக 205 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி.
- இலங்கை அணியை 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.
- 46 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கனடாவிடம் வெற்றி.
- நியூசிலாந்து அணியிடம் 110 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்லி.
- 07 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் சிம்பாவே அணியை வென்றது.
- அவுஸ்திரேலிய அணியை 04 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

*மேற்கிந்தியத் தீவுகள் அணி*

- தென்னாபிரிக்காவுடன் 07 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் தோல்வி.
- நெதர்லாந்து அணியை 215 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.
- பங்களாதேஷ் அணிக்கு எதிராக 09 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி.
- 44 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அயர்லாந்தை வென்றது.
- இங்கிலாந்து அணியிடம் 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி.
- 80 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியாவிடம் வீழ்ந்தது.

**ஒன்பதாவது முறை**

உலகக் கிண்ண அரங்கில், மேற்கிந்தியத் தீவுகள்- பாகிஸ்தான் அணிகள் 9வது முறையாக மோதவுள்ளன. முன்னதாக மோதிய 08 போட்டிகளில் மேற்கிந்தியத் தீவுகள் 06, பாகிஸ்தான் 02 வெற்றிகண்டன. கடைசியாக 2007ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணி பாகிஸ்தான் அணியை வீழ்த்தியது.

## பலம் பலவீனம்

### பாகிஸ்தான்

| பலம் | பலவீனம் |
|---|---|
| யூனிஸ்கான், மிஸ்பா உல்ஹக்கின் பொறுப்பான ஆட்டம். உமர் அக்மலின் அதிரடி. அப்ரிடியின் ஆக்ரோஷ சுழல். | கம்ரன் அக்மலின் மோசமான விக்கெட் காப்பு. ஆரம்ப வீரர்கள் சொதப்பல். அக்தரின் மிரட்டல் இல்லாத வேகம். |

### மேற்கிந்தியத் தீவுகள்

| பலம் | பலவீனம் |
|---|---|
| டேவன் சிமித், டரன் பிராவோ, பொல்லார்ட் ஆகியோரின் அதிரடி ஆட்டம். கீமர் ரோச்சின் நேர்த்தியான பந்துவீச்சு. | ஹயிலின் மோசமான துடுப்பாட்டம், சர்வான், சந்தர்போலின் பொறுப்பில்லாத ஆட்டம். |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லிபியா மீதான தாக்குதலைக் கண்டி...

அவர் லிபியாவில் தலைமைத்துவ மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்றால் அதனை அந்த நாட்டு மக்களே மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். இதுதொடர்பில் ஆளுநர் அலவி மௌலானா தெரிவித்துள்ளதாவது,

லிபிய மக்களின் சுதந்திரத்தில் தலையிட அமெரிக்கா போன்ற ஏகாதிபத்திய நாடுகளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. ஈராக்கில் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஏகாதிபத்திய தாக்குதல் 48 நாடுகளில் தொடர்கிறது. லெபனான், யேமன் மற்றும் சகல அரபு நாடுகள் மீதும் எதிர்காலத்தில் இந்த ஏகாதிபத்தியத் தாக்குதல் மேற்கொள்ளப்படலாம் என்ற அச்சம் காணப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தமது நிபுணர்கள் குழுவை இலங்கைக்கு அனுப்பி போர்க் குற்றங்கள் குறித்து விசாரணை செய்ய முயற்சிக்கின்றார். ஆனால் விடுதலைப் புலிகள் கடந்த காலங்களில் மேற்கொண்ட மனிதவுரிமை மீறல்கள் அவர்களின் கண்களுக்கு தெரியவில்லை.

லிபியாவுக்கு எதிரான மேற்குலக நாடுகளின் படை நடவடிக்கைகளை கண்டித்து மேற் கொள்ளப்படவுள்ள போராட்டங்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நடைபெறும் ஜூம்மா தொழுகையை அடுத்து ஆரம்பிக்கப்படும் என அவர் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள்மற்றும்மனிதவுரிமைமீறல்கள் குறித்து சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என மேற்கத்தைய நாடுகள் வற்புறுத்தி வருகின்றன.

இந்நிலையில் லிபியா மீதான தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அரசாங்கம் மேற்கத்தைய நாடுகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## வடக்குக் கிழக்கு மக்களின்...

தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், 13ஆம் திருத்தச் சட்டத்திற்கு அப்பால்பட்ட அதிகாரம் தொடர்பிலான பேச்சுக்களுக்கு அவசரப்படத் தேவையில்லை.

தமிழ்த் தேசியக் கூட்மைப்பை தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகளாக அரசாங்கம் ஏற்றுக் கொண்டு நிலையான அரசியல் தீர்வுக்காக பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும்.

ஏனெனில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் அரசாங்கத்திற்கு இரண்டாம் இடத்தில் அவர்களே உள்ளனர்.

தமிழ் மக்கள் கூட்டமைப்பின் மீது நம்பிக்கை வைத்துள்ளமை இத் தேர்தலில் தெளிவாக வெளிப்பட்டுள்ளது. 13ஆவது திருத்தத்திற்கு அப்பால் சென்று அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாக பேச்சுவார்த்தைகள் அவசரமாக ஆரம்பிக்க வேண்டிய அவசியமில்லை. அதற்கு முன்பதாக பாதுகாப்பு வலயங்கள், உயர் பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட்டு மக்கள் குடியமர்த்தப்படவேண்டும்.

இடம்பெயர்ந்த மக்களை அடிப்படை வசதிகளுடன் மீளக் குடியமர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். அதேவேளை தமிழ் மக்கள் சுதந்திரமாக அச்சமின்றி வாழும் சூழ்நிலை உறுதிப்படுத்தப்படவேண்டும். இவையே அவசரமாக தீர்க்கப்படவேண்டிய விடயங்களாகும். எனவே ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவேண்டும். ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அடிப்படைவாதக் கொள்கைகள் கொண்ட கட்சிகளும் அங்கம் வகிக்கின்றன. இவற்றா-ல் கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தைகளை தடுத்துவிட முடியாது என்றும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்தார். (ந-5)

## லண்டனி...

வருடத்திற்கும் மேலாக வேலை செய்துள்ளார். பின்னர் தமது வேலையை இராஜினாமாச் செய்துவிட்டு மாணவர் விசாவில் லண்டனுக்குச் சென்றுள்ளார். சுமார் 03 மாதங்கள் அங்கு தங்கியிருந்த போதிலும் தற்போது அவரது செலிங் கோவில் பணியாற்றியமைக்கான ஆவணங்களை கையளிக்கவேண்டிய நிலையில் மீண்டும் இலங்கை திரும்பியுள்ளார். இந்நிலையிலேயே நேற்று நண்பகல் அளவில் கடத்தப்பட்டார்.

இந்த நிலையில் நேற்றுப் பிற்பகல் 03 மணியளவில் கண்கள் மற்றும் கைகள் கட்டப்பட்ட நிலையில் இவர் கல்லுண்டாய் வீதியில் வாகனம் ஒன்றிலிருந்து தள்ளி விழுத் தப்பட்டுள்ளார். ஆட்களற்ற பகுதியில் தள்ளி விடப்பட்ட அவர் ஒருவாறு மீண்டெழுந்து இப்பகுதியில் சென்ற வாகனம் ஒன்றில் பயணித்து யாழ். நகரப் பகுதியைச் சென்றடைந்துள்ளார். கண்கள் கட்டப்பட்ட நிலையில் தான் கடுமையாகத்தாக்கப்பட்டதாகவும், சிகரெட்டால்சுடப்பட்டதாகவும் லண்டனுக்கச் சென்றதற்கானகாரணம், செல்வதற்குப்பணம் வழங்கியது யார்? சென்று 3 மாதங்களில் ஏன் திரும்பி வந்தது போன்ற கேள்விகளை திரும்பத்திரும்ப கேட்டு சித்திரவதை செய்ததாக அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

## வெலிக்...

கொண்டுசெல்லப்பட்டுள்ளதுடன் இச் சம்பவம் குறித்து பொலநறுவைப்பொலிஸார்மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வன்னி இறுதிக்கட்ட போரின் போது படைத்தரப்பினிடம் சரணடைந்த போராளிகளில் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என கருதப்பட்டவர்களே வெலிக்கந்தை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். (ந-5)


கல்விமாணி (B.Ed) தெரிவு பரீட்சைக்கான வகுப்பும் வழிகாட்டி நூலும்
ஆரம்பம் 23.03.2011 புதன்
இன்று 3.30 மணிக்கு
புதன், வியாழன், வெள்ளி 3.30 - 6.30 மணிவரை யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில் (யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக) நடைபெறும்.
☼ திரு.தவசேகர் ஆசிரியரின் இப் பரீட்சைக்கான வழிகாட்டி நூலை ரூபா.200 பிரபல புத்தக நிலையங்களிலும் வகுப்பிலும்பெற்றுக்கொள்ளமுடியும்.
(அ-2787)

NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
A/L 2013
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் : 26-03-2011 சனி 8.00 மணி

நாவலர்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.
O/L Day Class
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி
O/L DAY CLASS
ஆரம்பம்: 23.03. 2011
காலை 8.30 (இன்று)
வாரம் 7 நாட்களும் வகுப்புக்கள் நடைபெறும்
S.L.E.A.S வகுப்புக்களும் நடைபெறுகின்றன. செவ்வாய், வெள்ளி 4.30 (பட்டப்படிப்புகள் கல்லூரி ஆசிரியர் குழு)
(4215)

NALIN Information Technologies Pvt Ltd
195/4, Parameswara Junction, Palaly Road, Thirunelvely.
021 222 1166 / 0777667974
எமது கணனி நிறுவனத்தில் என்றும் இல்லாத வகையில் விலைக் கழிவுடன் கணனி உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.
☼ HP Branded PC ☼ LCD /LED Monitor
☼ Assemble PC ☼ HSDPA dongle
☼ Laptop I3,I5 ☼ Hard disk
☼ Printer ☼ Ram
☼ Scanner ☼ Processor
☼ TP Link router ☼ Toners
இச் சலுகை 3 நாட்களுக்கு மட்டுமே
(C-2782)

AUTO CAR HIRE
வெள்ளை நிறமுடைய திருமண வைபவங்களிற்கு ஏற்ற கார் நாள் வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: 0215673555 /666
(3979)

MATHS CENTRE
M.M.V. Road, NELLIADY
கலை/ வர்த்தக வகுப்புக்கள்
A/L 2013 பிரிவு II
ஆரம்பம்: 23.03.2011 (புதன்கிழமை)
வழமையான ஆசிரியர் குழு
நேரம்:- காலை 7.00 மணி
(அ-2768)

STUDY IN UK
STUDY UK
✦ உங்களுக்கு O/L இல் 5 பாடங்களில் சித்தியுண்டா? சற்றுச் சிந்தியுங்கள்!
✦ இலங்கையில் பெற்றோரின் பணத்தில் கல்வியா? Uk இல் உங்கள் சுய உழைப்பில் சர்வதேசக் கல்வியா?
✦ யாழ்.மாணவர்களின் நம்பிக்கையை வென்ற நாம் உங்களின் O/L தகைமையுடன், தொழில் வாய்ப்புடன் கூடிய கல்வியை Uk இல் கற்பதற்குரிய ஒழுங்குகளை விரைவாகச் செய்து தருகின்றோம்.
✦ மொத்தச் செலவு 7 1/2 லட்சம் மட்டுமே. (College fee, Sponsor, Air ticket, P. fee)
✦ குடும்பமாகச் செல்வதற்குரிய ஏற்பாடும் செய்துதரப்படும்.
✦ 4-5 வாரத்தினுள் Uk செல்லலாம்.
✦ யாழ் மாணவர்களுக்கு விசேட புலமைப் பரிசில் திட்டங்கள்
Education in UK
தொடர்புகளுக்கு :- Sana: 0776277767, 0772105288
(4217)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org